# தமிழ்த் தென்றல்

2 8-9

ஜனவரி-பிப்ரவரி, 1949

DIGITIZED

7L
ஈ811,N47TT
N49·2.8-9
209340

நவ நாகரீகமான நகைகள்! ஒரு சிரமமுமில்லாமல்
உடனே வாங்குவதற்கு நம்பிக்கையுள்ள இடம்

★ மணி மாளிகை ★

மு. சுப்பிரமணியன் செட்டியார்,
ஆயத்த அணிகல அங்காடி,
வடக்கு ரத வீதி, :: திருநெல்வேலி.

மணமக்களுக்கும், குழந்தை பிறப்பு முதல் எல்லாச் சிறப்புகளுக்கும் வேண்டிய தங்க நகைகள், கல் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள்; வெகுமதிச் சாமான்கள் முதலியன புத்தம் புதியமாதிரிகளில் எப்பொழுதும் விற்பனைக்கு ஆயத்தமாக இருக்கின்றன. உங்கள் தேவைக்கு உடனே வந்து பார்த்து வாங்கி மகிழுங்கள்.

உத்திரவாதம் எமது T. M. S. முத்திரை.

ஆரம்பம்: **1913** :: தந்தி: அணிகலன்

கிளை: 18, கைத்தொழிற்பண்டகசாலை, திருநெல்வேலி சந்திப்பு.

Telegrams: COOPFIRE. Telephone 436

**The Co-Operative Fire & General Insurance Society Ltd.,**
**MADRAS. 1**

President: Sri. T. M. CHINNAYYA PILLAI, M. A., B. L.

Transacts
...urance of all description and Fidelity
...ntee Insurance and Motor
...icles Insurance.

. A.,
MADRAS 1

1671

# தமிழ்த் தென்றல்

ஆசிரியர்: **வே. வ. இராமசாமி**

தொட்டனைத் தூறும் மணற்கேணி; மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. —[தமிழ்மறை

கொடி–2 | திருவள்ளுவராண்டு — 1979 மார்கழி (1—1—1949) | பூ–8

உள்ளுறை

இந்தியின் விளைவு ... ... —தலையங்கம். ... ... ௩
காலத்தின் கோலம் ... ... ... ... ... ௬
கடற்கரையிலே (16) ஆனந்தரங்கர் ... —ரா. பி. சேதுப்பிள்ளை ... ௯
சித்திரச் சிலம்பு ... ... —அ. இராசகோட்டியப்பன் ௰௭
கல்வியும் படிப்பும் ... ... —ச. சோ. பாரதியார் ... ௨௧
நாகப்பனின் மறுமலர்ச்சி ... —S. K. சூரியன் ... ... ௨௭
தமிழில் எரிமலைகள் ... ... —தா. நரசிம்மன் ... ௨௯
அன்பினால் ஏற்படும் தீமைகள் —ந. புஷ்பம்மையார் ... ௩௩
நாமும் சூரிய குலமே ... —ஈ. த. இராசேசுவரியம்மையார் ௩௭
மஞ்சள் வெய்யில் ... ... —இனியன் ... ... ௩௭
சூருவளி-சிறுகதை ... ... —வை. சுப்பிரமணியன் ... ௪௭

கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே!
கவிதைகட்டுரையாளரின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர்

தமிழ்த் தென்றலில் வெளிவரும் கட்டுரை, கதை முதலியன ஆசிரியர்க்கே உரியவை. ஆசிரியர் அனுமதியின்றி எவரும் அதைத் திரும்ப வெளியிடும் உரிமையுடையராகார்.
[ஆசிரியர்.

தமிழ்த் தென்றல் அலுவலகம், விருதுநகர்.
விலை 4 அணா

## மலரன்ன மங்கையருக்கு......

சோபையும் கவர்ச்சியும் தருவது அவரின் ஆடையே. அழகுக்கும் அழகு செய்யவல்ல எம்.ஸி.எச் ஆடைகள் ஒவ்வொரு சந்தர்ப்பத் தேவைக்கும் பொருத்தமாகுமாறு எண்ணிறந்த விசித்திர கரை தலைப்பு, உடல் நவீன விநோத மாதிரிகளில் கிடைக்கின்றன.

உங்கள் பொங்கல் தேவைகளுக்கான ஏராளமான ஜவுளி ரகங்கள், சென்னையிலும் இதர முக்கிய நகரங்களிலும் உள்ள எம் எம்போரியங்களில் தயாராயுள்ளன.

**மதராஸ் கைத்தறி நெசவாளர்**
**மாகாண கூட்டுறவு சங்கம் லிமிடெட்**
"ஹாலோவேஸ் கார்டன்ஸ்"
34, பாந்தியன் ரோட், எழும்பூர் — சென்னை.

**போட்டோபிளாக்குகள்**
**சினிமாசிலைடுகள்**
**ரப்பர்ஸ்டாம்புகள்**
**செய்யுமிடம்**



**ராஜன் அண் கோ.,**
**சிவகாசி.**


# இந்தியின் விளைவு

நம் நாட்டுக்குத் தேசிய மொழி இந்தியா, இந்துஸ்தானியா என்பது இன்னம் முடிவு கட்டப்படவில்லை யென்று இந்தியப் பேரவை முதல் அமைச்சர் பண்டிதர் நேரு கூறுகிறார்; அதுவும் எந்த லிபியில் என்று யாருக்கும் தெரியாது. மேலும், "ஒரு பொது மொழியானது தானே வளரவேண்டும்; வற்புறுத்துவதில் நலன் இல்லை" யெனவும் நேரு அறிவுறுத்துகிறார். தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜரும், இந்தியைக் கட்டாயப் பாடமாக வைத்தது தவறு என்று ஒப்புக் கொண்டிருக்கிறார். இந்நிலையில், கல்வி அமைச்சர் ஏன் இன்னும் விடாப்பிடியாயிருக்கிறார் என்று புரியவில்லை. ஆரம்பத்தில் தக்காரைக் கலந்து தமிழகத்தில் இந்தி விருப்பப் பாடம் என்று போட்ட உத்தரவை,. மறுமுறையும் ஆர அமர யோசிக்காமல் கட்டாயமாக மாற்றியதினால் கண்ட பயன் என்ன?

கட்சித் தலைவர் கண்டிக்கிறார்; கட்சிக் காரர்கள் மனம் வெதும்புகின்றனர்; நடுநிலைமையாளர் அருவருக்கின்றனர்; தமிழன்பர்கள் வெறுக்கின்றனர். எதிர்க் கட்சியாளர் உடைத்தெறிவோம் என்று ஆரவாரிக்கின்றனர். நாட்டில் அமைதியே நிலவ வேண்டிய இற்றை நாளில் வீணாகத் தொல்லைக்கு இடங் கொடுப்பானேன்? எங்களுக்கு இல்லாத தமிழன்பு இந்தப் பெரியாருக்கு வந்துவிட்டதா என்று கேட்பது அமைச்சருக்கு அழகாகுமா?

காந்தியடிகளின் கொலைக்குக் காரணமாயிருந்த சக்திக்கு மரியாதை கொடுக்கிறீர்கள். அதன் தலைவர்களைக் கண்ணியமாக நடத்துகிறீர்கள். அதை ஆதரிப்போருக்கு, பத்திரிகைகள் நல்ல விளம்பரம் கொடுப்பதைப் பார்த்துக் கொண்டுதானிருக்கிறீர்கள். ஆனால் இந்தி எதிர்ப்புத் தலைவரோ, இ[illegible]யை ஒழிக்க வேண்டுமெனச் சொல்லுகிறார்; [illegible]ட்டம்

201340

என்கிறார்; தற்போதையக் கம்யூனிஸ்ட் கட்சி தப்பான வழியில் செல்வதை எடுத்துக் காட்டுகிறார்; இராட்டிரிய சேவா சங்கத்தை ஒடுக்கச் சொல்லுகிறார்; எனினும் காங்கிரஸ் கட்சியின் ஊழல்களைத் தான் வெளிச்சமாக்குகிறார். "காங்கிரஸ் ஆட்சியைக் கவிழ்க்கவோ, மந்திரிசபையை மாற்றி அமைக்கவோ ஆசையில்லை. நீங்களே யிருக்கவேண்டும்" என்று உறுதியாகக் கூறுகிறார்.

அப்படியிருந்தும் அவர் எதிர்ப்புக்குத் தக்க சமாதானங் கூறாமல், அதிகாரத்தைக்கொண்டு அடக்கி விடலாமென்று எண்ணுவது முறையாகுமா? எந்த உணர்ச்சியின் பயனாக தமிழ் நாட்டில் இன்று மந்திரி சபையினர் ஆட்சி செய்ய முடிகிறதோ அந்த உணர்ச்சியே உருவாகி வந்தவர்தானே, பெரியார் ஈ. வெ. இராமசாமி! அந்த உணர்ச்சியை ஒடுக்கிவிட்டால் அவர்களின் ஆட்சி நிலைத்து நிற்குமா? யோசித்துப் பார்க்க வேண்டும். தமிழன் உணர்ச்சியை அழிக்கக் கனவிலும் சிந்திக்காதீர்கள். முடியாது என்று அறுதியிட்டுக் கூறுகிறோம். ஆங்கில ஆட்சிக்கு விரோதமாகக் காங்கிரசார் செய்த கிளர்ச்சியை, உணர்ச்சி வேகத்தைத் தடுக்க முடிந்ததா? முடியவில்லை யென்று பெருமைப்படுகிறீர்கள். பின் ஏனோ அந்த அனுபவம், உங்கள் ஆட்சியில் பயன் படுத்தப்படவில்லை?

தங்கள் எதிர்ப்பை நியாயமான முறையில் பிரசாரஞ்செய்வதற்குக்கூட உரிமையில்லாமல் திராவிடக் கழகத்தார் தடுக்கப்பட்டிருக்கிறார்கள். வெள்ளையர் கையாண்ட முறைகளை எல்லாம்போலீசாரும் ஆட்சியாளரும் கூசாமல் கையாண்டிருக்கிறார்கள். 'நம் மக்கள் ஆட்சி' என்று சொல்லத்தான் தகுமா? எனினும் இதை எதிர்த்துத் திராவிடக் கழகத்தார் சிறை செல்லத் துணிந்துவிட்டனர். சிறைக்கூடங்களிலும் இடமில்லாமல், ஏன் இந்த நடவடிக்கை வேண்டும்? இந்தியால் வந்த இந்த விளைவைக் களைய வகையில்லையா? உயர்தரப் பள்ளிகளில் மேல் வகுப்புகளுக்கு விருப்ப பாடமாக இந்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துவிட்டால் எதிர்ப்பு நின்று அமைதி நிலவ வழிஏற்படுமென்று நம்புகிறோம்.

OFFICE OF THE … JAN 1949



பதவிகளைக் கைப்பற்றவும், மத்திய ஆட்சியில் பங்குகொள்ளவும், இனி உறுதியாக்கப்பெறும் பொது மொழியைத் தமிழன் கற்காமல், ஏமாந்துவிடுவான் என்ற அச்சம் நம் அமைச்சர் பெருமக்களுக்கு வேண்டியதில்லை. அவசியம் ஏற்படும்பொழுது நம்மவர்கள் கட்டாயம் கற்றுக்கொள்வார்கள். ஆகவே அதற்குத் தகுந்த திட்டத்தை வகுக்க இப்பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர்களையும் தகுதி வாய்ந்த நிபுணர்களையும் கூட்டிவைத்து ஒரு நல்லமுடிவுக்கு வரவேண்டுமென்று விரும்புகிறோம். உணவு நிலைமை கவலைக்கு இடங்கொடுத்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில், நாடாள்வோருக்குத் துணையாக நிற்கவிரும்பும் சக்திகளைப் புறக்கணிக்காமல், அவைகளைத் தம்வசப்படுத்தி வேறு வழியில் சிதறிப்போகாமல் நலம்தரும் பணியில் ஒத்துழைக்குமாறு செய்தல் அறிவுடைமையாகும்.

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்லது அமைச்சு.

ஆவது ஆராய்ந்து அறிதலும், அது கைகூடும் வகை இதுவெனத் தெளிந்து செய்தலும், இதுவே செயற்பாலது என்று துணிவாகச் சொல்லுதலும் வல்லவனே அமைச்சன் என்பது தமிழ் மறை கூறும் அமைச்சு இலக்கணம்.

இன்னமும் காலம் தாழ்த்தாது உடனே ஆவனசெய்யுமாறு தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவரையும், முதல் அமைச்சரையும், கல்வி அமைச்சரையும் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தமிழ் வெல்க!

## 1949
## புத்தாண்டு வாழ்த்து

தமிழ்த் தென்றல் எழுத்தாளர், அன்பர், ஆதரவாளர், வாசகர், விற்பனையாளர், கையொப்பக்காரர், விளம்பர உதவியாளர் யாவர்க்கும், **1949 புத்தாண்டில்**

**எல்லா நலங்களும் பெருகுக**
**என வாழ்த்துகிறோம்.**

# காலத்தின் கோலம்

## அண்ணாமலைப் : : : : : பல்கலைக் கழகம்

செந்தமிழ் நாட்டில் சிறப்பு வாய்ந்த சிதம்பரத்திலே அமையப் பெற்றிருக்கிறபடியால் தமிழ்ப் பல்கலைக் கழகம் என மதிக்கப்படுகிறது. அப்பல்கலைக் கழகத்தின் பட்டம் அளிப்பு விழா இவ்வாண்டில் அண்மையில் நடைபெற்றது. அதுகாலை சொற்பொழிவாற்றியவர், நம் சென்னை உயர்நீதி மன்றத்தின் முதல் நீதிபதியாவர். அவர் ஆந்திரர். அநேக கருத்துக்களை அவர் தம் விரிவுரையில் விளக்கியிருக்கிறார்; கீதை முதலிய வடமொழி நூல்கள் பலவற்றினின்று மேற்கோள்கள் பலவற்றை எடுத்துக்காட்டியுள்ளார். ஆயினும் உலகப் பொது மறையாகிய திருக்குறளிலிருந்து ஒரு சொல்லோ, ஒரு கருத்தோ எடுத்து ஆளப்படவில்லை! ஏன்?

மேன்மை தங்கிய நம் கவர்னர்ஜெனரல் இராஜாஜி அவர்கள் கல்கத்தா, காசி, தில்லி முதலிய இடங்களில் சன்மார்க்கத் துறையில் பல சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளார். அவரோ தமிழர்; தமிழில் வல்லவர்; தமிழ் நூல்களை யியற்றியவர்; தமிழ் ஆர்வமும் உடையவர். எனினும் அவருடைய அச் சொற் பொழிவுகளில் மேற்கோள்களெல்லாம் கீதாமயம்! திருக்குறளிலிருந்தோ ஏனைப் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலிருந்தோ சிறுமணி ஒன்றுகூட ஒளிவீசக் காணோமே! ஏன்? ஆனால்,

## தமிழ் இசைச் சங்கத்தின்

ஆறாவது ஆண்டுவிழாவைத் தொடங்கி வைத்த நம் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமித் தமிழன் — தெலுங்கைத் தாய்மொழியாகக் கொண்ட அவருடைய சொற்பெருக்கைக் கேட்டீர்களோ? கருத்தெல்லாம்-சொல் எல்லாம்-மேற்கோள் எல்லாம், தமிழ்மறை, தமிழ் இலக்கியம், தமிழ்க் காப்பியங்களாகிய பொற்குவையினின்று பொறுக்கப்பெற்றிருக்கின்றன. எப்படி! தமிழன் தமிழை மறவான்.



## தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்,

சகத்தினை அழித்திடுவோம் என்று கூறிய பாரதியாரின் "விடுதலைப்" பாட்டுக்களைப்பாடி அயலானிடமிருந்து நாட்டை விடுவித்தவர் காங்கிரசார். அவர்கள் நாட்டை ஆளும் இற்றை நாளில் தனி ஒருவனுக்கு மட்டுமல்ல; மக்கள் சமுதாயத்துக்கே போதிய உணவு கிடைக்க இன்னம் வழியில்லை.

இரந்தும் உயிர் வாழ்தல்
வேண்டில், பரந்து
கெடுக உலகு இயற்றி யான்

என்று சபித்திருக்கிறார் தமிழ்மறை தந்த வள்ளுவர் பெருமான். வயிற்றுக் கொடுமை பொறுக்கமாட்டாமல் தவிக்கும் மக்களின் தொகையே வளர்கின்றது! நெல்வேலி மாவட்டத்தில் சில நாட்களுக்கு முன் நடந்த ஓர் கொடிய நிகழ்ச்சி நெஞ்சைப் பிளக்கின்றது. குடும்பத்தின் பசிப்பிணியைப் போக்கப் பொருளீட்டும் வழியின்றிக் கணவன் மறைந்தோடி விட்டான்; அவன் மனைவியோ தான் பெற்றெடுத்த மக்கள் மூவரையும் வளர்க்க வழிகாணாமல் இறக்கத் துணிந்தாள். எல்லாம் வல்ல இறைவனைத் தான் அடையுமுன், அம் மூன்று மக்களையும் ஒரு கிணற்றிலே இறைவன் திருவடிக்குக் காணிக்கையாக அளித்தாள். பின், தானும் அக் கிணற்றில் குதித்தாள். மக்கள் மடிந்தனர்; அவள் காப்பாற்றப்பட்டாள். கொலைக் குற்றத்துக்காகத் தூக்குத் தண்டனை அடைந்தாள்; ஆயினும் காரணத்தை முன்னிட்டு ஓராண்டுக் கடுங்காவல் தண்டனைக்குக் கருணைகாட்டப் பெற்றிருக்கிறாள். தன் மக்களைக் கொல்லவும், தன்னை மாய்த்துக் கொள்ளவும் துணிவு கொடுத்தது கொலை யுணர்ச்சியா? பசிப்பிணியின் கொடுமையா? பொறுப்பாளி யார்? இப்படிப்பட்ட சூழ்நிலையை உண்டாக்கிய சமுதாயம் அல்லவா பொறுப்பாளி? பாரதியார் பாடினார்; குறள் பேசிற்று. பலன் என்ன?

## கனம் டாக்டர் குருபாதம்

அவர்களின் ஆதரவில் விருதுநகரில் இலவச கண்நோய் ரண சிகிச்சை, சென்ற டிசம்பர் 20-ல் தொடங்கி மூன்று நாட்கள் வெற்றிகரமாக நிறைவேறியது. இவ் அறச்செயலுக்காக, அமைச்சர் அவர்களையும் தென் இந்திய கண் நிவாரணச் செயற் குழுவினரையும் பெரிதும் பாராட்டுகிறோம்.

அ


அமைச்சர் குருபாதம் அவர்கள், கண்ணுக்குரிய அறுவை மருத்துவத்தில் இந்தியாவிலேயே முதல்வராகக் கருதப்படுகிறார். அத்தகையவரின் மருத்துவப் பணி நாடெங்கும், குறிப்பாக ஏழைகளுக்கும் எளிதில் பயனுறும்படி ஒவ்வோர் ஊரிலும் ஆண்டுக்கு ஒரு முறை முகாம் ஏற்படுத்தி உலகத்தார்க்குக் கண் திறந்துவிடும் பணியினும் சிறந்தது வேறில்லையெனக் கருதுகிறோம். கனம் குருபாதம் அவர்கட்கு ஓய்வு கொடுத்துக் கண் அளிக்கும் கண்ணனை அவர் மனத்துக்கிசைந்த மருத்துவ இலவச உதவியை மாதந்தோறும் மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் அவரே நேரிற் சென்று செய்விக்க வசதி யளிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறோம். அரசாங்கத்திற்குச் செலவில்லை. ஆங்காங்குப் பொது மக்கள் தாராளமாக நன்கொடையுதவுவரென்று உறுதி கூறுகிறோம்.

கண் மருத்துவத்திற்கு டாக்டர் குருபாதம் புகழ்பெற்றாற் போல், கழுத்துக்கு மேலுள்ள மூக்கு, காது, தொண்டை முதலிய உறுப்புக்களுக் குரிய சிகிச்சைக்குப் பேர் பெற்றவர் டாக்டர் பி. வி. செரியன். அவரும் அரசாங்க அலுவலினின்று ஓய்வு பெற்றுள்ளார். அவருடைய் பெறற்கரிய பேருதவியும் நாடெங்கும் இலவசமாகக் கிடைத்தற்குரிய முறையில் முகாம் அமைப்புப் பணியில் அவரையும் அரசியலார் தூண்ட வேண்டுமென்று விரும்புகிறோம்.

## மொழி வழி மாகாண

அமைப்புக் குழுவின் அறிக்கைக்கு மறுப்பு வன்மையாயிருக்கிறது. ஆதரவோ, தக்க ஆதாரத்துடன் இல்லை. எனினும் பம்பாய், சென்னை நகரங்களைத் தனிமாகாணம் ஆக்கும் சிபார்சை ஒப்புக்கொள்வார் யாரும் இலர். தமிழர் சென்னையை விடார். மராத்தியர் பம்பாய்க்காக உயிரையும் விடுவர். ஆகவே குசராத் மாகாணத்துக்குத் தனித் துறைமுகம் ஏற்படும்வரை சர்தார் படேல் இம்மாகாண அமைப்பை ஒப்புக் கொள்ளார். பம்பாய்க்கு வடக்கில் கச்சுவளைகுடாவில் புதிதாய் அமைக்கப் பெறும் கண்ட்லா துறைமுக வேலை முற்றுப் பெறும்வரை எல்லோரும் காத்திருக்கும் நிலை ஏற்பட்டிருக்கின்றது.

---



# கடற்கரையிலே (16) ஆனந்த ரங்கர்

—[ரா. பி. சேதுப்பிள்ளை.]—

புதுவை என்னும் புதுச்சேரி இன்று பிரஞ்சு ஆட்சியிலுள்ள தோர் பெரு நகரம். புதுச்சேரியைப் பாண்டிச்சேரி என்று வழங்குவர் வெள்ளைப் பரங்கியர். அந்நகரில் வாணிகத்தால் வளம் பெற்றவர் ஆனந்த ரங்கர். மதிநலத்தால் அவர் மன்னரும் மதிக்க வாழ்ந்தார். புதுவையில் ஆட்சி புரிந்த பிரஞ்சு கவர்னர்களில் தலைசிறந்தவன் டூப்ளே என்பர். அவனுடைய நன்மதிப்பை நிரம்பப் பெற்றவர் ஆனந்த ரங்கர். நாள்தோறும் நாட்டிலே தாம் கண்ட காட்சியையும், கேட்ட செய்தியையும் ஒழுங்காகக் குறித்து வைத்தார் அவர். அதுவே இப்பொழுது சிறந்த சரித்திரக் களஞ்சியமாக விளங்குகின்றது.

பன்னீராண்டு புதுவையில் கவர்னராயிருந்து பணிசெய்த டூப்ளேயின் பெருமையை அன்று பிரஞ்சுநாட்டார் அறிந்தாரல்லர். இன்று புதுச்சேரியில் அவருக்கு உயர்ந்த உருவச்சிலை அமைத்திருக்கின்றார்கள். அப்பெருமகன் பதவியிழந்து, பாரீசுக்குக் கப்பலேறிய நாளில் பழைய நினைவுகளெல்லாம் ஆனந்தரங்கர் உள்ளத்தில் பொங்கி எழுந்தன. அவற்றை எவரிடமும் சொல்லி ஆற்றிக் கொள்ள விரும்பாது அந்தி மாலையில் கடற்கரையில் நின்று பேசுகிறார்:—

## பொங்குமாக் கடலே!

புதுவையின் கவர்னராய்ப் பன்னீராண்டு ஆட்சிபுரிந்த பெருமகன் இன்று காலையில் கப்பலேறிச் சென்றான். இந்த நாளை நான் எந்த நாளும் மறக்க முடியுமா? இத்தனை காலமும் என் இன்ப துன்பங்களுக்கெல்லாம் காரணனாய் இருந்த அக் கவர்னரையே நினைத்துக் கரை

கின்றது என் நெஞ்சம். ஐயோ! பெருங்கடலே! என் கதையை உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்வேன்? நான் சென்னையின் அருகேயுள்ள ஒரு சிற்றூரில் பிறந்தேன். என் தந்தையாரோடு இளமையிலேயே இந்த ஊரை வந்தடைந்தேன். புதுவையை அடைந்தவர் புது வாழ்வு பெறுவர் என்று என் தந்தையார் நம்பினார். அவர் முயற்சியுடையர். 'வர்த்தகமே ஒருவர்க்கு அர்த்த சாதனம்' என்று அடிக்கடி சொல்வார். இத்தகைய பண்புடைய தந்தை என் பதினாறும் ஆண்டில் பரமபதம் அடைந்துவிட்டார்.

## ஈர நெடுங் கடலே!

அன்று முதல் குடும்பப் பொறுப்பெல்லாம் என் இளந் தலையில் விழுந்தது. ஆயினும் நான் மயங்கவில்லை; தயங்கவில்லை. 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற முதுமொழியை நம்பி வர்த்தகம் செய்யத் தலைப்பட்டேன். புதுவையில் அங்காடி வீதியிலே ஒரு சிறு பாக்குக் கடை வைத்தேன். அக்கடையே என் ஆக்கத்திற்கு அடிப்படையாய் அமைந்தது. ஆதலால் அக்கடையை விடாமல் இன்றுவரை நடத்தி வருகின்றேன். அதில் ஆனந்தமாய் இருந்து என் தாய்மொழியாகிய தமிழைக் கற்கவும் கேட்கவும் எனக்கு ஆசை அதிகம். 'செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்' என்ற அருமைத் தமிழ் மறையை நான் எந்நாளும் மறந்தறியேன். அருந் தமிழ் விருந்தளிக்கும் அறிஞருக்குப் பெரும் பொருள் தரவேண்டும் என்பது என் ஆசை.

## தன்னேரில்லாத் தமிழ்க்கடலே!

ஒருநாள் மதுரகவி என்னும் பாவலர் என்னைக் காணவந்தார். மாலைப் பொழுது. நான் இக் கடற்கரையில் உலாவிக்கொண்டிருந்தேன். அவர் வந்ததும் தேன் மடை திறந்தாற்போலப் பாடத் தொடங்கினார். நெடுங் கடலே! உன் மெல்லிய பூங்காற்றினும் இனிமையாயிருந்தது அவர் பாடிய தெள்ளிய தமிழ்ப்பாட்டு. அப்போது நான் நடையை மறந்தேன்; கடையை மறந்தேன். ஆனந்த பரவசனாயினேன். அந்நிலையைக் கண்டார் கவிஞர். அளவிறந்த அன்புகொண்டு என்மீது ஒரு பாட்டுப் பாடிவிட்டார். என் கதையைச் சொல்ல வந்த இடத்தில் அவர் கவிதையையும் சொல்கின்றேன்! கேள்.

"உலங்கொண்ட மணிப்புயனே!
பிரம்பூர் ஆனந்தரங்கா!
உன்பாற் செல்ல
வலங்கொண்ட கருடனோயாம்
இடங்கண்டோம் எழில்நகரையான்
வலந்தே கண்டோம்
பொலங்கொண்ட மணிமாட
மிசையில் புயல்தவழும்
புதுவை யென்னும்
தலங்கண்டோம், நினைந்தகை
முகங்கண்டோம் இனிவேண்டும்
நலங்கண்டோமே"

என்று பாடினார். அவருடைய பண்பும் புலமையும் இப்பாட்டிலே பளிங்குபோல் விளங்குகின்றதன்றோ? அவர் இப் புதுவைமா நகரைப் புகழ்ந்துரைத்த அழகென்ன! சகுனப் பறவைகளின் திறமுரைத்த சமத்தென்ன! பாட்டின் சுவையறிந்து என்னைப் பாராட்டிய பான்மை என்ன! இவற்றை உன்ன உன்ன என் உள்ளம் குளிர்கின்றதே!

## புதுவைப் பெருங் கடலே!

'புயல் தவழும் புதுவை' என்ற மதுரமொழி எத்தனையோ எண்ணங்களை என் மனத்தில் எழுப்புகின்றது. இப்போது புதுச்சேரி புத்துயிர் பெற்று வருகின்றது. வர்த்தகத்தால் வளம் பெருகுகின்றது. குச்சு வீடுகள் மச்சு வீடுகளாகின்றன. புதிதாகப் பல பேட்டைகள் உண்டாகின்றன. ஆங்கிலேயரும் பிரஞ்சுக்காரரும் வாணிபத் துறையிலே போட்டியிடுகின்றனர். இரு திறத்தாரும் தங்கள் பெயரை இந்நாட்டில் நிலைநாட்ட ஆசைப்படுகின்றார்கள். அவர் பேராசைக்கு ஒரு சான்று காட்டுகின்றேன். ஆங்கிலேயரின் வர்த்தக நிலையமாகிய சென்னையில் காலட் என்பவர் சில காலம் கவர்னராயிருந்தார். நெசவுத் தொழிலைப் பேணி வளர்ப்பதற்காக நல்ல நீரும் நிழலும் அமைந்த திருவொற்றியூரிலே ஒரு பேட்டையை உண்டாக்கினார். நூறு குடும்பங்களைக் கொண்ட அக்குடியிருப்புக்குக் 'காலட் பேட்டை' என்ற பெயர் கொடுத்தார். காலட்டு கவர்னர் கப்பலேறிப் போய்விட்டார். அவர் பெயர் தாங்கிய பேட்டை 'காலாடிப்பேட்டை' என்று இப்போது மருவி வழங்குகின்றது. சென்னையில் அம்பட்டன் வாராவதி ஒருபால்; காலாடிப் பேட்டை மற்றொருபால். வெள்ளைப் பெயரால் விளையும் விபரீதத்திற்கு வேறு சான்றும் வேண்டுமா?

## முந்நீர்ப் பெருந் துறையே!

இத்தகைய பேராசை டுப்பிளே கவர்னரிடமும் உண்டு.

புதுச்சேரியின்புறத்தே அமைந்த ஒரு சிற்றூருக்கு டூப்பிளேப் பேட்டை என்று பெயரிட்டார். எல்லோரும் அவ்வூரை அப்படியே அழைக்கவேண்டும் என்று பெயர் இட்டார். எல்லோரும் அவ்வூரை அப்படியே அழைக்க வேண்டும் என்று ஆணைபிறப்பித்தார். துரைத்தன அதிகாரிகள் டூப்பிளே பேட்டையிலேதான் வீடு கட்டி வசிக்கவேண்டும் என்று வற்புறுத்தினார். ஆயினும், நாட்டு மக்களுக்குப் புதுப் பெயரிலே நாட்டமில்லை. தானாய்ப் பழுத்தால் பழமா? தடியால் அடித்தால் பழமா? என்பது பழமொழி யல்லவா? மேலும் டூப்பிளே பேட்டை என்ற பெயர் நாட்டுமக்கள் நாவில் நல்ல முறையில் வருமா? இயற்கைக்கு மாறாக வற்புறுத்தினால் காலாடிப் பேட்டைபோன்ற விபரீதந்தான் விளையும். டூப்பிளேப் பேட்டை என்பது துவளைப் பேட்டையாகுமோ? அல்லது தவளைப் பேட்டை யாகுமோ? யார் அறிவார்? பேராசையுடைய டூப்பிளேயின் செவியில் இதைச் சொன்னால் ஏறுமா?

## நலமார்ந்த நற்கடலே!

ஒரு நன்றி செய்தாரை உள்ளத்தில் வைத்துப் போற்றுவது தமிழர் பண்பு. அந்த முறையில் எனக்குப் பெருநன்றி செய்த டூப்பிளே துரையை நான் என்றென்றும் போற்றுவேன். புதுவையில் வாழவந்த எனக்கு ஏற்றமும் தோற்றமும் அளித்தவர் அவரே! சிறப்புடன் சிவிகையில் ஏறி, மேளதாளத்தோடு அவர் மாளிகைக்குச் செல்லும் உரிமையை எனக்குத் தந்தார். அங்காடி விலைகளையும், அரசியல் முறைகளையும் அந்தரங்கமாக என்னுடன் ஆலோசித்தார். நிறவேற்றுமை சிறிதும் இன்றி, நெருங்கி மனங்கலந்து பேசி மகிழ்ந்தார். மாறுபட்ட கருத்தை நான் எடுத்துரைத்தாலும் சீறி விழமாட்டார்; மனத்தில் ஏற்று நிதானமாக ஆராய்வார். இதுவன்றோ நல்லமைச்சனுக்கும் அதிகாரிக்கும் உரிய பண்பு?

"செவிகைப்பச் சொற்பொறுக்கும்
பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கும் உலகு"

என்பது பொய்யாமொழியார் உரைத்த பொன்மொழி யன்றோ?

## கரைகாணாங் கருங்கடலே!

ஆயினும் அவரிடம் ஒரு பெருங்குறை யுண்டு. அதனால் வந்த கேடுகள் அனந்தம். அக்குறையினால் குன்று முட்டிய குருவிபோல் குறுகினார் அப்பெருமகன். அவருக்கு மனையா



ளாய் வாய்த்த மேடம், செருக்கும் சிறுமையும் உடையவள். அடக்கி ஆள்வதில் ஆசையுடையவள். வீட்டிலே அவள் இட்டதே சட்டம். டூப்பிளே கவர்னர் பொறியில் அகப்பட்ட எலிபோல் அவள் சொல்லின் வழியே சுழல்வார். ஒன்றும் மறுத்துப் பேசமாட்டாமல் உழல்வார். அவள் அதிகாரம் வீட்டளவில் நின்றுவிடவில்லை. அரசியல் வேலைகளிலும் தலையிட்டு அல்லல் விளைப்பாள். மேடம் தருக்குற்றுத் தகாத வேலை செய்யத் தூண்டும் பொழுது டூப்பிளே தடுத்துச் சொல்ல அஞ்சுவார்; சில வேளைகளில் அடிமைபோல் கெஞ்சுவார். அவர் கெஞ்சக் கெஞ்ச அந்த மேடம் மிஞ்சுவாள்.

"மனையாளை அஞ்சும்
மறுமையி லாளன்
வினையாண்மை
வீறெய்தல் இன்று"

என்ற உண்மையை மெய்ப்பித்தார் பிரஞ்சு கவர்னர். அந்தோ! பேய் கொண்டாலும் கொள்ளலாம். இத்தகைய பெண் கொள்ளலாகாதம்மா!

## காலங்கண்ட கருங்கடலே!

அன்றாடம் கவர்னர் வீட்டிலும் வெளி நாட்டிலும் நான் கண்டதும் கேட்டதும் பல உண்டு. அவற்றை யெல்லாம் என் நாட்குறிப்பிலே எழுதி வைக்கத் தொடங்கினேன். அப்படிக் குறித்து வைப்பதில் ஒரு கருத்தும் எனக்கில்லை. பசித்தவன் பழங் கணக்கைப் பார்ப்பான் என்பது போல, வேலையற்ற வேளைகளில் என் நாட்குறிப்பைப் புரட்டிப் பார்த்துப் பொழுது போக்குவேன். இக்காலம் மிகக் குழப்பமான காலம். முந்திறத்தார் ஆதிக்கம் பெற முயலும் காலம். மகமதியரும், ஆங்கிலேயரும், பிரஞ்சுக் காரரும் ஒருவரை ஒருவர் ஆள்வினையாலும் சூழ்வினையாலும் வென்று உயரக் கருதும் காலம். இந்த வேளையில் டூப்பிளே கவர்னராக வந்தது புதுவைக்கு ஒரு நல்ல காலம்.

## புகழார்ந்த புதுவைக் கடலே!

இந்நாட்டிலே பிரஞ்சுக் கொடியை நாட்ட ஆசைப்பட்டார் டூப்பிளே. மகமதிய நாவாபோடு அரசியல் சதுரங்கம் ஆடினார். சென்னையில் இருந்த ஆங்கிலேயர் மீது கப்பற் படை கொண்டு சாடினார். பிரஞ்சுப் படை வென்றது. சென்னைக் கோட்டையிலே பிரஞ்சுக் கொடி-

பறந்தது. டூப்பிளேயின் புகழ் உயர்ந்தது. பிரஞ்சுக் கொடியை வணங்கிப் பணியாத ஆங்கிலப் படை வீரரை யெல்லாம் சிறை பிடித்துப் புதுவைக்குக்கொண்டு வரும்படி ஆணை பிறந்தது. சென்னைக் கவர்னராயிருந்த மார்ஸ் என்பவரும் அவர் பரிவாரமும் இப்புதுவைத் துறைமுகத்திற்குக்கொண்டு வரப்பட்டனர். ஆங்கிலக் கவர்னருக்கு மரியாதை காட்டி வரவேற்கக் கருதியவர் போல டூப்பிளே ஆடம்பரமாக இத் துறைமுகத்திற்கு வந்தார். அம்மம்மா! அப்போது இக் கடற்கரையில் கூடியிருந்த மக்களுக்குக் கணக்குண்டா? அவர் செய்த ஆரவாரத்திற்கு ஓர் அளவுண்டா? புதுவைக் கடலினும் பெரிதாகப் பெரு முழக்கம் செய்த பொது மக்களைக் கண்டு டூப்பிளே மனங் குளிர்ந்தார்; மார்ஸ் மனந் தளர்ந்தார். அன்று மலர்ந்த செந்தாமரையை ஒத்தது டூப்பிளேயின் முகம். மாலைக் கமலம் போல் வாடிக் குவிந்தது மார்சின் முகம். இந்தக் கோலத்தில் வெற்றிபெற்ற கவர்னரும், தோல்வியுற்ற கவர்னரும் புதுவையின் வீதியின் வழியே சென்ற காட்சிக்கு நிகரானதொன்றை நான் என்றும் கண்டதில்லை. மறுநாள் டூப்பிளேயின் மாளிகைக்குச் சென்றேன். ஆனந்தமயமாக விளங்கிய அவர், என்னை நோக்கி 'ஆனந்தரங்கரே வாரும்' என்றழைத்த போது நான் என்றும் இல்லாததோர் இன்பம் பெற்றேன். அவர் மதிநலத்தை மனமாரப் புகழ்ந்தேன்; வாயார வாழ்த்தினேன்.

## புகழ்பூத்த புதுவைத்துறையே!

சென்னையிலே பிரஞ்சு ஆதிக்கம் பெருகக் கண்ட மகமதிய நவாப் பெருஞ் சீற்றமுற்றார். முள்மரத்தை முளையிலே கிள்ளி எறிய வேண்டும் என்றெண்ணிச் சென்னையின் மீது படையெடுத்தார். நவாப்பின் மைந்தன் மாவுஸ்கானே படைத் தலைவராயினார். இதையறிந்த டூப்பிளே புதுவையிலிருந்து ஒரு பட்டாளத்தைச் சென்னைக்கு அனுப்பினார். அடையாற்றின் வடகரையில் இரு படைகளும் கை கலந்தன; கடும் போர் புரிந்தன. சிறிது நேரத்தில் மகமதியர் படை சின்னபின்னமாயிற்று; சிதறி ஓடிற்று. "மகமதியர் அதிசூரர்; அவரை வெல்ல எவராலும் ஆகாது" என்று பொது மக்கள் எண்ணியிருந்த எண்ணம் அடையாற்றுப் போரிலே அடிபட்டு ஒழிந்தது. மகமதியரது போராண்மையைத் தகர்த்த டூப்பிளேயின் புகழ் மும்மடங்கு வளர்ந்தது.



## நிலையற்ற அலை கடலே!

ஆயினும் இன்பமும் துன்பமும் கலந்ததே இவ்வுலக வாழ்வு. உயர்ந்தவர் தாழ்வர்; தாழ்ந்தவர் உயர்வர். நாட்டிலே குழப்பம் பெருகிற்று; வர்த்தக வளம் குறுகிற்று. பாரீஸ் நகரம் பரபரப்புற்றது. டூப்பிளேதான இதற்கெல்லாம் காரணம் என்ற கருத்துப் பரவிற்று. எல்லோரும் அவரைக் கைவிட்டார். முன்பு கரும்பாயிருந்தவரெல்லாம் வேம்பாயினர்; வேலையைவிட்டு அவரை நீக்கினர்; மற்றொருவரைக் கவர்னராக நியமித்தனர். புதிதாக வந்த கவர்னரிடம் புதுவையை ஒப்புவித்துப் பாரீசை நோக்கிப் புறப்பட்டார் டூப்பிளே.

## கதறும் பெருங் கடலே!


அந்தோ! அன்று கவர்னராய் அவர் இந்தத் துறைமுகத்தில் வந்து இறங்கிய பெருமை என்ன? அவரை வரவேற்ற மாட்சி என்ன? அலங்காரக் காட்சி என்ன! பன்னீராண்டு அவர் ஆட்சி புரிந்தார். அப்போது அவர் நாவசைந்தால் இந்நாடசையுமே! அவர் அறிவிற் சிறந்தவர்; ஆள்வினையுடையவர். ஆங்கிலேயரை அலற வைத்தார்; மகமதியரை மறுக வைத்தார்; பாதுஷாவையும் பதற வைத்தார். இத்தகைய பிரஞ்சு கவர்னர் இன்று எளியராய்த் தனியராய் இந்நகரைவிட்டுச் செல்கின்றார். நிதியிழந்து, நிமிர்ந்த நடையிழந்து விடியுமுன்னே இப்பதியை விட்டுப் போகின்றார்.

"குடை நிழல் இருந்து
குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்து ஓரூர்
நண்ணினும் நண்ணுவர்"

என்பது உண்மையாயிற்றே! காட்டில் அரசு வீற்றிருந்த சிங்கத்தைக் கூட்டில் அடைத்தாற்போல் அவரைக் கப்பலில் ஏற்றிக் குற்றவாளிபோல் கொண்டு சென்றார்களே! இன்று அக்டோபர் மாதம் பதினாலாம் தேதி; இந்நாள் அவர்க்கு அட்டமத்தில் சனியாய் அமைந்ததே! பாரீசு நகரத்தில் இனி அவர் என்ன பாடுபடப் போகின்றாரோ? என்று கண்ணீர் வடித்துக் கொண்டு கடற்கரையை விட்டகன்றார் ஆனந்தரங்கர்.








## மதுரை மா நகர்

—[அ. இராசகோட்டியப்பன்]—

பொழுது பொள்ளெனப் புலர்ந்தது. வானம் வெள்ளென வெளுத்தது. பறவைகள் ஆரவாரித்தன. மதுரைமா நகரைத் துயிலினின்று எழுப்புவான் போலச் செங்கதிரோன் கீழைத்திசையில் கிளம்பினான். கோயில்களிலும், அரண்மனையிலும், அறவோர் பள்ளிகளிலும் விருப்போடு வெண்சங்கம் ஊதினர்; காலை முரசு கலந்தொலித்தது. அறப்பள்ளியினுட் சென்றமர்ந்த கவுந்தியடிகளைக் கைகூப்பி வணங்கிய கோவலன், "பெரியீர், இல்லற நெறியினின்று நீங்கினேன்; மெல்லியல் மனைவிக்குத் தீங்கு இழைத்தேன்; அவளுடன் நெடுவழி நடந்தேன்; முன்பு அறியாத இவ்வூர்க்கு வந்தேன்; இந்நகரினுட் சென்று, இங்குள்ள வணிகர்க்கு என் நிலைமையைத் தெரிவித்து மீண்டு வருமளவும், கண்ணகி தங்கள் பாதுகாப்பில் இருத்தலால் தீங்கில்லையே" என்று மனமுருகிக் கூறினான். அடிகள், "நீ முற்பிறப்பில் நல்வினையே செய்து, தீவினையும் சிறிது செய்தாய்; பெண்ணையும் பொன்னையும் விரும்பிய இல்லறத்தார்க்கு எந்நாளும் துன்பமே! பற்றற்ற தனி வாழ்க்கையுடைய பெரியோர்க்குத் துன்பமில்லை. சீதையை அடையவும் நாட்டை ஆளவும் இராமன் எண்ணிறந்த துன்பம் எய்தினான். சூதாடி நாடு நகரங்களை யிழந்து, கானகத்தே காதலியைக் கைவிட்டு நளன் அடைந்த துயரத்திற்கு அளவுண்டோ? அவர்களோ மனைவியை யிழந்து வருந்தினர்; நீயோ காதலியுடன் கலந்து வாழ்கின்றாய். ஆதலின் வருந்தாதே! கூடலம்பதியுள் சென்று பிழைக்கும் வழியறிந்து வருக" என்று தேற்றி அவனை யனுப்பினர்.

அப்பால் கோவலன் அகழியைக் கடந்து, படைகள் மறைந்து செல்லும் சுருங்கை வீதிவழிப் புகுந்து,

கடிமதில் வாயில்
காவலிற் சிறந்த
அடல்வாள் யவனர்க்கு
அயிராது புக்கு

[ அடல் - வலிமை; யவனர் - யவன நாட்டு வீரர். அயிராது-ஐயுறுமல் ]

மாநகரின் மதில் வாயிலில் காவல் புரியும் யவனவீரர் ஐயமுறு வண்ணம் அவ்வாயிலைத் தாண்டிச் சென்று,

ஆயிரம் கண்ணோன்
அருங்கலச் செப்பு
வாய் திறந் தன்ன
மதிலக வரைப்பு

[ ஆயிரம் கண்ணோன்-இந்திரன். அரும்கலச் செப்பு-ஆபரணப் பெட்டி. மதிலகம்-அகநகர் ]

இந்திரனது இரத்தினாபரணப் பெட்டியைத் திறந்து வைத்தாற் போலச் சிறந்த அழகுவாய்ந்த அகநகரைக் கண்டான். இளங்கொடி மங்கையருடன் செழுங்குடிச் செல்வர் இன்பமாக வாழும் இணையிலா மாடங்கள் நெருங்கிய இராச வீதியின் சிறப்பு சொல்லுந்தரமன்று. ஆடல் பாடல் அழகு முதலியவற்றால் நிகரற்று, கலைக்கோர் எல்லையெனவிளங்கும் தலைக்கோல் பட்டம் பெற்ற நாடக மகளிரும் பாடல் மகளிரும் வாழும் கணிகையர் வீதி கண்கொளாக் காட்சியாய் விளங்கிற்று. பற்பல வண்டிகளும் தேர்களும் விரைந்து செல்லும் வீதிகள் அணியணியாய் விளங்கின. அங்காடி வீதியின் அழகை என்னென்று சொல்வது? அங்குக் கிடையாத பொருள் வேறெங்கும் கிடைப்பது அரிது!

செம்பிற் செய்நவும்
கஞ்சத் தொழிலவும்
வம்பின் முடிநவும்
மாலையிற் புனைநவும்
வேதினத் துப்பவும்
கோடுகடை தொழிலவும்
புனையவும் சாந்தவும்
பூவிற் புனைநவும்

[ கஞ்சம்-வெண்கலம். வம்பு-புதுமை. கோடு-சங்கு, யானைக் கொம்பு. வேதினம்-ஈர்வாள். துப்பு-கருவி.]

செம்பாற் செய்தவை, வெண்கலத்தாற் செய்தவை, புதுமையாய்ப் புனைந்தவை, பலவகைமாலைகள், போர்க் கருவிகள், ஆனைக் கொம்பிலும் சங்கிலும் கடைந்த அரும்பொருள்கள், அகிற் புகைக்கமைந்த சரக்குகள், பூவால் தொடுத்த செண்டு, மாலை வகைகள் முதலிய பொருள்களால் நிரம்பி,

வகை தெரிவு அறியா
வளம்தலை மயங்கிய
அரசு விழை திருவின்
அங்காடி வீதி

[ தலை மயங்கிய-மலிந்த. ]



இன்னதற்கு இது இனம் என்று தெரிய வியலாமல், எல்லாப் பொருள்களும் மலிந்து, அரசரும் வியந்து நோக்குமாறு அழகாற் சிறந்து விளங்கிற்று அங்காடி வீதி.

வயிரம், மரகதம், மாணிக்கம், புருடராகம், வயிடூரியம், நீலம், கோமேதகம், முத்து, பவளம் ஆகிய ஒன்பதுவகை மணிகளின் பிறப்பு முதல் சிறப்புக்களையெல்லாம் வகுத்துணர வல்லவராய்ப் பகைவரால் ஏமாற்றப்பட இயலாத வருமாகிய வண்ணக்கர் என்னும் இரத்தின வியாபாரிகள் வாழும் நவமணி வீதியும், சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்னும் நால் வகைப் பொன்னும் பகுத்துணரவல்ல பொன்வாணிகர் வாழும் பொன்கடை வீதியும்,


நூலினும் மயிரினும்
நுழைநூல் பட்டினும்
பால்வகை தெரியாப்
பல்நூறு அடுக்கத்து
நறுமடி செறிந்த
அறுவை வீதி,

[மயிர்-எலிமயிர், பால்-பகுதி, அடுக்கம்-குவியல், நறுமடி-வாசனையூட்டிய ஆடை, அறுவை-வேட்டி சேலை.]

நுண்ணிய பருத்தி நூல், எலிமயிர், பட்டுநூல் முதலியவற்றால் தனித்தனியே செய்து வேறு வேறாய் நூறு நூறாக அடுக்கிக் கட்டிய அடுக்குகள் நூற்றுக் கணக்காய் அமைந்த நறுமண மூட்டிய ஆடைகள் விற்கும் அறுவை வீதியும், எள்ளு, கொள்ளு, பயறு, உழுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை முதலிய பலவகைக் கூலமும் விற்கும் கூலவீதியும், பலவகை மக்களும் பரவிவாழும் பற்பல வீதிகளும் அணியணியாய் அமைந்திருந்தன. முச்சந்தி, நாற்சந்தி, மன்றங்கள், குறுந்தெருக்கள், நெடுந் தெருக்கள் முதலியனவெல்லாம் நிரம்பிய அந்நகரின் அழகை யெல்லாம் கண்டு அகமிக மகிழ்ந்த கோவலன் மீண்டு கவுந்தியடிகளும் கண்ணகியும் தங்கியிருந்த இடத்தை வந்தடைந்தான்..






இரண்டாம் பகுதித் தொடர்ச்சி

# கல்வியும் படிப்பும்

[நாவலர். ச. சோ. பாரதியார்.]

இனி உரைகாரரும் அக் கருத்தையே உடன்பட்டுரைக்கின்றனர். இளம்பூரணர், "வழிபடு தெய்வம்" எனத் தொடங்கும் (110-ம்) சூத்திரத்தின் கீழ்த் தம் உரையில், "புறநிலை வாழ்த்து, கலிப்பா வகையினும், வஞ்சிப்பா வகையினும் வரப் பெறாது" என்றும், அடுத்த (111-ம்) சூத்திர உரையில் "வாயுறை வாழ்த்தும் அவையடக்கியலும் செவியறிவுறூஉப் பொருளும் கலியினும் வஞ்சியினும் வரப்பெறா" என்றும் தெள்ளத் தெளிய உரை எழுதி உள்ளார்.

அதுபோலவே, நச்சினார்க்கினியரும், "வாழ்த்தியற் செய்யுள் கலிப்பா உறுப்பாகியும் வஞ்சிப்பாவினும் வாப்பெறாது" என்று புறநிலைவாழ்த்தியல் (110-ம்) சூத்திர உரையினும், அடுத்த (111-ம்) சூத்திர உரையில் "வாயுறை வாழ்த்தும் அவையடக்கியலும் செவியறிவுறூஉவும் என மூன்றும், மேலைப்புறநிலைவாழ்த்துப் போல், வாழ்த்துப்பகுதிய ஆகலும், கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாமையும் உடைய" என்றும் கூறுகின்றார். இங்குத் தாம் கூறும் இப்பொருளைச் சிறிதும் கருதாமலும், இதற்கு முற்றிலும் மாறாகவும், இவரே மேல் "வாழ்த்தியல் வகையே நாற்பாற்கும் உரித்தே" எனும் சூத்திரத்திற்கு, "வாழ்த்தியல் வகை நான்கும், வஞ்சியும் கலியும் உள்பட பாவகை நான்கினும் வழங்கும்" எனப்பொருந்தாப் பொருள்கூறி வாளா அமைந்தது அறிவை மறைக்கும் மறதியாலா? புத்துரை கூறித் தாம் தம் மகிழ்ச்சியின் மைந்துறும் பெருமிதத்தாலா? துணிதல் எளிதன்று. சொற்பொருள் அழிக்கும் வழியில் அறிவைப் பழிக்கும் இப் பிழையை மறக்கவும் வெறுக்கவும் மாட்டாது, கல்லாமல் படித்த புல

வரால் தமிழ் நிலை எய்தும் தாழ்வுக்கு ஓர் எல்லையில்லை. அழலும் நுதற்கண் திறப்பினும் அஞ்சாமல் இறையனார் குற்றத்தை இகழ்ந்த புலவனைப் புகழ்ந்த நாட்டில், பாமரரும் கேட்டவுடன் பழிக்கும் பிழைகளை நயக்கும் பண்டிதர் பள்ளியில் பயிற்றும் மாணவர் பரிபவ நிலைக்குப்பரிவு காட்டுவோம்.

படித்த பண்டிதர் அறிவை அவமதித்துப் புரை உரைக்கயத்தில் நீந்தாமல் நிலையாமல் ஆழ்ந்தழுந்த நேர்ந்த காரணம் ஓர்ந்துய்த்துணரலாம். இயற்றும் நூல் எதற்கும் வாழ்த்தியல் கூறும் பழந் தமிழ் மரபு வள்ளுவர் முதல் இளங்கோ ஈறுகப் பண்டைப் புலவர் கொண்டு கையாண்டனர். அதன் பிறகு கல்லாமல் படித்த பண்டிதர் உலகில் அத்தமிழ் வழக்கொழிந்து, ஆரியர் புகுத்திய பாயிரம் பதிகம் ஆயிரம் புதுவகை பரவலாயிற்று. வரன்முறை வந்த வரம்புகள் அழிந்தன. எதையும் எந்தப் பாவிலும் புதிய துறை-தாழிசை-விருத்தம் என்ற பாவின வகைகளில் புலவர் ஆக்கினர். தாமறிந்த தங்கால வழக்கே தொன்று தொட்டென்றும் நின்று நிலவுவதாகப் படித்தவர் நினைத்தார். பாயிரமே வாழ்த்தியல் எனத் துணிந்து, அதன் வகை அனைத்தும் எல்லாப் பாவகையிலும் வழங்கும் என எண்ணினர். ஆதலால், எல்லாப் பாக்களும் வாழ்த்தியல் வகைகளுக்குரிய என்றுரையும் எழுதினர்.

"பா" எனும் சொல், "உ"கரச்சாரியை-வகர உடன்படுமெய்-இரண்டும் பெற்றன்றி உருபேற்றல் வழக்கில்லை என்பதையும் மறந்து, "பாற்கு" என்பதை "பாக்கு" எனவாளாக் கொண்டனர். நா-மா-பா-என்ற ஓரெழுத் தொருசொல் எல்லாம், நாவை-மாவை-பாவை எனவும், நாவால்-மாவால்-பாவால் எனவும், நாவுக்கு-மாவுக்கு-பாவுக்கு எனவுமே வழங்குவதல்லால், முதனிலை தனியே உருபேலாது. அறிவற்ற புதிய படிப்பின் உழக்கால், கற்றுத் தேரற்குரிய குருணியும் பதக்கும் கொள்ளாத் தொல்காப்பியரின் பழைய நூற்பாப்பொருளை படித்த உரைகாரர் அளக்கத் துணிந்தார். "நாழி முகவாது, நானாழி" என்ற முதுமொழி உண்மையையும் மறந்தார். பழைய எட்டுப்படி மரக்கால் அளவை புதிய பட்டினம்படி ஐந்தால் முகந்தால் கணக்கு அறுபடாது. எட்டில்



ஐந்துபோக மீதம் மூன்று. மூன்று பேருக் கொன்று முடியாத கணக்கு. அதைத் தீர்வார் நச்சினார்க் கினியர் உரையையும் தேர்வார். அறிவை அலமரச் செய்யும் இத்தகைய அதிசய வழுக்களை அவர் உரையில் எண்ண இயலாது.

(ii) இனி பண்டிதர் நயக்கும் வியத்தகு வழுக்களில் இரண்டாவது பிசி (பிதிர்) இன்னும் ஒன்றாய்வோம். முன்னதினும் இது முழுவழுவாவது. மயக்கால், புலவரை வியக்கச் செய்வது, முன்னே சொன்னது. மூலத்தில் இல்லாத அரிய உரைவழு. இனி நாம் காண்பது மூலமும் உரையும் முற்றிலும் அறிவை அலைக்கும் பிசிவகை. இது, இறையனார் களவியலில் வரும் ஒரு சூத்திரம்.

"இரவு மனைபுகந்த
குறியிடத்தல்லது
கிழவோற் சேர்தல்
கிழத்திக் கில்லை"
[களவியல் சூத்-21]

இதற்குப் பட்டாங்கே பேரில்லாப் பழைய உரைகாரர் கூறும் பொருள் வருமாறு:- "இரவின்கண் மனையகத்து நீங்கிய குறிக்கப்பட்ட இடத்தல்லது தலைமகனைக் கூடுதல் தலைமகட்கு இல்லை. இத் தெளிவுரையோடு இச்சூத்திரத்தை வழிமுறையாகப் பண்டிதர் இன்றும் இளைஞருக்குப் பாடம் சொல்லி வருகின்றனர்.

இதில் சூத்திரச் சொல்லுக்கும் அதன் உரைக்கும் மாறுபாடில்லை. ஆயினும் இது அகப் பொருள் நூலின் அடிப்படை மரபுக்கும் அறிவுக்கும் வழக்குக்கும் முற்றிலும் மாறாக முரணுகிறது. மானம்பேணும் குடியில் வளர்ந்த மணவாத பெண்மகள் எவளும் கற்பறக் களவில் காதலனைக்கூட இரவில் கூசாமல் தன் மனைவரைப்பைக் கடந்து புறம் பெயர்ந்து போகத்துணியாள். அறக் காதலோடு அவள் நலம் விரும்பும் ஆண்மகன் எவனும் இரவில் "இல்" இறக்க தன் தலைவியைத் தூண்டான். இறையனார் களவியலுக்கு முதல் நூலான தொல்காப்பியர் களவியலும் இரவில் தலைவி தன் "இல் இகவா" மரபைத் தெளிவாய் வற்புறுத்துகிறது.

"இரவுக் குறியே
இல்லகத் துள்ளும்
மனையோர் கிளவி
கேட்கும் வழியதுவே
மனையகம் புகாக்
காலை யான"
[தொல்-பொருள்-களவு-சூத்-40]

இரவில், தலைவன் தலைவியின் மனையில் களவில் அகம்புகக் கருதுவதியல்பு. கூடாதாயின், அகத்தவர் பேசும் அரவம் கேட்கும் வரைப்பினுள் கூடுவன். படப்பையின் வரம்பைக் கடப்பது வழக்கேயில்லை. இது தொல்காப்பியர் நூற்பாவால் தேற்றமாகிறது. அதற்கு நேர்மாறாக இறையனார் நூலில் இழுக்காம் வழக்கை இயம்பல் வியப்பன்றோ? அதற்கு மேல் இறையனார் நூலில் இதற்கு முன் நிற்கும் சூத்திரத்தோடிது முழுதும் முரணைக்கண்டும் பண்டிதர் இதனைக் கொண்டு கையாள்வது இறும்பூதாகும். "இரவுக்குறியே "இல்" வரை இகவாது," என்பது இதற்கு முந்திய(19ம்)சூத்திரம். அதன் கீழ் இவ்வுரை காரரே, "இரவின்கண் குறியிடம் "இல்" இடத்தைவிட்டு நீங்காது" என்று பொருளும், "இரவுக்குறி வீட்டின் புறத்தன்று" என விளக்கமும் எழுதி உள்ளார். முழுதும் தம்முள் முரண்படும் இவ்விரு சூத்திரங்களையும் இயற்றியவர் ஒரே புலவர்; அவரும் குறையிலா இறைவர். அவ்விரண்டுக்கும் ஒன்றோடொன்று மலைந்து மாறுபடும் பொருள் எழுதியவரும் ஒரே பண்டிதர், என்று கூறப்படுகிறது.

முழுதும் தம்முள் முரணும் கூற்றிரண்டை இருவேறு புலவர் கூறினர், அஃதவருள் கருத்து வேறுபாடென்று கருதலாம். ஒருவரே கூறின், இரண்டும் பிழையாகலாம்; அன்றேல் ஒன்றேனும் வழுவாதல் இன்றியமையாது. இரண்டும் சரி எனல் இயலாது. இங்கு முற்றினும் முரணும் இவ்விரு கூற்றையும் இயையப் பொருத்த இறையனாராலும் இயலாது. இவை இரண்டையும் இயற்றியவர், "இறையனார்" என்னும் இயற்பெயருடைய ஒரு புலவராயிருந்தால், உரைகாரரே இரண்டில் ஒன்றைக் கொள்ளாமல் வழுவெனத் தள்ளியிருப்பார். உரை இலாதிருந்தால், ஒருகால் எழுதுவோர் பிழை என எண்ணவும் கூடும். களவியல் இயற்றியவர் மனிதப் புலவர் அல்லர், நுண்ணுதற் கடவுளே என்று கதை வழங்குவதால், பின் சூத்திரம் அறிவொடு பொருந்தா வழுவே ஆயினும், கடவுட் புலவர் தம் நெற்றிக்கண்ணின் நெருப்புக்கஞ்சிக் குற்றம் கூறத்துணியாமல் உரைகாரர், இயையாக் கூற்றிரண்டையும் அபலே நிறுத்தி, மயலை வளர்க்கும் உரையும் வகுத்தார். இறையனாருக்குப் பித்தர் என்



னொருபெயருண்டு, பித்தர் பிழையைப் பேசுதல் பாபம்; பேசாதுடன்பட்டு மெச்சுதல புண்ணியம். ஆதலால் தம் புரை உரை. தரை உறைவை விலக்கி வடகயிலைமலையேற வழிகாட்டும் எனநினைத்து நெஞ்சறிந்தபொய் உரையை வரைய மனம் துணிந்தார் போலும்.

சூத்திரப் பாடமும் புரை உரையும் எக்கேடும் கெடட்டும். அவ்வழுவை மறுக்காமல் மாற்றாமல் பண்டிதர் பழிபடுவானேன்? மறுக்காமைமட்டோ? படித்த பண்டிதர் இன்றும் அதைப் பாராட்டவும் பார்க்கிறோம். அது அறிவறமா? புல்லறிவா? சொல்லுவதென்? சொன்னாலும் கேட்பவர் யார்? பண்டிதரின் பழி மறைக்க உரைகாரர் புரை சாதுவும் உதவமாட்டா. ஆயும் அறிவும் வாய்மையில் துணிவுமில்லாப் பண்டிதரை மாணவர் வந்திக்கும் வேளையினும் வாய்வாளாது தன்னத்தே நிந்திப்பதியல்பன்றோ?

உண்மையில் பின்னைய சூத்திரம் பிழை என்பது தேற்றம். பொருளறியாமல் ஏடு பெயர்த்தெழுதுவோர், "அகத்து" என்பதை, 'இகத்து'—'இகந்து' என வழுவாய் எழுதியிருக்கலாம். படித்த பண்டிதர் இன்றுவரை திருத்தத் துணியாத பிழையைப் பொருளுணரவேண்டாத எழுத்தாளர் ஆராய்ந்து அறிந்து திருத்தாதது வியப்பன்றே.

"இரவு மனையகத்த குறியிடத்தல்லது கிழவோற் சேர்தல் கிழத்திக்கில்லை." என்றிருந்த மூலபாடம், எழுத்தாளர் அறியாமையால் பிழைபட்டு "மனையிகந்த குறியிடத்தல்லது" என மாறியிருத்தல் வேண்டும். கல்லாது படித்த பண்டிதர் பிழையை அறியாமல் பேணியதால், அது திருத்தப்படாமல் நிலவுகிறது. பழைய பாடம் எதுவாயினும் ஆகுக. வழங்கும் பாடம் அறிவைப்பழிக்கும் என்பது வெளிப்படை.

பானைச்சோற்றைப் பதன் பார்க்கப் பருக்கை ஒன்றே போதும் என்பது பழமொழி. கல்லாப் படிப்பின் பொல்லாங்குணர அறிஞருக்கிங்கே படித்த புலவரின் மறுக்கொணா வழுக்கள் இரண்டை எடுத்துக் காட்டினேன். இன்னும் இப்படிப் புலமைக்கும் அறிவுக்கும் பழிதரும் பிழைகள் பலவற்றை நான் வெளியிட்ட பொருள் படல மூன்றியல்களின் உரையில் குறிப்பிட்

டுள்ளேன். அரும்பழ நூல்களின் பெருமை அழித்து, கற்பவர் உரனைக் கலக்கி வற்றடித்து, தமிழில் வெறுப்பைத் தரும்படி புரை உரைகளைப் பாடமாக்கி, மாணவர் அவற்றையே படித்துரு வேற்றித் தடித்த மனத்தில் தெளிவிலாப் புலவராய்த்திரியக்காண்குவம். கற்றறிவு பெற்றுக் குற்றம் உணராமல், படித்து மடம்பட இளைஞரைப் பண்டிதர் பயிற்றுகின்றனர்.

குறை அறியாதவர் திருந்த வழிகாணார். அயலவர் அறிவால் பயனுறக்கண்டும், அறிவை வளராதபடிப்பையே பண்டிதர் இன்றும் கொண்டாடுவர். "தீதொரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு" அறிவைத் தருவது கல்வி. கல்லாமல் நூல்களை எல்லாம் படிப்பினும் உதவாச்சுமையாய்ச் செருக்கைப் பெருக்கும்.

"உளர் என்னும் மாத்திரையர்
அல்லால் பயவாக்
களர் அனையர் கல்லாதவர்"

[குறள் 406]

"விலங்கொடு மக்கள்
அனையர், இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்."

[குறள். 410.]


**காளீஸ்வர் மில்ஸ்**

இராமமூர்த்தி ரோடு, விருதுநகர்.

குறைந்த கூலி

விரைந்து வாருங்கள்

ஐயா,

எங்கள் மில்லில் கோதுமை, மக்காச்சோளம், கோடைச் சோளம், கேப்பை, கம்பு, கடலை, அரிசி முதலிய இதர தானியங்களையும் மாவாகவும், ரவையாகவும் நன்றாக அரைத்துக்கொடுக்கப்படும். நெல்லும் அரைத்துக் கொடுக்கப்படும்.

துவரை, உளுந்து, கடலை, பாசிப்பயறு, தட்டப்பயறு, கல்பயறு, மொச்சைப்பயறு, முதலிய இதர பயறு வகையராக்களையும் பருப்பாக உடைத்துக்கொடுக்கப்படும்.

எள், நிலக்கடலை, தேங்காய், கொட்டைமுத்து முதலியவைகளை சுத்தமாக எண்ணெயாக ஆட்டிக்கொடுக்கப்படும்.

தங்களன்புள்ள,

பி. வி. எஸ். கே. ராமையா.


# நாகப்பனின் மறு மலர்ச்சி

—[ S. K. சூரியன். ]—

மருதூர் வளப்பமான கிராமந்தான். ஆனாலும் அவ்வூர் மக்கள் வறுமையால் வாடினார்கள். அவர்களில் ஒருவன் நாகப்பன். அவன் சிறுவயதிலேயே தந்தையை யிழந்தான். தாய் கூலி வேலை செய்து அந்தச் சிறிய வருமானத்தைக் கொண்டு நாகப்பனையும் அவன் தங்கை காமாட்சியையும் காப்பாற்றி வந்தாள். நாகப்பன் எழுதப்படிக்கவாவது கற்றுக்கொள்ள வேண்டும் என்று அவனுடைய தாய் விரும்பினாள். துன்பத்தோடு துன்பமாக அவள் அவனைச் சிறிது படிக்க வைத்தாள். வயது வந்தவுடன் நாகப்பனும் கூலி வேலை செய்து சிறிது சம்பாதித்தான். தாயும் மகனும் உழைத்ததினால், குடும்பம் ஒருவாறு கஷ்டமின்றி நடைபெற்றது.

நாகப்பன் வாலிபனானான். நல்ல கூலி கிடைத்தது. குடும்பச் செலவுக்குப் போகச் சிறிது மீந்தது. தாய் வேலை செய்வது அவனுக்குச் சம்மதமில்லை. தாயையும், தங்கையையும் வீட்டிலிருந்து கவனித்துக்கொள்ளும்படி வைத்து அவன் ஒருவனே உழைத்து வந்தான். அவன் நன்றாகப் பாடுவான். புல்லாங்குழல் வாசிப்பான். அவ்வூர் முழுதும் நாகப்பனைப் புகழ்ந்தது. திடீரென்று ஊரில் வைசூரி பரவிற்று. நாகப்பனுக்கும் வைசூரி கண்டது. வைசூரியின் கொடுமையால் அவன் கண்கள் ஒளியிழந்தன. நாகப்பன் மனம் வருந்துகிறான். 'தாயையும், தங்கையையும் எப்படிக் காப்பாற்றுவேன்' என்று மனம் வெதும்பினான். தாயும், தங்கையும் கூலி வேலை செய்து குடும்பத்தை நடத்தி வந்தார்கள். நாகப்பனுக்கு மனம் பொறுக்கவில்லை. ரயிலில் பாடி பணம் சம்பாதிக்கத் தொடங்கினான். அவன் தாய் அவனுக்கு ஒத்தாசை செய்தாள். குடும்பம் ஒழுங்காக நடைபெற்றது. ஒரு நாள் அந்தத் தாயும் இறந்து விட்டாள். காமாட்சி பருவமடைந்து வீட்டிலிருந்தாள். குடும்பம் நடப்பதற்கு வேறு வழியில்லாமல் பருவமெய்திய தங்கையைத் துணைக்கு வைத்துக் கொண்டு ரயிலில் பிச்சை எடுக்கத் தொடங்கினான். காமாட்சி பார்வைக்கு அழகாயிருந்ததால், அவளைச்சுற்றி சில போக்கிரிகள் வட்டமிடத் தொடங்கினார்கள். ஒரு நாள் தமையனும், தங்கையும் பிச்சையெடுத்துவிட்டு ரயிலடியிலிருந்து திரும்பும் பொழுது மழை

பிடித்துக்கொண்டது. நாகப்பன் காய்ச்சலில் விழுந்தான். அவன் மனம் தத்தளித்தது. காமாட்சியைக் கல்யாணம் செய்து கொடுக்கும்வரையிலாவது தான் உயிரோடிருக்க வேண்டுமே என்று ஏங்கித் தவித்தான். சில நாட் கழித்து உடம்பு குணமானதும் மறுபடியும் அவர்கள் ரயிலுக்குச் சென்றார்கள். அன்று ரயிலில் மிகுதியான கூட்டம். நாகப்பன் நன்றாகப் பாடினான். பட்டிக்காட்டான் மிட்டாய்க்கடையை முறைத்துப் பார்ப்பதுபோல ஒரு சிப்பாய் அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு அவர்கள் இறங்குகிற இடத்திலேயே அவனும் இறங்கினான். இருவரும் போய் உட்கார்ந்த திண்ணையில் அவனும் போய் உட்கார்ந்தான். சிப்பாய் குருடனோடு பேசத் தொடங்கினான். நாகப்பன் அந்தச் சிப்பாய் தன் அத்தை மகன் நடேசன் என்பதைத் தெரிந்து மகிழ்ச்சியடைந்தான். நடேசன் பட்டாளத்தில் சேர்ந்து பல வருஷங்களாகி விட்டன. அவனுக்கும் இவர்களைத் தவிர வேறு உறவினரில்லை. கொஞ்ச நாட்கழித்து நடேசனும் காமாட்சியும் மனமொத்த தம்பதிகளானார்கள். மலரும் மணமும் போன்ற அவர்களுடைய இல்லற வாழ்க்கையை நாகப்பன் மனக்கண்ணாலேயே கண்டு மகிழ்ச்சியடைந்தான்.

---


## தி இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
வடக்கு பீச் ரோடு, மதராஸ்.

மதராஸ் ஆபீசுகள்:- எஸ்பிளனேட், எழும்பூர்,
திருவல்லிக்கேணி, மவுண்ட் ரோடு, மயிலாப்பூர்,
ராயப்பேட்டை, தியாகராய நகர், புரசைவாக்கம் & ராயபுரம்.

சென்னை ராஜதானியின் எல்லா இடங்களிலும்,
பம்பாயிலும் கிளைகளும் சப் ஆபீசுகளும் உண்டு.

அயல் நாடு கிளைகள்:- கோலாலம்பூர், பினாங்கு, சிங்கப்பூர்.

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 72,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 53,00,000 |
| ரிஸர்வ் நிதி | ரூ. 62,00,000 |

சகலவிதமான பாங்கிங் அலுவல்களும் ஏற்கப்படும்.
விபரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது விண்ணப்பிக்க.

**என். கோபால அய்யர்**, காரியதரிசி.


# தமிழில் எரிமலைகள்

—[ தா. நரசிம்மன். ]—

கவிஞர்களும் காலமுணர்வோர்கள். அவர்கள் தம் காவியங்களால் நம்மையும் தீர்க்க தரிசிகள் ஆக்க முயல்கின்றனர். சாதாரண நூல்களாலல்ல — வெறி கொண்டு எழுதப்பட்ட நூல்களால்! பழங்காலத்துத் தமிழ் நடையில் தமிழ் வெறியோடு தீட்டப் பட்டது 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்.' புதிய தமிழில் 'எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு,' விளங்கக் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமல் தீட்டப்பட்டது 'பாஞ்சாலி சபதம்.'

எல்லாக் கவிஞர்களுக்குமே நடையிலே செருக்கு உண்டு. ஆனால் பாரதி, இளங்கோ-இவர்களின் நடைச்செருக்கு உலகத்துக்கே ஒரு புதுமை! அவர்கள் நடைச் சிறப்புக்கு இருபெண்களே காரணம்!

“செம்மையின் இகந்தசொல்
தென்னவன் தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ
இனைந்தேங்கி அழிவலோ”

—என்றும்,

“காய்சினந் தணிந்தன்றிக்
கணவனைக் கைகூடேன்
தீவேந்தன் தனைக்கண்டித்
திறங்கேட்பல் யான்” என்றும்

வீரமுழக்கி இளங்கோவைக் கவர்ந்தாள் கண்ணகி!

—“நிலை
சாயப் புலைத்தொண்டு
சார்ந்திட்டால்-பின்பு
தார முடைமை
அவர்க்குண்டோ!” என்றும்,

—“மன்னர்
சௌரியம் வீழ்ந்திடு
முன்னரே—அங்கு
சாத்திரஞ் செத்துக்
கிடக்குமோ?” என்றும்,

பெண்மை வாயால் பெண்ணரசு கேட்டுப் பாரதியை ஈர்த்தாள் பாஞ்சாலி. அது பழங்கதைதான். ஆனால் புது வேகம்! புரட்சிக் கருத்துக்களால்,

“முன்பிருந்ததொர்
காரணத்தாலே
மூடரே பொய்யை
மெய்யெனலாமோ?” எனச்

சொல்ல எழுந்தது! இரு புலவர்

களும், பெண்களுக்கும் அரசு முறைமைக்கும் உள்ள தொடர்பை உலகுக்கெடுத்துக் காட்டுகின்றனர். பாரதியார் பெண்மையின் உயர்வை ‘அறுபத்தா’றில்

“ஆணெல்லாம் கற்பை
விட்டுத் தவறுசெய்தால்
அப்போது பெண்மையுங்
கற்பழிந்திடாதோ?” என்கி

ருர். அவர்களுடைய காவிய நோக்கம் அதாகவுந்தான் இருக்கவேண்டும். சிலப்பதிகாரத்தில் மதுரைக் காண்டத்தின் பிற்பகுதியில் தான் கதை மிக விறு விறுப்பாக இருக்கிறது. அதேபோல் பாஞ்சாலி சபதத்திலும், ‘துகிலுரிதற் சருக்க’த்தின் கடைப் பகுதியும், சபதச் சருக்கமும் மிக்க விறுவிறுப்புடையவை. அவற்றை மீண்டு சுருக்கமாகக் காண்போம்.

கதை எழுதுவோர் திறன் அக்கதையைப் படிக்கும் போதே சிந்தனையைக் கிளறிக் கதையின் பிற்பகுதியை அறியத் தூண்டுவதில் விளங்கும். இருபுலவர்களும் தங்காவியங்களில் இத்திறனை நன்கு புலப்படுத்துகின்றனர்.

திருதராட்டிரன், பாண்டவரைச் சூதுக் கழைக்க விதுரனை ஏவுகிறுன். அதன் குறிப்புணர்ந்த விதுரன் அப்போதே,

“போச்சுது! போச்சுது
பாரத நாடு!
போச்சுது நல்லறம்
போச்சுது வேதம்!

ஆச்சரியக்கொடுங் கோலங்கள் காண்போம்! என்கிறுன். பாரதியார் நிகழவிருக்கும் பாரதப்போரை அடிக்கடி இவ்வாறு விதுரன் வாயிலாக மிக அழுத்திக் கூறுகிறுர்.

கொலைக்கஞ்சாத களிமகன் ஒருவன் தன் கையில் வெள்ளிய வாளேந்தி எறிந்தான்! கோவலன் உடல் துணிக்கப்பட்டது! துணியுண்ட புண்வழியே குருதி கொப்புளித்துப் பரவுகிறது. அந்த இடத்திலேயே இளங்கோவுக்கு, கண்ணகியின் துயர் நினைவில் உறுகிறது. உடனே ‘மண்ணக மடந்தை வான் துயர் கூர’ என்று ஆயர் சேரியிலிருந்த கண்ணகியின் உள்ளத்தைக் காட்டுகிறுர். அத்துடன் நிற்கவில்லை. பண்டை ஊழ்வினை முதிர கோவலன் வீழ்த்தப்படுகிறுன். அதற்குப் பாண்டியன் கொலைக் கருவியாகிறுன். பாண்டியன் நெடுஞ்செழியனின் செங்கோல் அன்றே பிழைத்ததென்பதையும், ‘காவலன் செங்கோல் வளைஇய’ என்கிறுர்.

கடைசியாகச் சூதில் வைத்திழப்பதற்கு மின்னும் அமுதமும் போன்ற திரௌபதி இருக்கிறுள். சகுனி தந்திரமாக “அவள் துன்னும்



அதிட்டம் உடையவள்” என்றுரைத்து, தருமனை வஞ்சித்து, வெற்றி பெறுகிறுன். தீயவர் ஆர்க்கின்றுர், இந்தப் பெண்ணையுங் கைவசமாகச் செய்தான்’ எனக் களிக் கூத்தாடுகிறுர். துரியன், அவளைச் சபைக்கு அழைத்துவர ‘அரியோன் விதுர’னுக்குரை செய்தான். விதுரன் பெரிதும் சினங்கொண்டு “மாபாரதப் போர்வரும், நீரழிந்திடுவீர்” எனக்காய்கிறுன். துரியன் நகைத்து ஒரு தேர்ப்பாகனை அனுப்புகிறுன்.

பாரதியார் திறத்தையெல்லாம் கொட்டி ஆவேசத்தோடு பாடுங்கட்டம் வந்து விட்டது. தேர்ப்பாகன் பாஞ்சாலியை அழைக்கிறுன். அவள் சூதுகேட்டு வருந்துகிறுள். சினத்திலும் வருத்தமே மிகுந்திருத்தலால் அவள் அவனைத் ‘தம்பி’ என்றழைத்து நீதி கேட்கிறுள். பாரதியாருக்கு, தருமன் நாட்டை வைத்திழந்தபோதே கடுங்கோபம்.

“ஆயிரங்களான-நீதி
அவையுணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான்-சிச்சி!
சிறியர் செய்கை செய்தான்”

என்று சீறுகிறுர். திரௌபதியை இழந்ததும் வீமன் வெய்ய நாகம் போல் மூச்செறிந்து,

“இது பொறுப்பதில்லை-தம்பி!
எரிதழல் கொண்டுவா!
கதிரை வைத்திழந்தான்-அண்ணன்
கையை எரித்திடுவோம்”

என்று குமுறிக் கூறுகிறுன். அந்த வேகத்தையும் மிஞ்சுகிறது இங்கே. நெருப்புக் குழம்பு பொங்கிப் பாய்கிறது. பாஞ்சாலி,

“என்னை முன்னே கூறி
இழந்தாரா? தம்மையே
முன்னம் இழந்து முடித்
தென்னைத் தோற்றாரா? —
தெரிந்துவா” என்கிறுள்.

சாதாரண எந்தப் பெண்ணும் இந்தக்கேள்வி-நீதி-கேட்டல் இப்போது அரிது! பாரதியார் பாஞ்சாலியைத் தன் கற்பனையில் தோற்றமளித்த ‘புதுமைப் பெண்’ணைக் காட்டுகிறுர்.

தேர்ப்பாகன் சபைக்குச் செல்கிறுன். துரியன் அவள் வாராமை கண்டு பொங்கி,

“கூண்டிற் பறவையு
மல்லளே-ஐவர்
கூட்டு மனைவிக்கு
நாணமேன்?” என்கிறுன்.

அப்போது பாண்டவர்களின் மனநிலை எவ்வாறு இருக்கும்? அதைப்

பாஞ்சாலி சபதத்தில் தெளிவாகக் காணமுடியவில்லை என்றுதான் எனக்குப்படுகிறது! மீண்டும் தேர்ப்பாகன் பாஞ்சாலிமுன் வருகிறான். "என்கணவர் புலைத் தாயத்திலே விலைபட்டபின் என்ன சாத்திரத்தால் என்னைத் தோற்றிட்டார்? தோற்றபின் தாரம் உடைமை அவர்க்குண்டோ? உங்கள் அரசசபையிலே சாத்திரம் செத்துக் கிடக்கிறதா? அரசர் தாம் அறமாட்சியைக்கொன்று களிப்பரோ? கேட்டுவா" என்று அப்பெண் பிழைத்த அரசனை, நீதிகேட்கிறாள் அதுதான் மரபாக வேண்டுவது!

இம்முறை தேர்ப்பாகன் வரவில்லை. ஆண்தகையற்ற புலையன் துச்சாதனன் வருகிறான். அப்போதும் பாஞ்சாலி, "இது மன்னர் குலத்து மரபோகாண்? ஏகுக நீ" என்றிட்டாள். ஆனால்-ஐயோ!-நிகழ்ந்ததென்ன? அவன், அரசன் மகள் கூந்தலினைக் கையினால் பற்றிக்கரகரெனத் தானிழுத்தான்! வழிநெடுக [illegible]ரவர் அக்காட்சியைப் பார்த்திருந்தார். பாரதி அப்பேதையர் வாழ்வை எள்ளி நகைக்கிறார்.

"வீரமிலா நாய்கள்
விலங்காம் இளவரசன்
தன்னை மிதித்துத்
தராதலத்திற் போக்கியே
பொன்னை அவளந்தப்
புரத்தினிலே சேர்க்காமல்
நெட்டை மரங்களென
நின்று புலம்பினார்"

என்கிறார். அக்காட்சியை எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும் உள்ளம் சிலிர்க்கிறது! கவியின் காட்டாறு வேகம்!

கோவலன் கொலையுண்டான். ஆயர்சேரியிலும் பல உற்பாதங்கள் நிகழ்ந்தன. ஆய்ச்சியர் குரவையாடினர் துயர்தீர. பிறகு மாதரி முதலானோர் வையைக்குச் செல்கின்றனர்' அப்போது ஒருத்தி,

"கரையாமல் வாங்கிய
கள்வனாம் என்றே
குரைகழல் மாக்கள்
கொலைகுறித் தனரே".

என்கிறாள். அது கேட்டு, கண்ணகி பொங்கி எழுந்தாள், விழுந்தாள்... செங்கண் சிவப்ப அழுதாள். துயரம், சினம் இரண்டும் அவளைச் சூழ்ந்தன. அவள் 'கற்புக் கடம்பூண்ட தெய்வந்'தான். ஆனால் கணவன் இறந்தது கேட்டலும் உயிர்துறக்கவில்லையே! அதன் காரணத்தை இளங்கோ மிக அழகாகச் சித்திரிக்கிறார். அங்குதான் தெரிகிறது அவர் புரட்சியுள்ளம்!

[தொடரும்.]

---

# அன்பினால் ஏற்படும் தீமைகள்

[ ந. புஷ்பம்மையார். ]

"குழந்தையை எவ்வளவு செல்வமாக வளர்த்தேன்! என்ன கேட்டாலும் இல்லையென்று சொல்லாமல் வாங்கிக் கொடுத்தேன். அவன் அப்பா விதவிதமான மிட்டாய்களும் பண்டங்களும் தவறாமல் வாங்கிக்கிக் கொடுப்பார். குழந்தைக்கு நாங்கள் ஒரு குறையும் வைக்கவில்லை. மாயமாய் மறைந்து விட்டானே! குழந்தை பத்து நாட்களாகப் பட்ட பாட்டை காணச் சகிக்கவில்லை. எத்தனை டாக்டர்கள்! மருந்து புட்டிகளுக்குத்தான் கணக்குண்டா? வேண்டிக்கொள்ளாத தெய்வமில்லை. பூஜை செய்யாத கோவில் இல்லை. கடவுளுக்கும் கண்ணில்லாமல் போய் விட்டதே" என்று கதறுகிறாள் தன் பாலனை காலன் வாய்ப் பறிகொடுத்த ஓர் அன்னை.

பிள்ளைவளர்க்க நான் எவ்வளவு அரும்பாடு பட்டேன்; வெயிலென்றும் மழையென்றும் பாராமல் உடம்பை ஒடித்து வேலை செய்தேன் அவனுக்காக. கடன்பட்டாகிலும் அவன் கேட்டவைகளையெல்லாம் வாங்கிக் கொடுத்தேன். யாராவது அவனைத் தொட்டுவிட்டால் லேசில் விடுவேனா? 'பிள்ளைச் சண்டைக்கு இப்படிக் கச்சை கட்டுகிறாளே' என்று பிறர் சொன்னாலும் அவனை அடித்தவர்களை நையப் புடைத்துவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பேன். அவ்வளவு அருமையாக வளர்த்து என்னபயன்? நேற்று வந்த பெண்டாட்டி சொல்லைக் கேட்டுக்கொண்டு தள்ளாத வயதில் சாப்பாடு போட மாட்டேனென்கிறான். எடுத்ததற்கெல்லாம் என்னை அடித்து நொறுக்குகிறான் அவன் விளங்குவானா! என்று உள்ளங்கொதிக்க சாபமிடுகிறாள் ஒரு தாய்.

என் பெண் பெரிய இடத்தில் வாழ்க்கைப்பட வேண்டுமென்ற ஆசையால், அவள் படிப்பையும் நிறுத்திவிட்டு பணக்கார வீட்டில் கலியாணம் செய்து கொடுத்தேன். நிலபுலங்களை விற்றுத் தகுதிக்கு மேல் சீர்வரிசைகள் செய்தேன். அவளுடைய தலையெழுத்து இப்படியா ஆகவேண்டும்! அவளைப் படுத்தாத பாடுபடுத்தி முடிவில் நகைகளையும் பிடுங்கிக்கொண்டு வாழாவெட்டியாக அனுப்பி விட்

டார்கள். 'படித்துக் கொண்டிருந்த என்னை இந்தத் துன்பத்திற்கு ஆளாக்கி விட்டாயே! இனிமேல் நான் என்ன செய்வேன்? என்று கவலைப்படுகிறாள் அவளுடைய தலைவிதி அப்படி இருக்கும்போது நான் என்ன செய்யமுடியும்? என்று விதியின்மேல் பழியைப் போடுகிறாள் பெண்ணைப் பெற்ற புண்ணியவதி.

பையன் சென்னையில் படிக்கிறான். விரைவில் பெரிய உத்தியோகம் பார்ப்பானென்று பெருமையடித்துக் கொண்டேன். எவ்வளவு பணம் கேட்டாலும் பணத்தை பணமென்று பாராமல் அனுப்பி வைத்தோம். என்ன செலவழிக்கிறாய் என்று ஒரு வார்த்தை கேட்டதுண்டா? மகன் உலகுக்கெல்லாம் உத்தமனாகவும் கற்றவர்க்குள் களஞ்சியமாகவும் விளங்க வேண்டுமென்ற ஆசைதான் ஆசையெல்லாம் நிராசையாகிவிட்டது. குடிகாரனாகவும், முரடனாகவும், மூர்க்கனாகவும் திரிகிறான். இப்படிப்பிள்ளையைப் பெற்றதைவிட பெருமலாவது இருந்தேனே! என்று குமுறுகிறாள். பிள்ளையின் தீச்செயலைக் கண்டு கலங்கிய பெண்மணி.

கலியாணமான புதிதில் இருந்தது போலக் கணவன் என்னிடத்தில் இப்பொழுது அன்பாக இருப்பதில்லை. அவருடைய அன்பு வேறெங்கோ திரும்பிவிட்டது போலும் என்று சந்தேகப்பட்டேன். என்னுடைய சந்தேகக் கண்ணுக்கு அவருடைய செயல்களெல்லாம் தவறாகப் பட்டது. அவருடைய அன்பைப் பூரணமாகப் பெறவேண்டுமென்ற ஆசையால் இரகசியமாக நகைகளை விற்று வசிய மருந்து வாங்கிக் கொடுத்தேன். என்னுடைய செயலே எனக்குக் கூற்றாக முடிந்தது. நகைகளையும் இழந்தேன். இனிமேல் எனக்குப் புகலிடமேது! என்று தன் செய்கை இதயத்தை வாள்போலறுக்க பச்சாதாபப் படுகிறாள் ஒரு மாது.

இவ்வாறான பெண்களின் அபயக்குரல் நமது நாட்டில் சாதாரணமாகத் தினம் தினம் எழுவதைக் கேட்கிறோம்.

ஆயினும் அவைகளுக்கு அடிப்படையான காரணம் யாது? அவை மேலும் நிகழா வண்ணம் நாம் யாது செய்யவேண்டும்? என்று அநேகமாக நாம் சிந்திப்பதில்லை.

ஏதோ தலைவிதி, தெய்வக் குறை, எங்கும் நடப்பதுதானே என்று மீண்டும் மீண்டும் அதே துன்பங்களுக்கு ஆளாவதைத் தவிர அதை நிவர்த்திப்பதற்கு வழிதேடுவதில்லை.

ஆராய்ந்து பார்க்குங்கால் இம்மாதிரியான தீங்குகளுக்கெல்லாம்



மூலகாரணமாகஇருப்பதுபெண்கள் தங்களுடைய அறியாமையாலும் ஆசையினாலும் அன்பைத் தவறான வழியில் செலுத்துவதாகும்.

தாய்க்குக் குழந்தைகளிடத்திலும் மனைவிக்கு கணவனிடத்திலும் அன்பும் அபிமானமும் இருத்தல் இயல்பே. எனினும் அவ்வன்பு சரியான வழியில் அளவாகச் செலுத்தப்படாவிடின் தீமை பயப்பது திண்ணம்.

"அறத்திற்கே அன்பு-
சார்பு என்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை"

என்ற திருக்குறளில் இக்கருத்தும் விளங்குவதைக் காணலாம்.

பிள்ளைகள் மேலுள்ள அன்பினாலே கண்டவைகளையெல்லாம் வாங்கி ஊட்டி நோய்க்கு விதையூன்றி, சில தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எமனாகின்றனர்.

திருத்தி வளர்க்க வேண்டிய இளமையில் அநாவசியமாகச் செல்லங்கொடுத்து பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கையைப் பாழாக்கி விடுகின்றனர் பல அன்னைமார்!

ஆசையுடன் பிள்ளைகளுக்கு நகைகளைப் பூட்டி அவர்களைத் திருடன் கைக்கு இலக்காக்கி விடுவதும் தாய்மார்களின் செயல்களே!

மேலும் தம்பதிகளுக்கிடையே அன்பை முறையாகச் செலுத்தாததாலும் அறியாமையாலும் ஏற்படும் தீமைகளும் சச்சரவுகளும் பலபல ஆகும்.

ஆகவே அன்பினாலும் எதிர்காலத்தில் தீமை விளையாதிருக்கும் வகையில் அன்பைச் செலுத்த வேண்டிய இடத்தில் மிகவும் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொள்ளவேண்டும்.

---

மேற்கண்ட கருத்துக்களை விளக்கும் சிறுகதைகள் தென்றல் இதழ்களில் தொடர்ந்து வெளிவரும்.

**காளி மார்க் சோடா கலர்**

தேகாரோக்கிய முள்ளவை

**விருதுநகர் : : திருநெல்வேலி.**

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

## மதுரை மில்ஸ் கம்பெனி லிமிட்.,

மதுரை—தூத்துக்குடி—அம்பாசமுத்திரம்.

| 5,00,000 நூற்கும் கதிர்கள் | நெம்பர் 80வரை நூல்கள் |
|---|---|

**நாங்கள் சப்ளை செய்வது:**

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்குவேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.





# நாமும் சூரிய குலமே

பேராசிரியர்:
திரு. ஈ. த. இராசேசுவரி அம்மையார்.
எம். ஏ., எல். டி.

## மனிதச் சுரங்கம்

தரை மகள் மட்டும் சூரிய குலம் என்று கூறினால் போதாது. நாம் ஒவ்வொருவரும் சூரிய குலமே. சூரியனில் உள்ள பொருள்கள் தரையில் கிடப்பது போல, நம் உடலிலும் கிடக்கக் காண்கிறோம். ஆம்; நம் உடலில் பல சுரங்கங்கள் உண்டு. பல பல பொருள்கள் அங்கே பொங்கி வழிகின்றன. ஓர் ஆசிரியர் இதனை வேடிக்கையாக விளக்குகின்றார். இந்த உடம்பில் – இந்த எட்டு அடி குச்சுக்குள் – ஆறு மணங்கு பொதி மூட்டைக்குள் – என்ன என்ன கிடைக்கும்? தரையில் இருப்பது போலே இங்கும் தண்ணீரே பெரும் பகுதி. பாலைவனத்தில் போனாலும் இந்த எட்டுச் சாணுக்குள்ளே பத்துக் காலன் (Gallon) அல்லது 3 பெரிய மரக்கால் தண்ணீருக்குப் பஞ்சமில்லை. "என்னடா கொழுப்பா?" என்று பலர் ஏசுவது நம் காதில் விழுந்திருக்கும் அல்லவா? இவ்வாறு வைவதிலும் உண்மை இல்லாமல் இல்லை. உடம்பில் கிடைக்கும் கொழுப்பை எடுத்தால் 14 அடி சவக்காரம் அல்லது சோப் (Soap) செய்யலாம். துணியைத் தோய்க்கும் சவக்காரத்தினைத் தண்டு தண்டாக விற்கிறார்கள். இத்தகைய 7 தண்டு சவக்காரம் பண்ண இது போதும். இம்மட்டுமா! இந்த உடம்பு ஒரு உப்புச் சுரங்கமே. இதில் உப்புப் பூப்பதை நாம் காணவில்லையா? நாய்க்கும் தெரியும் நம்முடைய சுவை. பேதி மருந்தாக ஒருமுறை குடிக்க இங்கே கிடைக்கும் உப்புக்கள் போதுமாம். பேதி உப்புகளேயன்றி வேறு மருந்தும் கிடைக்கும் பலசரக்குக் கடையே நம் உடம்பு. எந்தத் துரைத்தனத்தின் உத்தரவும் இல்லாமலே இங்கே கந்தகத்தையும், எரிகந்தகத்தையும் பெறலாம். கடையில் விற்கும் ஒரு பொட்டலம் மாத்திரைகள் செய்ய (*One packet sulphur tablets*) நமது உடம்பிலுள்ள கந்தகம் போதும். இங்குள்ள எரிகந்தகத்தை எடுத்தால் 2000 தீக்குச்சிகள் செய்யலாம்.

## கரியுகம்:-

மருந்துமட்டுமா கிடைக்கும்? நாம் வாழ்கின்ற இந்தக் காலத்தை 'இரும்புக்காலம்' என்று சொல்லுகிறார்கள். இந்த இன்றியமையாத பொருள் நம்முடைய உடம்பிலும் உண்டு: இங்குக் கிடைப்பது கொண்டு இரண்டு அங்குல நீளமுள்ள ஆணி செய்யலாம். இவ்வளவும் உலக வாழ்விற்கு வேண்டும். வைரக் கல்லுக்கேயன்றி உயிர் அணுவுக்கே அடிப்படை கரிதான். எவ்வளவு கரி நம் உடலில் கிடைக்கும்? நம் உடம்பில் உள்ளதை எடுத்தால், 9000 பென்சல் அல்லது எழுதுகோல் செய்யலாம். நம் சென்னையில் 90,000 குழந்தைகள் படிக்கின்றார்களாம். இவர்களுக்கு 10 ஆட்கள் போதும்; அவர்கள் உடம்பிலுள்ள கரியை உருட்டினால் இவர்களில் தலைக்கு ஒரு பென்சல் தரலாம். எடுக்கத்தான் சித்த முறை ஒன்றும் நமக்குத் தெரியாது. இவை நம் உடம்பில் எவ்வாறு இருக்கின்றன என்பதை இனிக் காணவேண்டும்.

## பழைய கடல்

முதலில் உயிர்ப்பொருள் வளரத் தொடங்கியது தண்ணீரில்தான். மச்சாவதாரம் அன்றோ முதலவதாரம்? உலகம் முழுவதும் நீராய் இருந்த காலமும் உண்டு. கடலில் உள்ளது உப்புத் தண்ணீர். உப்புத் தண்ணீரில் வளர்ந்தன உயிர்கள். இன்றும் நாம் உப்புத் தண்ணீரிலேயே வளர்கிறோம். தரைமேல் வாழ்ந்தாலும் நம் இரத்தம் உப்புத் தண்ணீரேயாம். அதிலே உயிரணுக்கள் மிதக்கின்றன. பழைய கடல் வாழ்வு காலத்திற்கேற்ப மாறி உள்ளது. கடல் மாறிவிட்டது. நம் இரத்தம் மாறாது அன்றிருந்தது போலவே இருக்கிறது. தரையில் உள்ள உப்புக்களை ஆறுகள் கரைத்துக் கொண்டு போய்க் கடலில் தள்ளுவதால் கடலில் உப்பு மிகுதியாகிக் கொண்டே வருகிறது. பழைய கடலின் உப்பு நிலையை அறிய வேண்டுமானால் நம் இரத்தத்தையே ஆராய வேண்டும். வேர்த்துப் போகும் போது தண்ணீர் வெளிவந்து விடுகிறது. இரத்தத்தில் தண்ணீர் ஆவியாகப்போக உப்பு நிலை மிகுகிறது. 'இந்த மிகுதிப்பாட்டினைக் குறைக்கத் தண்ணீர் வேண்டும்' எனத்தெரிவிப்பதே நீர் வேட்கை. நீரில் வாழும் உயிர்களுக்குக் கடல் போல நம் உடல் முழுதுக்கும் இரத்தமானது வேதி நிலையைப் பிறழாது காக்கும் பெருங்காவலாக உள்ளது.

## உப்பு மாளிகை

தரைபோலக் கடலை நாம் தாங்கிக்கொண்டு விளங்குகிறோம். கடலில் உள்ள உப்புகள் எல்லாம் இரத்தத்திலும் உண்டு. கறியுப்பு



என்பது கடல் நீரைக் காய்ச்சி நாம் பெறுவது. இதில் சோடியம் என்ற உலோகமும் க்ளோரைன் என்ற பொருளும் உண்டு. சோடியம் என்பது இருதயத்துடிப்பினை அடக்கி ஆளுவது. க்ளோரைன் என்பது இரைப்பையில் பாயும் ஒரு சாறு; இந்தச் சாறு ஒரு மஞ்சட்காடி; இதுவே சீரணம் செய்ய உதவுவது. கடலில் பொட்டாஷியம் என்ற சாம்பல் உப்பும் உண்டு. இது இரத்த அணுக்களுக்கு இன்றி அமையாது வேண்டும். ஹைட்ரஜன் ஸைனட் என்ற நஞ்சு நம் உணவுப் பொருள்களிலிருந்து கல்லீரலில் போய்ச் சேரும். இரங்கூன் பயறில் இந்த நஞ்சு மக்களைச் சில போது கொல்வதாகப் படிக்கின்றோம் அன்றோ? இந்த நஞ்சினை நீக்கித் தொலைக்கச் சாம்பலுப்பு வேண்டும். அதுவும் இரத்தத்தில் உண்டு.

## அச்சாணி

ஐயோடைன் என்பது சிவப்பு நீல நிறமானது. இதனை மருத்துவர் சாராயத்தில் கரைத்து வீக்கத்திற்குப் பூசக்காண்கின்றோம். நம் உடலில் நெஞ்சுக் குழிக்கு மேலாக உள்ளே உள்ளது நெஞ்சு சுரப்பி (Thyroid gland) ஆம். அதனுள் ஒரு சாறு சுரக்கிறது. அதனால்தான் சுரப்பி என்று பெயர். இது ஐயோடினை விளைவித்து இரத்தத்தில் பாய்ச்சுகிறது. ஒரு கிராமில் பத்து லக்ஷத்தில் ஒரு கூறே ஒரு நாளைக்கு நமக்கு வேண்டும். எவ்வளவு சிறிய அளவு! ஆனால் எவ்வளவு இன்றி அமையாதது! நம் உடலில் உள்ள பல பொருள்களையும் நிலை பிறழாமல் வைப்பது இதுவேயாம். உடல் வளர்ச்சியும் இதனைப் பொறுத்ததே. பருத்த உடல் முதலிய கேடுகள் இதன் கேடால் எழும். மனவளர்ச்சிக்கும் இது வேண்டும். இது மிகுதியானால் உயிரியம் மிகுதியாகச்செலவாகும் இது உடலின் இயக்கம் எல்லை கடந்து செல்லும். இது குறைந்தால் தளர்ச்சியும் சோம்பலும் ஊக்கக் குறைவும் பெருகும்.

## சிலசஞ்சீவிகள்

மாக்னீஷியம் என்பதும் ப்ளோரைன் என்பதும் இவ்வளவு சிறிய அளவிலேயே உடலுக்கு வேண்டும். இவை இரத்தத்தில் இருக்கவேண்டும். நரம்பு கிளர்ச்சி எல்லை கடவாதிருக்க இவை இன்றியமையாது வேண்டப்படும். ப்ரோமைன் என்பதும் வேண்டும். இழுப்பு வருமானால் இதுவே நல்ல மருந்து. வாழ்வினை இனிமையாக்கும் சஞ்சீவி இதுவே எனலாம். மாங்கனீசு என்பது தாய்மைப் பண்புக்கு அடிப்படை. இதனைக் குறைத்தால் எலிகள் குட்டிபோடுவதில்லை. குண்டிக்காய் அல்லது மாங்காய் என்று கூறும் உறுப்பிலும் ஒருசுரப்பி உண்டு. இந்த மாங்காய்ச்

சுரப்பியிலிருந்து பாயும் சாற்றில் மாங்கனீசு உண்டு. இடையூறு காலத்தில் இரத்தம் மிகுந்து பாய்ந்து ஓடித்தப்ப உதவுவது இதுவேயாம். இருதயம் நன்கு வேலை செய்யவும் இதுவேண்டும்.

## உயிரியம் விழுங்கி

நமக்கு உயிரியம் (Oxygen) வேண்டும். அதுதானே நம் வாழ்விற்கு அடிப்படை. இந்த உயிரியம் காற்றில் நிறையக் கிடக்கிறது. மூச்சு வாங்கும்போது காற்றினை உட்கொள்கிறோம். அதிலிருந்து உயிரியத்தினை எப்படி வேறு பிரித்து விழுங்குவது? இரும்புத் தூளினைத் தண்ணீரில் நனைத்துக் காற்றில் வைத்தால் இரும்பு துருப் பேறக் காண்கிறோம். என்ன நடக்கிறது? இரும்பு உயிரியத்தினை வாரி விழுங்குகிறது. துருப்புப் பிடித்த இரும்பு சிவப்பாகஇருப்பது போல இரத்தமும் சிவப்பாக இருப்பது அதில் இரும்பு இருப்பதனைக் கோள் சொல்லி விடுகிறது. ஆதலின், இரத்தத்தில் இருக்கும் மிகச் சிறிதளவான இரும்பே உயிரியத்தினை வாரி வாரி விழுங்கி உடலில் ஒவ்வோர் உறுப்புக்கும் அதனைக் கொண்டு சென்று கொடுத்தருள்கிறது. இந்த இரும்பினை உடல் தனதாக்கிக் கொள்ளவேண்டுமானால் சிறிதளவு செம்பும் வேண்டும். இரும்பு கொண்டு உயிரியத்தினை விழுங்குவதற்குமுன், செம்பு கொண்டே உடலம் உயிரியத்தினைப்பற்றிப் பிடிக்க முயன்றது. சில செடிகள் (Water Cress) வளர வெள்ளி இன்றியமையாது வேண்டியிருப்பதுபோல, நம் உடல் வளர்ச்சிக்கும் வெள்ளி இன்றியமையாது வேண்டும். உடல் வளர்ச்சியை அடக்கியாள்கிற நெஞ்சுச் சுரப்பியில் வெள்ளியும் உண்டு.

## வளர்ச்சிக்கு மருந்து

நாகம் பொதுவாக இனத்தைப் பெருக்கும் வகையில் உதவுகிறது. இது உடலில் இல்லையானால் உயிர்ப்பொருள் மலடாகி முடியவேண்டும். உடலில் உள்ள எல்லா வகையான உறுப்பு வகைகளுக்கும் இதுவேண்டுமாம். நிக்கலும், கோபால்டும் உடலில் உள்ளவையே. உணவு சீரணமாகும்போது கணையம் (Pancreas) என்ற உறுப்பிலிருந்து ஒரு சாறு பாய்கிறது. அது நாம் உண்ணும் சருக்கரையைச் சீரணமாகுமாறு செய்கிறது. இந்தச் சாற்றினை இன்சுலின் அல்லது கணையச்சாறு என்பர். நீரிழிவு என்ற நோய் வாய்ப்பட்டாருக்கு இந்தச் சாறு பாய்வதில்லை. அதனால் சர்க்கரை சீரணமாகாமல் சிறுநீர் வழியே வீணாய்க்கழியும். இந்தச் சாற்றில் நிக்கலும் கோபால்ட்டும் உண்டு. காட்மியம் என்ற உலோகமும் உடலுக்கு வேண்டும். இது இல்லையானால் இன்சுலின் என்ற சாறு திரளுவதில்லையாம். ருபிடியம் என்ற



உலோகமும் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இது உடலில் இல்லாமற் போகுமானால் எலி வளருவதில்லை என ஆராய்ச்சிவாணர் கண்டனர். ஆதலின் நம்முடைய தசையை வளர்ப்பதற்கென இதுவும் நம் உடலில் உண்டு.

## பல்லில் புதுமை : : : : சித்தர் முறை

இவை மிக மிகச் சிறிதளவில் இருப்பவை. மிகுதியானால் நஞ்சாய் நம்மைக் கொல்வன ஆம்; சிறு சிறு அளவில் அமுதாய் நம்மைக் காப்பன ஆம். இவற்றினைவிட மிகுதியாக உடலில் இருப்பது சுண்ணாம்புச் சத்தும் எரிகந்தகமும் ஆம். சூரியனில் பரந்து கிடக்கும் சுண்ணாம்புச் சத்து நம் நிலைவிற்கு வருகிறது. ஒரு நாளைக்கு நமக்கு ஒரு கிராம் சுண்ணாம்புச் சத்தும் 1¼ கிராம் எரிகந்தகமும் வேண்டும். பல்லுக்கும் எலும்புக்கும் இவை வேண்டும். எலியை ஆராயும்போது அதன் பல்லில் உள்ள எரிகந்தகத்தில் மூன்றில் ஒருபகுதி இரண்டு வாரத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கப்படுகிறது என அறிஞர் கண்டனர். நம் உடலில் ஒவ்வோர் உறுப்புக்களும் தத்தம் உணவினை உட்கொள்ள உதவுவதும் இதுவே. சுண்ணாம்புச் சத்து நம் இருதயத் துடிப்பினை முறைப்படுத்துகிறது; நரம்புக்கு ஓர் ஆறுதல் அளிக்கிறது. இரத்தம் வடியாமல் கட்டிக் கொள்ளுமாறு உதவுவதும் இதுவே ஆம். வைடமின் *B* என்று பேசுவதன் உயர்வு இந்த இரண்டு பொருள்களை உடலம் உட்கொள்வதற்கு உதவுதலே ஆகும்.

## கயிலாய பரம்பரை

இவ்வளவு நுட்பமான அளவில் இவை இவ்வாறு நம் உடலுக்கு உதவுவது வியப்பே ஆம். இந்த அளவிலே அன்றோ பூமியிலும் சூரியனிலும் இந்தப் பொருள்கள் இருந்து வருகின்றன. "சூரியன் போலப் பூமி; பூமிபோல நாம்" என்று கூறுவதில் என்ன தடை? நம் உடல் முழுதும் கரியணுத்திரளின் பலவகை வடிவங்களால் ஆயவை என்பதனைச் சொல்ல வேண்டாம். இவையே நம் உடலில் பெரும் பகுதியாம். ஆகவே உடல் நிலையைப் பார்த்தால் நாம் சூரிய பரம்பரையே ஆம். ஆனால் உயிர் என ஒன்று திருவிளையாடல் புரிகின்றது. அதனை நோக்கும்போது தான் நம் கயிலாய பரம்பரை என்பது விளங்குகிறது.

# மஞ்சள் வெய்யில்

**இனியன்.**

முற்கதை:- தாமரைக்குளம் பண்ணையார் காலஞ்சென்ற தனிகாசலத்தின் மனைவியாகிய அலர்மேலுவின் தகப்பனான அரங்கநாதன், பங்கஜாட்சியின் கொலை வழக்கில் புகழேந்தியைத் தரைமட்டமாக்கி, பண்ணையாட்சியைத் தானே கைப்பற்றிவிடச் சூழ்ச்சிகள் செய்துகொண்டிருந்தான்—புகழேந்தியின் உதவியால் புதையல் கிடைக்கப்பெற்ற பூங்கொடியும் அவள் தந்தையும், 'அவனைக் காணோமே' எனக் கவலையுற்றிருந்தனர்.

## பத்தாம் காட்சி.

பாவநாசத்தில் பழைய கோட்டையில் பாண்டியன்காலத்துப்பசும்பொன் நகைகளும், செம்பொற்காசுகளும் ஏராளமாய்க் கிடைக்கப்பெற்ற முதியவரும் அவர் மகளும் வியப்பு மிகுந்து ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு பரவசமுற்றிருக்கையில், புகழேந்தி சந்தடியின்றி அவ்விடத்தினின்று வெளியேறிவிட்டான். அவன் தங்கியிருந்த பளிங்கு மாளிகைக்கு அவனைத் தேடிச் சென்ற அவ்விருவரும் அவனுடைய பெட்டி படுக்கைகளை மட்டும் கண்டார்களே யன்றி ஆளைக் காணவில்லை. 'என்ன செய்வோம்?' என ஏக்கமுற்றனர். ஒன்றும் புரியாமல் தயங்கினார்கள். இப்படியே ஒரு வாரம் கழிந்துவிட்டது. புகழேந்தியைத் தேடிக்கொண்டு இரகசியப் போலீசார் அங்கு அடிக்கடி வந்துகொண்டிருக்கிறார்களென்றும் உணர்ந்தார்கள். பங்கஜாட்சி தற்கொலை செய்து கொள்ளவில்லையென்றும், புகழேந்தி அவளைக் கொலை செய்திருக்கலாமென்று போலீசார் கருதுவதால் அவனைக் கைது செய்ய முயல்கிறார்களென்றும் செய்தித் தாள்களில் வெளிவந்த செய்தியைக் கண்டதும் தந்தையும் மகளும் திடுக்கிட்டார்கள். "புகழேந்தி கொலைகாரனா? இருக்கவே இருக்காது" என்று ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டேயிருந்தார்கள். பூங்கொடி திடீரென நினைவுக்கு வந்தவள் போல, பங்கஜாட்சி படுகொலைச் செய்தி முதன்முதல் பத்திரிகையில் வெளிவந்தபொழுது புகழேந்தி பாவநாசத்திலிருந்ததும், அதற்கு



முந்தியே, தான் அவனைச் சந்தித்ததும், அவனது கலவரமுற்றிருந்த முகத்தின் ஒளியும், மனத்திரையில் தோன்றக்கண்டாள். ஒன்றும் நிச்சயிக்க முடியாமல் தத்தளித்தாள். ஆனால் பூங்கொடியின் தகப்பனாராகிய பூமிநாதர், சிறிதுநேரம் ஆழ்ந்து சிந்தித்துவிட்டுப் பிறகு, "குழந்தாய், இந்தப் புகழேந்தி-யார் தெரியுமா? இவன் உன் சிற்றன்னையின் புதல்வன் என்று நினைக்கிறேன். நானும் உன் தாயும் மணம் புரிந்துகொண்டு கப்பலேறி சிங்கப்பூருக்கு போகும்பொழுது உன் தாய்க்கு ஒரு தங்கை இருந்தாள்: அவள் அப்பொழுது சிறுமி. அவளைத்தான் தாமரைக்குளத்தில் மிராசுதாராகிய ஒருவருக்கு மணஞ்செய்து கொடுத்ததாகக் கேள்வி. என் குடும்பத்தில் உற்றார் உறவினர் முதலியோரிடம் கொண்ட மனக் கசப்பினால் நான் இவ்விடத்திய தொடர்பு இன்றிப் பத்து ஆண்டுகள் சிங்கப்பூரில் வாணிபஞ்செய்து பொருள் ஈட்டினேன். பிறகு பர்மாவுக்குப் போனேன். பர்மாவுக்குப் போகும் போது நீ கைக்குழந்தையா யிருந்தாய். உன் தாய்க்கு மட்டில் அடிக்கடி தன் தங்கையின் நினைவு வரும். அவளாகச் சிலகடி தங்கள் தாமரைக் குளத்திற்கு எழுதினாளென்றும் அவைகளுக்கு மறுமொழி கிடைக்கவில்லை என்றும், ஒருமுறை இந்தியாவுக்குவந்து எல்லோரையும் காண ஆசையா யிருக்கிறதென்றும் அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாள். மூன்றாவது வயதிலேயே நீ அவளை இழந்துவிட்டாய்! அவள் சிறந்த உத்தமி. கடல் கடந்த நாட்டில் என் இன்ப துன்பங்களிலெல்லாம் பங்கு கொண்டு தன் பெற்றோர் உற்றோர்களையுங்கூட மறந்திருந்து வாழ்க்கை நடத்திய அவளுடைய அறிவையும், துணிவையும் பொறுமையையும் என்னவென்று சொல்வேன்? நாம் உடனே தஞ்சாவூருக்குச் சென்று எல்லாச் செய்திகளையும் தீரத்தெரிந்துகொண்டு, புகழேந்திக்கு உதவி செய்தல் அவசியம்" என்று கூறி முடித்தார். பூங்கொடியும், "அப்படியே" எனக் கூறி ஆமோதித்தாள். இருவரும் தஞ்சைக்குப் பயணமானார்கள்.

ஆறுமுகம் என்ற பண்ணைக் கணக்குப் பிள்ளையின் மூலம் முக்கியமான செய்திகளைத் தெரிந்துகொண்ட அரங்கநாதன், தனிகாசலத்தின் சொத்துக்களுக்கெல்லாம் தானே இனி சர்வாதிகாரி என்று மனத்தில் உறுதிப் படுத்தினவனாகி, உடன் தாமரைக்குளத்திற்கு வந்து, தனிகாசலத்தின் மாளிகையில் வேறு யாரும் பொறுப்பானவர் குடியில்லாததால் அலர்மேலம்மாள் இனி அம்மாளிகைக்கு வரும் வரை தான் அதில் தங்கியிருக்க விரும்புவதாக மானேசர் மகாலிங்கையருக்கும் அலர்மேலம்மாளுக்கும் சொல்லியனுப்பிவிட்டு அங்கு வந்து

குடியேறிவிட்டான். அரங்கநாதன் சர்வாதிகாரியாகவும், ஆறுமுகம் அந்தரங்கக் காரியதரிசியாகவும்விளங்கினர். அரங்கநாதன் தஞ்சை நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தான். தற்கொலை செய்துகொண்டு பங்கஜாட்சி இறந்தாள் என்று போலீசார் முடிவு கட்டியது சரியில்லையென்றும், அலர்மேலுவுக்கும் அவளது மருமகளும் வளர்ப்புப் பெண்ணுமான பங்கஜாட்சிக்கும் தன்னையன்றி வேறு யாரும் மேலாள் இல்லாததால், தானே அவர்கள் சார்பில் வாதியாயிருந்து வழக்குத் தொடர வேண்டியிருக்கிறதென்றும், பங்கஜாட்சி உண்மையில் கொலை செய்யப்பட்டிருக்கவேண்டுமென்றும், புகழேந்தி அந்தப்பெண்ணின் மீதுகொண்ட குரோதத்தால் கொலை செய்து மறைந்துவிட்டானென்றும் அரங்கநாதன் வழக்குத் தொடுத்தான். வழக்குப் பதிவு செய்யப்பட்டவுடன், புகழேந்தியைக் கைதுசெய்க என்ற கட்டளையை மாவட்ட அதிகாரி பிறப்பித்தார். இரகசியப்போலீசார் புகழேந்தியைப் பிடிக்க வலையை வீசினார்கள்.

எதிர்பாராத இந்தச் சம்பவத்தினால் தாமரைக்குளம் ஊரே அல்லோல கல்லோலப்பட்டது. ஆயிரம் குடியானவர், தமக்குத் தலைவன் என்ற முறையில் புகழேந்தியைத் தலைமேல் வைத்துக் கூத்தாடினார்கள். அவன் பண்ணை முதலாளியாக வந்தால் தங்களுக்கெல்லாம் பெருத்த சுதந்திரமும் சுகமும் மகிழ்ச்சியும் நிச்சயம் ஏற்படும் என நம்பிய குடியானவர்கள், அரங்கநாதனுடைய செய்கையைக் கேள்வியுற்று ஆத்திரமடைந்தார்கள். புகழேந்திதான் ஒரு மிராசுதார் என்று செருக்குறுவதேயில்லை. சிறுபிள்ளையிலிருந்தே அவனைத் தெரியாத ஆண் பெண் எவரும் அந்த ஊரிற் கிடையாது. எஜமான் அல்லது முதலாளி என்று யாராவது அவனை அழைத்தால், அவன் அவர்களை அன்பாகக் கண்டிப்பான். "எல்லோரும் என்னைத் தம்பி என்று கூப்பிடுங்கள்," என்று ஆதரவாக அவர்களுக்குச் சொல்லுவான். பெரும்பாலும் வயதானவர்கள் அவனை தம்பி என்றும், வாலிபர்கள் ஐயா என்றும் அழைக்கும் பழக்கத்தை ஏற்படுத்தினான். முண்டகக் கண்ணியம்மன் திருவிழாவில் புகழேந்தி ஒரு முறை பிரசங்கம் செய்தான். உயிர்க்கொலையை அம்மன் ஏற்க மாட்டாள் என்று ஆணித்தரமாக உபதேசம் செய்தான். அன்றுமுதல் அவ்வூரில் பலிகொடுக்கிற பழக்கம் நின்றது. எல்லோருக்கும் கல்வியே உயிர்நிலை என்று ஒரு முறை புகழேந்தி ஊர்ப்பொதுக் கூட்டத்தில் பேசினதிலிருந்து அக் கிராமத்தில் வயதான ஆடவரும் பெண்டிரும் கூடப் படிக்கத் தொடங்கிவிட்டார்கள். அப்புறம் குழந்தைகளைப் பற்றிக் கேட்கவா வேண்டும்!



"புகழேந்தி ஓர் தெய்வம்;" என்று குடியானவர்களிற் சிலர் சொல்வார்களாம். புகழேந்தியைச் சிறையில் அடைத்து விடுவார்கள் என்ற பேச்சுக் காட்டுத்தீப் போல ஊரிற் பரவவே, எல்லோரும் தனிகாசலத்தின் மாளிகை வாசலில் போய் நின்றுகொண்டு அட்டகாசம் செய்யத் தொடங்கி விட்டார்கள். ஆறுமுகம், அவர்களையெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டுக் கோயிலுக்கு அழைத்துச் சென்று, "புகழேந்தியைச் சிறையில் வைத்தவுடன் கொலை செய்ய மாட்டார்கள். பங்கஜாட்சியைக் கொலை செய்தது யார் என்று தெரியவில்லையல்லவா? புகழேந்தியை விசாரணை செய்யாமல் கொலைகாரன் யார் என்று காண முடியாது. புகழேந்தியின் மீது துரும்பு விழாமல் பாதுகாப்பது என் பொறுப்பு" என்று நயவஞ்சகமான சமாதானங்கள் கூறினான். ஆறுமுகத்தின் தகப்பனாருடைய பெருந்தன்மையை உத்தேசித்து, 'இவனும் நல்லவன்' எனக் குடியானவர்கள் நம்பினார்கள். புகழேந்திக்கு யாதொரு தீங்கும் வராமற் காப்பாற்றுகிறேன்என்றுமுண்டகக்கண்ணியம்மன்மீது ஆணையிட்டு ஆறுமுகம் சொன்னதின் பேரில், குடியானவர் எல்லோரும் திருப்தியுடன் திரும்பிப் போனார்கள். ஆறுமுகத்திற்குக் குடியானவர்களிடையே செல்வாக்கு எவ்வளவு என்பதை உணர்ந்த அரங்கநாதன், அவனைக் கட்டித் தழுவி, வெற்றிக்குரிய ஏணியில் பலபடிகள் கடந்துவிட்டதாயெண்ணி மகிழ்ச்சியுற்றான்.

பூமிநாதரும் பூங்கொடியும் ஒரு நாள் வைகறை வேளையில் தனிகாசலத்தின் மாளிகை வாயிலில் வந்து நின்றார்கள். அவர்கள் ஏறிவந்த மோட்டார் வண்டியைக் கண்டதும், அரங்கநாதன் கட்டளைப்படி வாயிலில் நின்ற காவற்காரன், அவ்விருவரையும் உள்ளே அழைத்துச் சென்றான். பூங்கொடி, "பங்கஜாட்சி என் பள்ளித்தோழி; அவள் இறந்துவிட்டதறிந்து துக்கம் விசாரித்துப் போகவந்தேன்" என்று துயரத்துடன் தெரிவித்தாள். வாயிற் காப்போன் அவள் கொடுத்த ஓர் ஐந்து ரூபாய் நோட்டை ஓசைப்படாமல் வாங்கி மடியில் செருகிக்கொண்டு, "அப்படியா அம்மா! சந்தோசம். பங்கசம்மாளின் பாட்டனார்தான் இங்கு இப்பொழுது இருக்கிறார். உங்களிருவரையும் பார்த்து அவர் சந்தோசப்படுவார். நான் பெரிய முதலாளியாகிய தனிகாசலத்தின் காலமுதலே இந்தப் பண்ணை வீட்டில் வேலை பார்க்கிறேன். புதுமுதலாளி கண்விழிக்கப் பதினொரு மணியாகும்; அவரை எழுப்பவும் கூடாது. ஆதலால் பண்ணை வீடெல்லாம் சுற்றிப் பாருங்கள். இந்த அறையில் உட்கார்ந்திருங்கள்." என்று உபசாரம் பண்ணினான். பூங்கொடி, பெரியவரை ஒரு அறையில் உட்கார வைத்துவிட்டு காவல்காரனுடன் மாளிகை தோட்டம் முதலியவற்றையெல்லாம் சுற்றிப் பார்ப்பவள்போலவே சென்று, பண்ணை

வீட்டு இரகசியங்கள் பலவற்றையும் அவனிடம் கேட்டுத் தெரிந்து கொண்டாள். பங்கஜாட்சி யிறந்து கிடந்த அறையில்தான் பூமிநாதர் உட்கார்ந்திருந்தபடியால், அவரும் சும்மா இருக்காமல் சுறுசுறுப்பாக அறிவைச் செலுத்திச் சில நுட்பமான செய்திகளை யறிந்து கொண்டார். இதற்கு இடையில் ஆறுமுகம் அங்கு வந்தான். அவன் பூங்கொடியின் அழகிலே சொக்கிப் போய் விட்டான். அவளுடைய தந்தையிடம், "அவளைத் தனக்கு மணஞ் செய்து கொடுக்க முடியுமா?" என்று கேட்கவும் எண்ணினான். ஆனாலும், "மனசே பொறு" என்று தனக்குள்ளேயே புத்தி சொல்லிக் கொண்டான். தன்னையும் அரங்கநாதனையும் பற்றிப் பெருமையாக அவர்களிடம் பிதற்றினான். அவன் பிதற்றல்களிலுள்ள சாராம்சங்களை யெல்லாம் நாடும் கடலும் சுற்றிய அம் மேதாவியும் அவருடைய மகளும் அறியாமலிருக்க முடியுமா? அவனை அளந்தது மாத்திர மன்றி அரங்கநாதனையும், எப்படிப்பட்டவனென்று அவனைப் பார்ப்பதற்கு முன்னமேயே இருவரும் நீட்டியளந்து விட்டார்கள். ஆறுமுகம் எழுப்பவே, அரங்கநாதனும் எழுந்து வந்தான். வரும்பொழுதே அவன் பெரியவரை நோக்கி, "வாருங்கள் இந்த அம்மாள் உங்களுக்கு எத்தனாவது சம்சாரம்?" என்று ஏதோ தெரிந்து விட்டவன்போலப் பல்லைக் காட்டிக்கொண்டே கேட்டதுமன்றிப் பூங்கொடியையும் உச்சிமுதல் உள்ளங்கால் வரை கண்களால் சுற்றுப் பிரயாணஞ் செய்தான். பூமிநாதரோ, சிறிதும் கோபமோ குரோதமோ காட்டிக் கொள்ளாமல், "அவள் என் ஒரே குழந்தை; பங்கஜாட்சியும் அவளும் உயிர்க்குயிரான சிநேகமாம். 'விசாரித்துப் போவோமே' என்றாள்; குழந்தையை அழைத்துக் கொண்டு வந்தேன்" என்றார். அரங்கநாதன், தன் தலையிலே அடித்துக்கொண்டு, "அடடா பாவம். தப்பு. தப்பு. மன்னித்துக்கொள்ளுங்கள். உலகத்திலே கிழங்கள் தானே இப்பொழுது மனையிலிருந்து கொஞ்சுகின்றன. அதுமாதிரி நினைத்துவிட்டேன். சாப்பிட்டு விட்டீர்களா?" என்றான். அதற்குள் பூமிநாதர், "துக்கம் விசாரிக்க வந்த வீட்டில் விருந்து வேண்டாம்; நீங்கள் பெரிய மிராசுதார்; இன்னொருமுறை விருந்துக்கு அழையுங்கள்; வருகிறோம்" என்று கூறிப் புறப்பட்டு விட்டதாகவே எழுந்தார். அரங்கநாதனும் ஆறுமுகத்தைப் பார்க்க, அவன் இவனைப் பார்க்க இருவரும் ஒன்றுமே மேற்கொண்டு அதிகம் பேசாமல் விருந்தாளிகளை மோட்டார் வரையிலும் கொண்டுவந்து வழியனுப்பினார்கள். கார் போய்விட்ட பின் அரை மணி நேரம் கழித்து, "ஆமாம் இவர்களை யார் என்று தெரிந்து கொள்ளவில்லையே தஞ்சாவூர்தான் போலிருக்கிறது. ஆனால் விலாசம் கேட்காமற் போனோமே" என்றான் ஆறுமுகம். அரங்கநாதன், "அதைப் பற்றிக் கவலையில்லை; கவைக் குதவாதவர்கள்; துக்கம் விசாரிக்காததுதான் குறை; வேறு வேலை இல்லைபோலிருக்கிறது" என்று அலட்சியமாகக் கூறிவிட்டு மறுபடி படுக்கையில் விழுந்து கும்பகருணப் படலம் படிக்கத் தொடங்கினான்.

[தொடரும்.]

சிறு கதை.

# "சூருவளி"

[வை. சுப்பிரமணியன்.]

காலையிலிருந்து அவன் நடந்து கொண்டிருந்தான். எங்கு செல்கிறோம் எதற்காகச் செல்கிறோம் என்ற நோக்கம் சற்றுமின்றி நடந்து கொண்டிருந்தான். அவ்வழியே சென்ற எவரும் எதுவும் அவன் கவனத்தைக் கவரவில்லை. அவன் கால்கள் தளர்ந்தன; உடலில் சோர்வு மிகுந்தது. சொல்ல முடியாத பசி; களைப்பு. ஆயினும் அவன் நடந்து கொண்டுதானிருந்தான்.

அவனுக்குப் பதின்மூன்று வயதிருக்கும். சிவந்த மேனி; அழகியமுகம். தலைமயிரை நன்றாகச் சீவிவிட்டிருந்தான். நீரிலே மூழ்கி எழுந்தவனைப்போல், வியர்வையால் உடல்முழுதும் நனைந்திருந்தது. ஒரு சட்டை, ஒரு கால் சட்டை; தவிர வேறு ஆடையோ அணியோ அவன் உடலை அழகு படுத்தவில்லை.

அடிக்கடி அவன் உதடுகளைக் கடித்துக் கொண்டான். என்னவோ முணுமுணுத்தான். அப்போது மட்டும் எதிரே உள்ளதைச் சுட்டெரித்துவிடுவது போல் அவன் கண்கள் கனலைக் கக்கின. நடையும் முன்னைவிட விரைவாகக் காணப்பட்டது. இவை யனைத்தும் சில விநாடிகள்தாம் நிலைத்திருந்தன. பின்னர், மீண்டும் அமைதி. நடை தளர்ச்சியுறும்; முகமும் தெளிவு பெற்றுவிடும். கணத்திற்குக் கணம் அவன் முகங் காட்டும் வேறுபாடுகள் அவன் உள்ளத்தில் நடக்கும் பெரிதோர் கொந்தளிப்பை விளக்கின. ஆம்! அவன் மனத்திலே ஒரு சூருவளி! வாழ்க்கைத் துன்பங்கள் முழுதுந் துய்த்துப் பக்குவ மடையாத அந்தப் பிஞ்சு மனத்திலே அதற்குள்ளே ஒரு சூருவளி!

என்றும் போலவேதான் அன்றும் அவன் காலையில் கண்விழித்தெழுந்தான். காலைக்கடனை முடித்தபின் புத்தகங்களை எடுத்துக் கொண்டு பள்ளிக்குப் புறப்பட்டான். வழக்கமாய்ப் புசிக்கும் பழஞ்சோறும் அன்று அவனுக்குக் கிடைக்கவில்லை. அதனால் அவன் கவலைப்படவில்லை. எத்தனையோ நாட்கள் பட்டினியாகப் பாடசாலைக்குச் சென்று வருவது அவனுக்குப் பழக்கமாகிவிட்டது.

வாயிற்படியைத் தாண்டும் போது எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டோமா என்று மீண்டும் புத்தகங்களைப் பார்த்தான். மறந்து விட்ட ஏதோ ஒன்றை நினைத்துக்

கொண்டவன் போல் திரும்பி உள்ளே சென்றான்.

"அம்மா! காகிதம், பென்சில் வாங்க எட்டணா வேண்டும்" என்று கேட்டான்.

"என்னடா! எப்போது பார்த்தாலும் பணம் பணமென்று கேட்கிறாய்? இங்கென்ன பணம் விளைகிறதா? காசு கிடையாது போ" என்று எரிந்து விழுந்தாள் அவன் தாய்.

"ஆசிரியர் கோபித்துக் கொள்வாரம்மா!"

... ... பதிலில்லை.

"என்னம்மா! கொடுக்கிறாயா என்ன? இன்று கணக்குப் பரீட்சை! கண்டிப்பாக எடுத்துச் செல்ல வேண்டும்."

"அவ்வப்போது உனக்கு ரூபாய் ரூபாயாகக் கொட்டியழுவதற்கு எந்த ஆண்பிள்ளையடா சம்பாதிக்கிறான். எல்லாவற்றுக்கும் நான்தானே உழைத்துக் கொட்ட வேண்டியிருக்கு. ஒற்றைத்தம்பிடி கூடக்கிடையாது போ!" என்று மீண்டும் உறுமினாள் அவள்.

"அப்போது நான் பள்ளிக்கூடம் போகவேண்டுமா? வேண்டாமா?" என்றான் அவன் ஏதோ ஒரு முடிவுக்கு வந்துவிட்டவன் போல்.

"எக்கேடாவது கெட்டுத் தொலைந்து போயேன்!"

"தொலைகிறேன்! தொலைந்தே போகிறேன்! உன் முகத்தில் விழிக்கிறேனா பார் இனி!......அம்மாவா நீ......"

அவன் படபடவென்று பேசினான். உதடுகள் துடித்தன. மார்பு படபடவென்று அடித்துக் கொண்டது. கண்களும் முகமும் குபீரென சிவந்து விட்டன.

கையிலிருந்த புத்தகங்களை வீசி யெறிந்தான். அவைகள் மூலைக்கொவ்வொன்றாய்ப் போய் விழுந்தன.

"இதோ போய்விடுகிறேன்" என்று வீட்டினின்று கிளம்பினான். புறப்பட்டவேகத்தில் கதவில் இடித்துக்கொண்டான். கதவைப் "படாரெ"ன்று மூடிவிட்டு விடுவிடென்று நடக்கத் தொடங்கினான்.

அப்போதுதான் துவங்கியது அந்தச் சூறாவளி. தாய்க்கும் அவனுக்குமிடையே நடந்த பேச்சுக்களை மீண்டும் கவனத்திற்குக் கொண்டுவந்தான். எண்ண அலைகள் எழத்தொடங்கின.

"தொலைந்து போகிறதாம்! தொலைந்தே போகிறேன். நான்கு நாட்களாக இதே பாட்டாக இருக்



கிறது. இந்த வீட்டிலேயே இனி அடி எடுத்து வைக்கக் கூடாது. இந்த ஊருக்கே திரும்பி வரக் கூடாது.

எந்த நேரமும் வெறிநாய் போல் "வள்வள்"ளென்று சீறி விழுகிறாள்! இவள்தான் அம்மாவாம்! ஊரிலே அவனவன் அம்மாவும் இப்படித்தான் இருக்கிறாளோ? எதற்கெடுத்தாலும் இப்படித்தான் வைகிறாளோ! எப்போதும் "தொலைந்துபோ தொலைந்துபோ" என்றுதான் பேசுகிறாளோ! பிள்ளை குற்றம் செய்துவிட்டால் இப்படித்தான் கடிந்துகொள்ளுகிறாளோ!

அப்படித்தான் நானென்ன குற்றம் செய்து விட்டேன். காகிதம் வாங்கத்தானே பணம் கேட்டேன். சினிமா நாடகம் பார்ப்பதற்கல்லவே! வீண் செலவு செய்வதற்கல்லவே! என் வகுப்பிலிருக்கிறானே சந்தன், அவனைப்போல் "பீடி சிகரெட்" குடிப்பதற்கல்லவே!

எப்போது பார்த்தாலும் பணங் கேட்கிறேனாம்! எதற்காக எப்போதெல்லாங் கேட்டேன்? பாடசாலைக்குச் சம்பளங் கட்டுவதற்குக் கேட்டேன்! புத்தகங்கள் வாங்கக் கேட்டேன். இதற்குத்தான் அடிக்கடி பணங் கேட்பதென்ற பொருளா? அப்படி யென்றால் என்னைப் பள்ளிக்கு அனுப்பியிருக்க வேண்டிய தேவையில்லையே! ஆடு மாடு மேய்க்க அனுப்பியிருக்கலாமே!

இன்று கணக்குப் பரீட்சை இல்லாவிடில் அதுவுங் கேட்டிருக்க மாட்டேன். முன்பெல்லாம் கேட்ட மாத்திரத்திலேயே தன்னிடம் பண மில்லாவிட்டாலும் எசமானியிடம் வாங்கிக்கொடுத்திருக்கிறாள். அந்த நம்பிக்கையால்தான் இன்று அவ்வளவு கண்டிப்போடு கேட்டேன். அதற்கு இல்லையென்று நயமாகச் சொல்லி யிருக்கக் கூடாதா! இப்படியா சீறிவிழுவார்கள். நான் இருப்பதை அவள் விரும்பவில்லை. நான் தொலைந்து போவதுதான் அவள் விருப்பம் போலும். இதோ! நானும் அவள் விருப்பப்படியேதான் நடந்துகொள்கிறேன்.

"நேற்றும் இதே போல்தான் பேசினாள். நண்பன் வீட்டுக்குப் பாடங் குறித்து வரப் போயிருந்தேன். அதற்கு எவ்வாறு அநாகரிகமாக வைதாள். 'உன் பாட்டுக்கு ஊர் சுற்றிவிட்டு வந்தால் யார் உனக்குச் சோறு போட முடியும். என் உடம்பென்ன இரும்பாலா ஆகியிருக்கிறது, எல்லா வேலையும் நானே செய்வதற்கு.' இன்னும் என்னென்னவோ சொன்னாள்.

அவள் கஷ்டத்தை நான் கருதவில்லையாம் இவள் துன்பப் படுவதைக் கண்டு எத்தனை முறை கண்ணீர் விட்டிருக்கிறேனென்று இவளுக்கென்ன தெரியும்.

அப்பா இறந்த பிறகு இவள் துன்பம் இரண்டு மடங்காகி யிருக்கிறது. அதற்காக என்னை வதைத்தால் நான் என்ன செய்ய முடியும்?......"

களைப்பைப் பொருட்படுத்தாது நினைவுலகத்தில் மிதந்தவாறு அவன் நடந்து கொண்டிருந்தான். அவன் பின்னால் ஒரு குதிரை வண்டி வந்துகொண்டிருந்தது.

வெகு அருகில் வந்துவிட்ட குதிரையின் சலங்கொலி அவன் காதிற் புகவில்லை. வண்டிக்காரன் "ஓரம் போ ஓரம் போ" என்று கூவினன். அவன் நகரவில்லை. வண்டி அவனை உராய்ந்து சென்றபோது, வண்டிக்காரன் அவனை முறைத்துப்பார்த்து "எம்பா சொன்னது காது கேக்கலியோ! எருமை போல நகராது போறியே" என்று சொல்லிவிட்டுச் சென்றான்.

அவன் நினைத்தான்: "இவன் வேறு ஆத்திரத்தைக்கிளப்புகிறான். மடையன்! மேலே தான் ஏற்றிவிட்டுப் போவதுதானே! உயிரைப் பற்றித் தான் இனிக் கவலையில்லையே!

ம்ம...குதிரை வண்டி ஏறி என்ன பயன்! ஒரு மோட்டார் ஏறினாலும் உயிர் விடுதலையாகிவிடும்.

என்? அவ்வாறு மாண்டு மடிவதற்குத்தானு வழியில்லை. இன்று இரவே போய்ப் புகைவண்டி வரும் நேரத்தில் இருப்புப் பாதைக்குக் குறுக்கே படுத்துக் கொண்டுவிடலாமே!" சீச்சீ! தற்கொலையல்லவா அது!

தற்கொலையா செய்து கொள்வது? தற்கொலை செய்து கொண்டால் பேயாக அலைந்து துன்புற வேண்டுமென்று அடுத்த வீட்டுப் பாட்டி சொல்லியிருக்கிறாளே!

அதெல்லாம் வெறும் பொய்!

"தற்கொலை செய்து கொள்வது பாவம்! தன்னம்பிக்கை யற்றவன்தான் தற்கொலை செய்து கொள்வான்! தற்கொலை முயற்சி யற்றவனுடைய செயல்" இப்படியெல்லாம் ஆசிரியர் சொல்லியிருக்கிறாரே!

"அன்னையுந் தந்தையும் முன்னறி தெய்வம்"; "தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை" இப்படி கூடத்தான் ஆசிரியர் கற்பித்திருக்கிறார். அதன்படிதான் நாம் நடந்துகொண்டோமா?

சே! எது எவ்வாறாயினும் தற்கொலை என்னவோ செய்து கொள்ளக்கூடாது.

என் நான் தற்கொலையைப் பற்றி நினைத்தேன்? என்னவெல்லாமோ நினைக்கிறேனே! பைத்தியம் பிடித்து விடும் போலிருக்கிறதே! பைத்தியம் பிடித்து விட்டாலும் நல்லதுதான்! எல்லாவற்றையும் மறந்து திரியலாமல்லவா!

சரி; இப்போது எங்கே செல்வது? எப்படி பிழைப்பது?

எந்தக் கடையிலாவது வேலை தேடிக் கொள்வது! மளிகைக் கடையிலோ, துணிக்கடையிலோ ஒரு வேலை பார்க்கக்கூடவா நமக்குத் திறமையில்லை. என்னோடு படித்தானே குமாரசாமி, அவன் இப்போது மளிகைக் கடையில்தானே வேலை செய்கிறான். பாவம்! நன்றாகப் படித்த பையன்! வறுமை காரணமாக அவன் தந்தை அதற்குள் அவன் படிப்பிற்கு அணை போட்டுவிட்டார். போன வருடம் நம்மோடு படித்த குப்பன் கூட வறுமை காரணமாகத்தானே நின்றுவிட்டான். இந்த வறுமைதான் எண்ணற்ற பிள்ளைகள் படித்து முன்னேறுவதைத் தடுத்து விடுகிறது. பொல்லாத வறுமை!



ஆமாம்! குமாரசாமியை அவன் தந்தை வேலைக்குக் கொண்டுபோய் விட்டார். என்னை வேலையிலமர்த்த யார் துணை புரிவார்? நான் தனியே சென்று வேலை கேட்டால் யார் என் மீது நம்பிக்கை வைத்து வேலை கொடுப்பார்கள்? வேலை கொடுக்காதது மட்டுமா? "இன்னம் முளைச்சு நாலு எல வரலே; அதற்குள்ளே பெரிய மனிசனாட்டம் வந்துட்டான் வேலைகேட்க" என்று இகழ்ந்துரைத்து நகைப்பார்களே!

வேண்டாம்! வேலை போய்க் கேட்கவே வேண்டாம்! பின் என்ன செய்வது?

பிச்சை!...... ஆம்! பிச்சையெடுத்துப் பிழைக்க வேண்டியதுதான்! மோட்டார் நிலையங்களிலும் புகைவண்டி நிலையங்களிலும் எலும்பெல்லாந் தெரிய நின்று பல்லெல்லாந்தெரியக் காட்டிப் பசிக்குப் பதறியழும் பஞ்சைச் சிறுவர் திருக்கூட்டங்கள் எத்தனையோ இருக்கின்றனவே! அவைகளுள் நாமும் போய்க் கலந்து கொள்ள வேண்டியதுதான்......"

இப்போது அவன் வீட்டிற்கு எட்டாவது மைலில் நடந்து கொண்டிருந்தான். கனலி கல்லையும் உருக்கத்தக்க வெப்பத்தைப் பொழிந்தான்.

அவ்வழியே யாரும் வரவில்லை. பாலைவனத்தில் தனியாக ஒருவன் நடந்து செல்வது போல் அச்சிறுவன் நடந்துகொண்டிருந்தான்.

கால்கள் அவனையறியாமலே தடுமாறின. என்நாளும் அவன் கண்டிராத சோர்வு உண்டாயிற்று. சற்று உட்காரலாமா என்று நினைத்தான். உட்காரவில்லை. உறுதி அவனை முன்னே தள்ளிற்று. பசியும் சோர்வும் பின்னுக்கிழுத்தன.

ஒவ்வொரு கணமும் நடையின் விரைவு குறைந்துவந்தது. பசியின் முன் உறுதி தோல்வியுறுவதை உணர்த்தியது.

தூரத்தே ஓர் ஆலமரந் தெரிந்தது. அவனை வாவென்றழைப்பது போல் அதன் இலைகள் சலசலத்தன.

மரநிழலைக் கண்டதும் மனவுறுதி தளர்ந்து விட்டது. கால்கள் தாமாகவே நிழலை நாடிச் சென்றன. "அப்பாடா" என்று மரத்தில் சாய்ந்தவாறு உட்கார்ந்துவிட்டான் அவன்.

எண்ணங்கள் எழுந்தன: "அடாடா! நேற்று எந்த நிலையிலிருந்தவன் இன்று எந்த நிலைக்கு வந்துவிட்டேன். நேற்று ஒரு ஏழை குடும்பத்துச் சிறுவன். இன்று ஓர் அனாதைப் பிச்சைக் காரன். முன்பு பிச்சைக்காரக் குழந்தைகளைக் கண்டு நான் இரக்கப் பட்டேன். இன்று என்னைப் பார்த்துப் பிறர் இரங்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் எவ்வளவோ மகிழ்ச்சியோடு வாழ்ந்தேன். அப்போது அப்பா இருந்தார். அவருக்கு எண்பது ரூபாய் வருவாய் வந்தது. எனவே, வறுமையின் பிடியில் நான் சிக்கவில்லை.

[illegible] எவ்வளவோ [illegible] ... பூரித்தார். [illegible]

பொருள்களை நான் கேட்குமுன்னமே வாங்கிக் கொடுத்துவிடுவார். சிறு குழந்தைபோல் என்னோடு சிரித்து விளையாடுவார். ஒருமுறைகூட என் பொருட்டுக் கோபித்து அவர் முகஞ் சிவந்ததை நான் கண்டதில்லை; நான் ஏதாவது குற்றமிழைத்துவிட்டால் அன்போடு கண்டித்து அறிவு புகட்டித் திருத்த முயலுவார்; ஆத்திரங்கொண்டு அடிக்கமாட்டார்.

அம்மாவும் அப்போது இப்படியா இருந்தாள்! அவளுந்தான் என்மீது அன்பைச் சொரிந்தாள். ஒரு கடுஞ்சொல் கூறியிருப்பாளா? ஒருமுறை முகங் கோணியிருப்பாளா?

'சில சமயம் அம்மா, அப்பா, இருவருமே என்னோடு சேர்ந்து சிறு குழந்தையாகி விடுவார்கள். இவைகளெல்லாம் அன்று; ஆம்! அன்று நடந்தவை; அன்று எங்கள் குடும்பத்திலே மகிழ்ச்சி நிலவியது. அம்மா, அப்பா இருவரது அன்புப் பெருக்கிலே வளர்ந்த நான் கவலை இன்னதென்றறியவில்லை.

இடையில் வழியறியா நடுக் காட்டில் தவிக்கவிட்டுவிட்டு மாரடைப்பினால் மாண்டு போனார்.

அதன்பயனாக, அம்மா வேலைக்காரியாக நேர்ந்தது. தன் வீட்டுக்கு வெளியில் வரக்கூட அஞ்சிய அம்மாதான் இன்று ஒரு வீட்டின் வேலைக்காரியாக இருக்கிறாள்.

சில சமயம், வீட்டில் அம்மா கடினமாக உழைத்திருக்கிறாள். அதற்கு அப்பா அன்போடு கடிந்து கொள்வார். "உன்னை யார் இப்படி அளவுக்கு மீறி உழைக்கச் சொன்னது. ஓய்வெடுத்துக் கொண்டு வேலை செய்வதுதானே" என்று அம்மாவின் வேலைகளுக்கு முட்டுக்கட்டை போட்டுவிடுவார். அந்த நிலையிலிருந்த அம்மாதான் இன்று எசமானியின் அதட்டல்களுக்கஞ்சிச் சக்திக்கு மீறி உழைக்கிறாள்.

அம்மா அதற்கு எவ்வளவு துயரப்பட்டாள்! எவ்வளவு அழுதாள்! அன்றிரவு நடந்த—நிகழ்ச்சி இப்போதுதான் நடந்தது போலிருக்கிறதே!

அம்மா வேலைக்காரியாகப் போவதற்கு முன்னாளிரவு நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்த நான் இரண்டு மணிக்கு விழித்துக் கொண்டேன். விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்ததது. எனக்குச் சற்றுத்தூரத்தில் அம்மா படுத்திருந்தாள். ஒருமுறை கண்களைத் திறந்து பார்த்த நான் மறுபடியும் இரண்டுமணிக்கு விழித்துக்கொண்டேன். விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. எனக்குச் சற்று தூரத்தில் அம்மா படுத்திருந்தாள். ஒருமுறை கண்களைத் திறந்து பார்த்த நான் மறுபடியும் மூடிக் கொண்டேன்.

சிறிது நேரத்தில் விம்மல்களும் பெருமூச்சுகளும் கேட்டுத் திடுக்கிட்டேன். அம்மாதான் அழுகிறாளென்று தெரிந்துகொண்டேன். படுக்கையினின்று எழுந்தேன். விளக்கின் திரியைத் தூண்டினேன். அம்மாவினருகில் சென்றேன். தலையணை முழுதும் நனைந்திருந்தது. அம்மா எழுந்து உட்கார்ந்தாள். அவள் முகத்தை



நோக்கினேன். ஊற்று நீர்போல் கண்ணீர் பெருக்கெடுத்துக் கன்னங்களில் வழிந்து கொண்டிருந்தது. கண்கள் கூரையை நோக்கியவாறிருந்தன. அவள் முன் மண்டியிட்டேன். "அம்மா" என்று மெல்ல அழைத்தேன். அவள் ஒன்றும் பேசவில்லை. அப்படியே என்னை அணைத்துக்கொண்டாள். அவள் கண்ணீர் என் தலையை நனைத்தது. விம்மி விம்மி யழுதாள். நானும் விம்மினேன். அப்பா! என்ன பயமான இரவு!......

அவ்வாறெல்லாம் இருந்த அம்மாதான் இப்போது இப்படித் தூற்றுகிறாள். "தொலைந்து போ" என்று சொல்லும் அளவுக்கு அவள் வெறுப்பு வளர்ந்திருக்கிறது. ஏன்?...

ம்ம்...இவ்வளவு தூரம் வந்த பிறகு இனி அதை யோசித்து என்ன பயன்?

சரி! எழுந்து செல்வோமா?... எங்கே செல்வது?... அடடா! ஊரிவிருந்தால் இந்நேரம் பள்ளிக்கூடத்திலிருந்து வீட்டுக்குத் திரும்புவேனே! என் நண்பர்களைப் போல நானும் கணக்குப் பரீட்சைக்கு எழுதியிருப்பேனே! மற்றப் பரீட்சைகளில் வந்ததைப்போல இதிலேயும் முதல்வனாக வந்திருப்பேனே!

ஆசிரியர் என்னைத் தேடியிருப்பார். ஏன் நான் வரவில்லையென்று அனைவரையுங் கேட்டிருப்பார். தந்தையில்லாக் காரணத்தால் என்னைத் தன் குழந்தைபோலப் பாவிப்பவர் அவர். என் மீது அவருக்குத் தனியன்புமட்டுமல்ல! நான் படிப்பதில் அவருக்கு ஆர்வமுங்கூட. "பையன் நன்றாகப் படிக்கிறான்; எக்காரணத்தாலும் நிறுத்திவிடாதே; தொடர்ந்து படிக்கவை" இப்படிப் பலமுறை அம்மாவிடம் சொல்லியிருக்கிறார். இனி அவரை மறந்துவிட வேண்டியதுதானா? அவர் பாடம் கற்றுக் கொடுப்பதை இனிக் கேட்கவே முடியாதா?

அவர்தாம் போகட்டுமென்றால் கண்ணப்பனையும் விட்டுப் பிரிய வேண்டுமா? கண்ணப்பன் என் உயிர்த் தோழன். நான்தான் ஏழையெனினும் அவனாவது செல்வக் குடும்பத்திற் பிறந்தான். முதல் வகுப்பிலிருந்து அவனும் நானும் ஒன்றாகப்படித்து வந்திருக்கிறோம். எப்போதும் என்னைவிட்டுப் பிரியமாட்டான். இன்று காலையில்கூட வீட்டில் போய்த் தேடியிருப்பான். அவனையும் நான் பிரிய வேண்டுமா? அவனது சிரித்த முகத்தை இனி பார்க்க முடியாதா? அவனோடு சேர்ந்து இனி ஆனந்தமாய் விளையாட முடியாதா?

அதோ! என் சிற்றப்பா! அடாடா! அவரை மறந்துவிட்டேனே! இப்போது அவர்தானே என் தந்தை. இப்படி வந்தவன் அவரிடமேனும் சென்றிருக்கக் கூடாதா? ஆறுதல் கூறி அழுகையை மாற்றியிருப்பாரே! சிரிக்கவைத்துச் சினத்தைப் போக்கியிருப்பாரே! பென்சில் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்பியிருப்பாரே! என்ன தவறுசெய்து விட்டேன்! இப்போதும் என்ன! வீட்டுக்கே...

வீட்டுக்கா?... சேச்சே! திரும்பவும் அந்தத் துன்பக் குளத்திலேயா போய் விழவேண்டும்! துன்பமா... எப்படி வந்தது துன்பம்...வீட்டில் மட்டுந்தானா துன்பம்?...எனது கனவுகள்; எனது எண்ணங்கள்; அனைத்தும் வீணாகவேண்டுமா?

ஏன் வீணாகவேண்டும்? வீட்டுக்குத் திரும்பினால் அவைகள் ஈடேற, அவைகளை நிறைவேற்ற வாய்ப்பு கிடைக்குமே!

இனியும் வீட்டுக்கா!... வேண்டாம்.

பின் என்னசெய்வது? வீட்டுக்குச் சென்றால் மீண்டும் பள்ளிசென்று படித்துப் பயன்பெறலாம்.

அதைவிட்டுப் பிச்சைக் காரனாய்ப் பிழைப்பதா? நாடோடியாய்த் திரிவதா? அனாதையாய் அலைவதா? வேண்டாம்......வீட்டுக்கே சென்றுவிடலாம்...ஆம்! வீட்டுக்கு! வீட்டுக்கேதான்.''

அவன் எழுந்து விட்டான். எவ்வளவு வேகமாக வீட்டினின்று வெளிவந்தானோ அதே வேகத்தோடு வீடு நோக்கி விரைந்தான்.

எவ்வளவோ தூரங் கடந்து விட்டான்.

அவன் தொண்டை வறண்டு விட்டது. நாக்கு உலர்ந்துவிட்டது. மிகுந்த நீர் வேட்கை!

வழி நெடுகிலும் குழாயிருக்கிறதா குளமிருக்கிறதா என்று அவன் கண்கள் துருவித் துருவி ஆராய்ந்து ஏமாற்றமடைந்தன.

அவனை வருத்தி வேடிக்கை பார்க்க ஆதவனும் விருப்பங்கொண்டான்போலும்! அதனால்தான் அனல்போன்ற வெப்பத்தைப் பொழிந்து அவன் நீர் வேட்கையை அதிகப்படுத்தினான்.

இப்போது அவன் கண்களிலே ஒரு மலர்ச்சிதென்பட்டது. தூரத்திலே ஒரு குளத்தைப் பார்த்து விட்டான். ஆனால் எவ்வளவு ஆர்வத்தோடு அதனைவிரைந்து அணுகினானோ அவ்வளவு ஆர்வமும் அருவருப்பாய் மாறியது.

குளம் சேறும் சகதியுமாயிருந்தது. நீர் குடிக்காமல் செல்லவும் மனமில்லை. குளத்தின் ஒரு பகுதியில் தெளிந்த நீர் இருப்பதுபோலத் தோன்றியது. அங்கு சென்று, இருகைகளையுங் குவித்து நீரை அள்ளினான். ஒருகணம் அள்ளிய நீரைப்பாத்துக்கொண்டு அப்படியே நின்றான். செத்த புழு ஒன்று அதில் காட்சியளித்தது. நோயுற்ற போதும் பசியுற்றபோதும் தனக்குப் பரிந்து அன்னம் படைத்த தாயின் இன்முகம் அவன் மனக்கண் முன்தோன்றி மறைந்தது. கையிலிருந்த தண்ணீரோடிரண்டு சொட்டுக் கண்ணீர் கலந்தது. நீரைக் குளத்திலேயே ஊற்றிவிட்டுப் புறப்பட்டான்.

கொஞ்சதூரம் வந்திருப்பான். அவனால் நடக்கமுடியவில்லை. உடல் முழுவதுமே ஓர் நடுக்கம் உண்டாயிற்று. பார்வை மங்கியது. கண்கள் இருண்டன. இனித் தாமதித்தால் விழுந்துவிடுவோம் என்பதை உணர்ந்த அவன் எதிரே தெரிந்த ஒரு மரத்தை நோக்கி ஓடினான். அதன் நிழலில் ''தொபீ''ரென்று விழுந்தான். மெல்ல மரத்தில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டான்.

கண்களைத் திரும்பவும் திறந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். அப்போதுதான் அவன் படுத்திருப்பது அசுத்தமான இடம் என்பதை உணர்ந்தான். அதைவிட்டு எழுந்து செல்லவுந் தெம்பில்லை. கடந்த கால நிகழ்ச்சிகளையும் அவனது அப்போதைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதில் ஈடுபட்டு மனம் சொல்லொணா வேதனையடைந்தது.

அவ்வழியே சென்ற ஓரிருவர் அவன் மீது ஒருவியப்புப் பார்வையை வீசிவிட்டுச் சென்றனர்.



அந்த இரண்டு மோர்க்காரிகள் மட்டும் அவனருகே சற்று நின்றனர். அவன் அவர்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தான்.

''ஐயோ! பாவம்! படிக்கிற புள்ளே போலிருக்கு! கோவிச்சுகிட்டு வந்துட்டுதோ என்னவோ!'' என்றாள் ஒருத்தி.

அந்த இரக்க மொழிகளைக் கேட்ட அவனுக்கு வாய்விட்டு அழ வேண்டும் போல் தோன்றியது.

அதற்குள் ''என்னமா வேணும்'' என்றாள் இன்னொருத்தி தாய்மையின் கனிவு கலந்த குரலில்.

''தண்...ணி...கெடைக்குமா!

''ஐயோ! இதை முந்தியே சொல்லி யிருக்கப்படாதா!'' என்று தலையிலிருந்த மோர்க் கூடையை இறக்கிவைத்து ஒரு குவளையில் மோரை ஊற்றி அவனுக்குக் கொடுத்தாள். நன்றியறிதலோடு அவளை நோக்கிக் கொண்டே மோரைக் குடித்தான். இன்னொருத்தியும் ஒரு குவளையை அவனிடம் நீட்டினாள். அவன் மறுத்தான். அவள் வற்புறுத்தவே அதனையும் வாங்கிப் பருகிவிட்டான்.

''நீ எங்கேமா இருக்கிறது?'' என்று ஒருத்தி கேட்டாள். அவன் சொல்ல விரும்பவில்லை. அவன் கண்களில் நீர் துளிர்ப்பதைக் கண்ட அவ்விருவரும், ''வேண்டாம்மா! சொல்ல வேண்டாம்! நாங்க போறோம்'' என்று போய் விட்டனர். அவர்கள் மறையும் வரை அவன் பார்வை அவர்களைப் பின் தொடர்ந்தது.

பிறகு எழுந்து நடந்தான். சோர்வு குறைந்திருந்தது; நடப்பதில் அவ்வளவு சிரமந் தோன்றவில்லை. எனவே, எண்ணங்கள் கட்டுகளை அறுத்துக் கொண்டு புறப்பட்டன.

''சிலமணி நேரத்தில் எவ்வளவு பைத்தியக்காரத்தனமாக நடந்து கொண்டேன்! உயிரை மாய்த்துக் கொள்வதாம்! பைத்தியம் பிடிக்க வேண்டுமாம்! பிச்சைக்காரனாக ஊர் சுற்றுவதாம்! என்ன பைத்தியக்கார எண்ணங்கள்.

இவ்வாறு நடந்து கொண்டதற்கு நான்தான் காரணமா? ''நல்ல பிள்ளை'' யென்று ஆசிரியரிடமிருந்து நற்சாட்சிப் பத்திரம் பெற்ற நானா இவ்வாறு நடந்து கொண்டேன்? ''பரமசாது'' வென்று பள்ளித் தோழரிடமிருந்து பட்டம் வாங்கிய நானா இவ்வாறு நடந்து கொண்டேன்

இல்லை! ஒரு பேய் என்னை ஆட்டிவைக்கிறது என்னைமட்டுமா? என் தாயை-எண்ணற்ற குடும்பங்களை-எத்தனையோ கவிஞர்களை-எத்தனையோ புலவர்களை ஆட்டி வைக்கும் வறுமைப் பேய்தான் என்னையும் ஆட்டிவைக்கிறது.

இதோ! ஊரின் எல்லைவந்து விட்டதே! ஊரிலே யாருக்காவது நான் ஓடிப் போனது தெரிந்திருக்குமோ? அம்மா யாரிடமேனும் சொல்லிவிட்டிருப்பாளோ?''

இவ்வெண்ணம் அவன் நடைக்கு விரைவைத் தந்தது.

''இதோ! சுமை தாங்கி மேடை!''

''அதோ! அம்மா வேலை செய்கின்ற செல்வர் வீட்டுமாடி!''

''இதோ! நம் தெருவும் வந்து விட்டது.

"யாராவது எனக்குத் தெரிந்தவர் பார்த்துவிட்டால்......அவன் இன்னும் வேகமாக நடந்தான்.

வீட்டை யணுகிவிட்டான். கதவு திறந்தேயிருந்தது. அவன் தாய் யாருடனோ பேசிக் கொண்டிருந்தாள். கதவருகிலேயே நின்று கேட்டான்.

"......நான் என்னம்மா செய்வேன். நான்கு நாட்களாகவே மனம் சரியாக இல்லை. அன்று, கவனக் குறைவால் எசமானி கொடுத்த நான்கு ரூபாய்களை இழந்துவிட்டேன். அன்றிலிருந்து நான் எது செய்தாலும் அவளுக்குக் குற்றமாகப் படுகிறது. எந்நேரமும் வைதபடியே இருக்கிறாள். இன்று வெகு காலையிலேதான் வேலைக்குச் சென்றேன். "இவ்வளவு நேரஞ் சென்று வருவது?" என்று கடிந்து கொள்கிறாள். என்ன செய்வது? அவளைப் பகைத்துக் கொண்டால் அப்புறம் கையில் ஓடெடுக்க வேண்டியதுதான். எசமானியின் மேல் வந்த கோபத்தால் இவனைக் கடுமையாகப் பேசிவிட்டேன். காலையில் சென்றவன் இன்னும் வரவில்லையே அம்மா! சாப்பிடாது சென்றான்... எங்கு சென்றானோ?..."

அணையை உடைத்துக் கொண்டுவரும் வெள்ளம் போல இவ்வளவு நேரமும் அவன் கண்களில் தேங்கியிருந்த நீர் கன்னங்களில் வழிந்தது. அவன் முகத்தைத் துடைத்துக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தான்.

---


வரப்பெற்றோம்.

**1949-ம் ஆண்டு**

**திருக்குறள்**

**நாட்குறிப்பு.**

சைவ சித்தாந்த
நூற் பதிப்புக் கழகம்,
திருநெல்வேலி & சென்னை.

**விலை ரூ. 1—4—0.**

இந்தத் திருக்குறள் டைரியில் ஒவ்வொரு பக்கத்திலும் தலைப்பில் வரிசையாய் ஒவ்வொரு குறள் வீதம் முதல் 365 குறட் பாக்கள் கருத்துரையுடன் அச்சிடப்பட்டிருக்கின்றன. திருக்குறளைக் கற்றனைத்து ஊறும் அறிவு.

தமிழருக்கு இன்றியமையா எல்லாக்குறிப்புக்களும் இதில் அமைந்துள்ளன. திருவள்ளுவர் படத்துடன் கண்கவர் வனப்பாக இந் நாட் குறிப்பு விளங்குகிறது. தமிழர் கைக்கு அழகு தரும் சிறந்த அணி இஃது.

ஆல் இந்தியா நாஷனல் பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட் : : தலைமை ஆபீஸ்: **விருதுநகர்.**

போர்டு ஆப் டைரக்டர்கள்

| | |
|---|---|
| திரு. வே. வ. இராமசாமி | திரு. சு. ஆ. முத்து நாடார் |
| திரு. பே. சி. சிதம்பர நாடார் | திரு. பே. சிவ. பே. ஏனாதிநாதன் |
| திரு. மு. சே. பெரியசாமி நாடார் | திரு. கு. ச. சண்முகவேல் நாடார் |
| திரு. கூ. மு. அ. சி. வெயில்முத்துசாமி நாடார் | திரு. ரா. பொன்னையா ஆச்சாரி |
| | திரு. வா. அ. ப. சிவசாமி |
| | திரு. பே. ப. சபாபதி நாடார் |

நவீன இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள். தினம் ஓர் அணா சேமிக்க சாத்தியமுடையவர்களும் இன்ஷ்யூர் செய்து கொள்ளலாம். ரூ. 250, ரூ. 400, ரூ. 500, ரூ. 750, 900க்கு எண்டௌமெண்ட் பாலிஸிகள் பெறலாம். விபரத்திற்கு எழுதவும். தக்க சம்பளம் அல்லது கமிஷனில் வேலைசெய்ய ஏஜண்டுகள், ஆர்கனைசர்கள் தேவை, விண்ணப்பிக்கவும்.

**வே. வ. இராமசாமி,** மானேஜிங்டைரக்டர்.

**JUST UNPACKED**

Largest Varieties of:- Silks, Cottons, Woollens, Fancy Fabrics, Mosquito Nets, etc., etc. Sarees, Shirtings - A Speciality Attractive Shades and Tempting Prices! Whole Sale and Retail.

SRI BHARATI VASTRALAYA,
228 / 5, GOVINDAPPA NAICK STREET. **MADRAS - 1.**

**விருதுநகர்**

**ராஜன் ★**

**★ சோப்பு**

**சலவைக்குச் சிறந்தது.**

போட்டிகளை புறமுதுகிடச் செய்தோட்டிய

# என். வி. எஸ்.
# பட்டணம் பொடி

போலிகளைக் கலக்க வருகிறது!



தயாரிப்பில் பழைமை! நிர்வாகத்தில் புதுமை!
எனவே தான்

**N. V. S. மெடல் மார்க்கு**



பட்டணம் பொடி எண்டிசையும் புகழ்
பெற்றது.

**N. V. ஷண்முகம் கம்பெனியார்**

தபால் பெட்டி, 555. மதராஸ்.

ஆசிரியரும், வெளியிடுவோரும்: வே. வ. இராமசாமி, விருதுநகர்.
அச்சிடுவோர்: ப. குருசாமிக் குருக்கள், சச்சிதானந்தம் பிரஸ், விரு.

# மிழ்த்தென்றல்



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
- FEB 1949
MADRAS

அகில இந்திய காங்கிரசுச் செயற்குழுவில்
முதல் தமிழன்

அலை 4 1-2-1949

**ஆல் இந்தியா நாஷனல் பிராவிடெண்ட் இன்ஷ்யூரன்ஸ்**
**கம்பெனி லிமிடெட் : : தலைமை ஆபீஸ்: விருதுநகர்.**

போர்டு ஆப் டைரக்டர்கள்

திரு. வே. வ. இராமசாமி
திரு. பெ. சி. சிதம்பர நாடார்
திரு. மு. செ. பெரியசாமி நாடார்
திரு. சூ. மு. அ. சி. வெயில்முத்துசாமி நாடார்
திரு. சு. ஆ. முத்து நாடார்
திரு. பெ. சிவ. பெ. ஏஜுதிநாதன்
திரு. கு. ச. சண்முகவேல் நாடார்
திரு. ரா. பொன்னையா ஆச்சாரி
திரு. வா. அ. ப. சிவசாமி
திரு. பெ. ப. சபாபதி நாடார்

நவீன இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள். தினம் ஓர் அணா சேமிக்க சாத்தியமுடையவர்களும் இன்ஷ்யூர் செய்து கொள்ளலாம். ரூ. 250, ரூ. 400, ரூ. 500, ரூ. 750, 900க்கு எண்டௌமெண்ட் பாலிஸிகள் பெறலாம். விபரத்திற்கு எழுதவும். தக்க சம்பளம் அல்லது கமிஷனில் வேலைசெய்ய ஏஜண்டுகள், ஆர்கனைசர்கள் தேவை. விண்ணப்பிக்கவும்.

**வே. வ. இராமசாமி,** மானேஜிங் டைரக்டர்.

**JUST UNPACKED**

Largest Varieties of:- Silks, Cottons, Woolens, Fancy Fabrics Mosquito Nets, etc., etc, Sarees, Shirtings - A Speciality Attractive Shades and Tempting Prices! Whole Sale and Retail.

SRI BHARATI VASTRALAYA,
228 / 5, GOVINDAPPA NAICK STREET, MADRAS - 1.

# விருதுநகர் ராஜன் ★ ★ சோப்பு

சலவைக்குச் சிறந்தது.



# தமிழ்த் தென்றல்

ஆசிரியர்: **வே. வ. இராமசாமி**


போங்குக போங்குக
புலமையும் பொருளும்
போங்குக வளங்கள்
போங்குக தமிழ்நாடே !


கொடி–2 | திருவள்ளுவராண்டு — [illegible] தை (1—2—194[illegible]) | பூ–9



[Stamp:] OFFICE OF THE REGISTRAR OF BOOKS ... -FEB 1949. MADRAS


உள்ளுறை


| | | |
|---|---|---|
| அடுத்த ஆண்டு தேர்தல் | — த[illegible]கம். | [illegible] |
| காலத்தின் கோலம் | | [illegible] |
| சென்னையில் குறள் மாநாடு | | [illegible] |
| கடற்கரையிலே (17) பட்டினத்தார் | — ரா. பி. [illegible]ப்பிள்ளை | மக |
| சித்திரச் சிலம்பு | — அ. இராசகோ[illegible]பன் | மஎ |
| தமிழில் எரிமலைகள் | — தா. நரசிம்மன் | [illegible] |
| பைத்தியமா? -சிறு கதை | — அ. கு. கோதை | உரு |
| இருள் -கவிதை | — ரவி | உஅ |
| அவியல் -சிறுகதை | — மீ. வனசாட்சி | உகூ |
| சுந்தரி–சுந்தரன் (கவிதைக்கதை) | — கவிஞர் சிவகருப்பையா | ஙஎ |
| சூரியனை வாரி விழுங்குகிறோம் | — ஈ. த. இராசேசுவரியம்மையார் | சக |
| காலச் சக்கரம் - சிறுகதை | — மு. சங்கரலிங்கம் | சசா |
| மஞ்சள் வெய்யில் | — இனியன் | ருங. |
| உரையாணியும் பிறவும் | | ருரு |


*கதைகளில்வரும் பெயர்கள் கற்பனையே! கவிதை கட்டுரையாளரின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். தமிழ்த் தென்றலில் வெளிவரும் கட்டுரை, கதை முதலியன ஆசிரியர்க்கே உரியவை. ஆசிரியர் அனுமதியின்றி எவரும் அதைத்திரும்பவெளியிடும் உரிமையுடையராகார்.*

[ஆசிரியர்.

தமிழர் திருநாளாகிய
**பொங்கல் நன்னாளில்**
எமக்கு வாழ்த்து அனுப்பிய அன்பாளர் ஆதரவாளர் அனைவர்க்கும் எங்கள் நன்றி. வணக்கம் !

# அடுத்த ஆண்டு தேர்தல்

இந்திய அரசியலை வகுக்கும் சபையானது நாட்டின் அமைப்புச் சட்டத்தை அடுத்த ஆகஸ்ட் திங்களில் நிறைவேற்றிவிடும் என்றும் அச்சட்டத்தின்கீழ் அடுத்த ஆண்டில் தேர்தல் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த தேர்தல் மூலம் வெற்றி பெறுபவர்களே, மாகாண ஆட்சியையும் மத்திய ஆட்சியையும் கைப்பற்ற முடியும் என்பது ஒப்புக்கொள்ளப்படவேண்டிய உண்மை.

ஆகவே நாட்டில் உள்ள ஒவ்வொரு சக்தியும் தன்னுடைய வேலை முறையைத் தேர்தல் நோக்கித் திருப்ப ஆரம்பித்துவிட்டது. காந்தியடிகளின் கோட்பாடுகளைச் சிறிதும் மாற்றாமல் பின்பற்றி வரும் "புனித" கூட்டமொன்று இருக்கிறது. இக்கூட்டத்தாரின் எண்ணங்களும் விருப்பங்களும் அரிஜன் ஆங்கில வெளியீட்டில் விபரமாகக் காணலாம். காங்கிரசுக்காரர்களிடையே அநேக தவறுகள் மலிந்துவிட்டனவென்றும், காங்கிரசின் தன்மையும் போக்கும் மாற்றவேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது. வெறும் அரசியல் கட்சியாக இனி இருக்கவேண்டியதில்லையெனவும், உலக மக்களின் அன்றாட வாழ்க்கையில் நலன் தரும் பணி ஆற்றும்வழியில் இறங்கவேண்டுமென்ற அண்ணலின் கொள்கையில் நிற்கிறார்கள். பொருளாதார வல்லுநராகிய டாக்டர் குமரப்பா என்பவர் காங்கிரசு அரசாங்கம் பிழைசெய்யுமானால் அதைக் கண்டிக்க உரிமையுண்டென்றும், திருந்தவில்லையானால் அந்த ஆட்சியைக் கீழேயிறக்கிவிடக்கடமையும் உரிமையும் உண்டு என்றும் கூறி ஆங்காங்கு நிகழும் குற்றங்குறைகளை வெளிப்படுத்தி வருகிறார்.

மக்களுக்குப் பயன்படும் அநேக சாதனங்களைத் தேசியமயமாக்கவேண்டும், தொழிலாளர்களுக்கு வாழ்க்கைத்தரம் உயர்த்தப்படவேண்டும். இவைகளைத் தற்போதுள்ள காங்கிரசார் தீவிரமாகச் செய்யவில்லையென்றும், செய்யமாட்டார்களென்றும் சோசியலிஸ்டு என்னும் கூட்டத்தார் தாங்கள் தனிக்கட்சியென்றும் அடுத்த தேர்தலில் போட்டிபோடப்போவதாகச் சொல்லிவிட்டார்கள். இவர்களும் காங்கிரஸ்காரர்களாக இருந்தபோதிலும் ஆதிக்கத்தைத் தங்கள் வசப்படுத்த முனைந்து நிற்கின்றனர்.



இந்துமகா சபையினர் நாட்டில் இந்து அரசாட்சி ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரே கொள்கையுள்ளவர்கள். காங்கிரசில் உள்ள இந்துக்களில் வகுப்புவாதம் அற்றவர்கள் எண்ணிக்கை மிகச் சொற்பம் என்று "அரிஜன்" ஆசிரியர் கூறுகிறார். பாகிஸ்தான் தனி முகமதிய நாடாக விளங்கும்போது தம் நாடும் தனி இந்துஸ்தானாக ஆக்கவேண்டுமென்று துணிவுகொண்டுள்ளார்கள். இவர்களுக்கு உறுதுணையாயுள்ள ராஷ்டிரிய சேவா சங்கத்தினரும் தம் சண்டித்தனத்தை நிறுத்திவிட்டு சட்டப்படி வேலைசெய்வது என்று வெளிக்குவந்துவிட்டனர். இவர்களை ஒடுக்கியது தவறு என்றும் இவர்களுடைய இயக்கத்துக்கு மூலகாரணத்தை எடுக்க முயற்சிக்க வேண்டுமென்றும் காங்கிரஸ் பத்திரிகை அனைத்தும் அறிவுறுத்துகின்றன. ஆகவே இந்துஸ்தான் ஏற்படுத்துவதில் 'இந்து'க்களிடையே கொள்கையில் பேதம் இருப்பதாகத் தோன்றவில்லை. இந்துமகாசபைத் தலைவரும் அரசியல் நோக்கங்கொண்ட ஒரு புதுக்கட்சி தோற்றுவிக்கப் போவதாகத் தெரிவித்திருக்கிறார். இம்முயற்சியும் அடுத்த தேர்தலில் கண்வைத்துத்தான் என்று புலனாகிறது.

கம்யூனிஸ்ட் என்று வழங்கப்படும் பொதுஉடைமைக்காரர்கள் கையாண்ட பலாத்கார முறையினால்தான் ஒடுக்கப்பட்டிருக்கிறார்களென்றும், கொள்கையின் குற்றத்தினால் அல்ல என்றும் சென்னை மந்திரி பதிலிறுத்திருக்கிறார். பலாத்கார முறையை கைவிட்டு, சட்ட ரீதியான நடவடிக்கைகளில் இறங்கும் நோக்கமுள்ளவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தெரிகிறது. ஓய்வும், அதிகம் வேண்டும்; ஊதியமும் சரிபங்காக வேண்டுமென்ற மனப்பான்மை தொழிலாளர் உலகத்தில் பரவிவிட்டது. இந்தப் போக்கை செஞ்சட்டையினர் நன்றாக வளர்த்து வருகிறார்கள். ஆகவே காங்கிரசார் தொழிலாளர் துறையில் எவ்வளவோ செய்தபோதிலும், கம்யுனிஸ்டுகளின் செல்வாக்கு நாளுக்கு நாள் வளர்ந்துதான் வருகிறது.

சீனதேசம் பொதுவுடைமைவாதிகளிடம் சிக்கிவிட்டது. பர்மாவும் கூடிய சீக்கிரம் அதே நிலைக்கு வந்து விடலாம். கிழக்கு இந்திய தீவுகளிலும் பொது வுடைமை வாதிகளின் இயக்கம் பெருகியே வருவதாகத் தெரிகிறது. இந்நிகழ்ச்சிகளெல்லாம் நம் நாட்டில் உள்ள பொது மக்களுக்கு ஓர்வித உணர்ச்சி பெருக்கத்துக்கு இடந்தருவதல்லாமல், பொது வுடைமை வாதிகளுக்கு ஆக்கமும் கொடுக்கிறது. பொதுவுடைமை பெருவெள்ளம் வருகிறதாகவே எச்சரிக்கின்றார்கள் ராஷ்ட்ரபதியும் ஏனைய தலைவர்களும் எனவே அடுத்த தேர்தலில் கம்யுனிஸ்டுகளும் போட்டியிடுவார்கள் என்பதில் ஐயமில்லை.

தற்சமயம் மத்திய ஆட்சியை கையில் வைத்திருப்பவர்கள் தாங்களே இன்னம் சில ஆண்டுகள் அதிகாரத்தில் இருக்க வேண்டியது நாட்டின் நலத்துக்கு அவசியம் என்று கருதுகிறார்கள். இல்லாவிட்டால் வகுப்பு வெறி தலைவிரித்து நாட்டில் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்படுமென்று நினைக்கிறார்கள். அரசியல் மூக்குக் கயிறு தங்கள் கையில் இல்லாதொழியுமானால், இந்துஸ்தானத்துக்கும் பாகிஸ்தானுக்கும் போர் மூளும் என்றும், எங்கும் கொலையும் கொள்ளையும் சாதாரணமாகப் போய்விடும் என்றும் அஞ்சுகிறார்கள். மற்ற கட்சிகள் விரும்பியவாறு அரசியலிலோ, சமுதாயத்திலோ, பொருளாதாரத்திலோ திடீர் மாறுதல் செய்வது அறிவுடைமையில்லை யென்றும் பல்வேறுபட்ட வகுப்புகளையும் பக்குவப் படுத்தியே போக வேண்டுமென்றும் எண்ணுகிறார்கள். மத்திய அரசாட்சியில் இருப்பவர்கள் அனுபவம் வாய்ந்த அரசியல் சீலர்கள் என்றும் அவர்களுக்கு இன்னம் ஐந்து ஆண்டுக்கு பதவிகாலம் கொடுக்க வேண்டுமென்றும், யாரும் அவசரப்படக் கூடாதென்றும் எச்சரித்திருக்கிறார், உதவி முதல் அமைச்சராகிய சர்தார் பட்டேல்: இப்பேச்சில் அடங்கிய எண்ணம் என்ன? அடுத்த தேர்தலில் தானும் தன் சகாக்களும் வெற்றிபெற்று ஆட்சியைத் தொடர்ந்து நடத்தி வருவதற்கு முடிவு செய்திருக்கிறாகள் என்பதுதான்.

இப்பொழுது, மத்திய ஆட்சி என்று சொல்லப்படும் இந்திய நாட்டுத் தலைவிதியை உருவாக்கும் பொறுப்பு இரண்டு நபர்கள் கையில்தானிருக்கிறது. சர்தார் பட்டேலும், பண்டிதர் நேருவும் ஒருமையுடன் இருப்பதால் ஒழுங்காக நடைபெற்று வருகின்றது எனலாம். நேருவின் திறம் வெளி நாடுகளின் செல்வாக்கைக் கவர்ந்து உலக அரங்கில் இந்தியாவின் சிறப்பு ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. உள்நாட்டில் பட்டேலின் உறுதியான நடவடிக்கை, அமைதியை நிலைநாட்டி சிதறிக்கிடந்த குட்டி நாடுகளையெல்லாம் பிணைத்து ஒரே நாடாகும்படி செய்து தன் கைபிடியில் வைத்திருக்கிறார். நேரு இல்லாவிட்டாலுங்கூட அரசாங்கத்தை பட்டேல் நடத்திவிடமுடியும். ஆனால் பட்டேல் இல்லாமல் நேருவால் சிறிது காலங்கூட சமாளிக்க முடியாது என்பதை உணரலாம். ஆனபடியால் இவ்விருவரும் சேர்ந்து நடத்தும் திட்டப்படிதான் அடுத்த தேர்தலில் காங்கிரசார் ஈடுபடுவார்கள். சர்தாருக்கு வயதும் ஆகிவிட்டது அதோடு உடல் நலமும் குன்றி யிருப்பதால் இனி நேரடிப் பொறுப்பு ஏற்றுக்கொள்ள இயலாது ஆகையால் முதல் தேர்தலில் இடம் பெற்று இந்தியாவின் முதல் தலைவராக ஆக்கப் படுவார் என்பது நிச்சயம். பண்டிதர் நேருவைத் தலைமையாகக் கொண்ட அமைச்சர் குழு நாட்டில் உள்ள தீவிர கட்சிகளுக்



கெல்லாம் திருப்தி பண்ணக்கூடிய முறையில் அமைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கலாம்.

மேலே விவரிக்கப் பட்டுள்ள கட்சியின் நிலைகளையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் காங்கிரஸ் காரர்களுக்குப் பலத்த எதிர்ப்பு இருக்குமென்று தெரியவில்லை. ஆயினும் எதிர்கட்சி யென்று ஒன்று இல்லாவிட்டால் தனிக்கட்சி ஆட்சியாக மாறிவிடும், மக்களின் நன்மைக்கு பாதகமேற்படும் ஆகையால் எதிர்ப்புக்கட்சி அவசியம் என்பது அரசியலில் ஈடுபட்டவர்களின் முடிவு. டாக்டர் பட்டாபியும் எதிர்கட்சியை மதிக்கவேண்டு மென்றும் எதிர்கட்சித் தலைவரை ஒரு மந்திரியாகக்கூட பாவிக்க வேண்டுமென்றும் தாராளமாகக் கூறியிருக்கிறார். ஆகையால் உலகப் போக்கை அனுசரித்து தீவிர ஆர்வம் படைத்தோரெல்லாம் அரசியலிலும் தக்க பங்கு எடுத்துக் கொள்ளல் அவசியம் என விளங்குகிறது.

இந்நிலையில் நமது மாகாணத்தைப் பொறுத்தமட்டில் காங்கிரஸ், இந்துமகாசபை, சோசியலிஸ்ட், கம்யூனிஸ்ட் முதலியவைகளுக்கு மாறுபட்ட திராவிடக் கழகத்தின் போக்கு யாது என்று புரியவில்லை. சமூகக் கொடுமைகளையும் இயற்கைக்கு விரோதமாயுள்ள பேதங்களையும் இழிவுகளையும் நீக்குவதற்கு ஏற்பட்ட பிரசார இயக்கம் என்றும் அவசியம் ஏற்படின் நேரடி நடவடிக்கையில் இறங்கத் தயங்காத கட்சியென்றும் தலைவரால் சொல்லப்பட்டு வருகிறது. இப்போது மந்திரி சபையை கவிழ்க்கவோ, ஆதிக்கத்தைக் கைப்பற்றவோ திட்டமில்லை யென்றும் கூறுகிறார். பாதிக்கப்படும் ஒரு வகுப்பில் உள்ள பிற்போக்கு வாதிகளைத்தவிர மற்ற யாவரும், எக்கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்த போதிலும் கழகத்தின் நோக்கத்தில் உடன்பாடுள்ளவர்களாகத்தானிருக்கிறார்கள். கருத்துக்களை நடைமுறையில் கொண்டுவரும் வழிகளில் அபிப்பிராயபேதம் இருக்கலாம். பலாத்கார முறையை கனவிலும் சிந்தியாதவர்கள் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமானால் சட்ட சபையில் அங்கம் பெற வேண்டாமா என்ற கேள்வி பிறக்கிறது. எதிர்கட்சிக் காரரும் அதையே தான் எதிர்பார்க்கிறார்கள்.

சட்டசபை அங்கத்தினர் ஆகிவிட்டால் பதவியிலும் மற்ற சலுகைகளிலும் ஆசை ஏற்பட்டு கொள்கைகளை மறந்துவிடுகிறார்களென்றும் அதன் பயனாக கட்சிக்கு இழுக்கு ஏற்பட்டு மக்களின் வெறுப்புக்கு ஆளாக வேண்டிவருமென்று பெரியார் பயப்படுகிறார். இது பெரியார் தன் ஆற்றலிலே சந்தேகம் கொள்ளுவது போலாகும். திராவிடர் கழகம் அரசியலில் இறங்கிவிட்டால் பதவிப் பித்தர்கள் மறுபடியும் கட்சிக்குள் புகுந்து தொண்டர்கள் இதுகாறும் பட்ட தொல்லைகளின் பயனை அனுபவிக்க வந்துவிடுவார்கள் என்று

அறிஞர் அண்ணாத்துரை அபிப்பிராயப் படுகிறாராம். தளபதி தன் திறத்தைத் தானே மதிக்கவில்லை போலும்.

கொள்கையில் விடாப்பிடியாக இருந்த போதிலும் கட்சியை விட்டுப் போனவர்களையும், அரசாங்கத்தில் மந்ற சக்தியோடு உறவாடி பதவியோ சலுகையோ பெற்றவர்களையோ, பெரியார் அவர்களின் தலைமை ஸ்தானத்துக்கோ, அறிக்கைகளுக்கோ விரோதம் பண்ணியவர்களை திராவிடக் கழகத்தில் சேராதவாறு விதி செய்து விடலாம். லட்சக்கணக்கான வாலிபர்கள் பெரியாரின் உணர்ச்சி வேகத்தில் மூழ்கி யிருக்கிறார்கள். சிறந்த படிப்பாளிகள் அநேகர் இருக்கின்றனர். அரசியலை நடத்தும் பொறுப்பு கொடுத்தாலும் திறம்பட உழைக்கும் நுண்ணறிவாளர்கள் பலர் உண்டு. அவர்களையெல்லாம் நாட்டுக்குப் பயன்படும்படி பெரியார் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். அடுத்த ஆண்டு தேர்தல் வரும்போது ஏனைய கட்சிகளெல்லாம் அரசியலில் தீவிர பங்கு எடுக்கும்போது தம் கட்சியினர் சிதறிப்போகாமல் பார்த்துக்கொள்வதுதான் இனி முக்கியம் என்று கருதுகிறோம்.

அப்படி முன்னுக்கு வந்தால் பிறகட்சிகளும் கூடிக்கலந்து நாட்டுக்கு உருப்படியான வேலைத்திட்டம் வகுக்க தாராளமாக பிரியப்படுவார்களென்று நம்புகிறோம்.

அண்மையில் வியாபாரச் சங்கங்கள் சென்னையில் அகில இந்திய காங்கிரஸ் தலைவருக்கு வரவேற்பு அளித்தபோது ஆந்திரர் சங்கம் சார்பாக குண்டூர் நரசிம்மராவ் பேசுகையில், கைத்தொழில் வளர்ச்சியில் தென்னாடு மிகவும் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகவும் வடநாட்டாருக்கு இங்கு கிடைக்கும் மூலப்பொருட்களை ஏற்றுமதி செய்துவிட்டு அவைகளால் ஆக்கப்பட்ட சாமான்களை இறக்குமதி செய்யும் நாடாக நமது சென்னை மாகாணம் இருப்பதாக பிரலாபித்திருக்கிறார். எனவே தென்னாட்டின் குறைபாடுகளை நீக்குவதற்கு எல்லாக் கட்சியினருக்கும் ஏக்கமிருக்கிறது என்று தெளிவாகிறது. ஆகையால் வருங்காலத்தைப் பயன் படுத்த முற்படுவது சாலச் சிறந்ததாகும் சென்னையில் நடந்த குறள்மாநாட்டில் இனி திராவிடக்கழக மாநாடு தேவையில்லை யென்றும் குறள்மாநாடே ஆண்டுதோறும் நடத்தவேண்டு மென்றும் பெரியார் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நமது அறநெறி வளர்ச்சிக்கு குறள் வழிநின்று பிரசாரஞ் செய்யலாம். மக்கள் ஆதரவு பெருகி வளருமென்பதில் ஐயமேயில்லை. ஆயினும் அரசியலில் நம் உரிமையும் பெற அறிஞர் அண்ணாத்துரையை நமது பெரியார் அவர்கள் வாழ்த்தி அனுப்புவார்களாக.

தமிழ் வெல்க!

# காலத்தின் கோலம்

## தேனினும் இனிய : : : : : செந்தமிழ்

மொழியில் இயற்றப்பட்ட எண்ணிறந்த பழமையான நூல்களிற் பல இன்னும் அச்சேறாமல் ஏட்டுச் சுவடிகளாயிருக்கின்றன. அவற்றில் உயர்ந்த குறிக்கோள்கள், சிறந்த கருத்துக்கள், அழகிய சொற் சித்திரங்கள், கலைநுணுக்கங்கள் அடங்கியிருக்கின்றனவாம். அவற்றைச் செல்லரிக்க வொட்டாமல், இம்மறுமலர்ச்சிக் காலத்தில், உயிர்ப்பித்து, மக்களுக்குப் பயன்படு முறையில் அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டும். நம் முதலமைச்சர் ஓமந்தூரார் இத்துறையில் ஊக்கங் கொண்டிருப்பதாக உணர்ந்து மகிழ்கிறோம். இதற்காக ஒரு நூறாயிரம் வெண்பொன் ஒதுக்கியிருப்பதுடன் மத்திய அரசாங்கத்திடமிருந்தும் உதவிப் பொருளை எதிர்பார்ப்பதாகத் தெரிகிறது. உண்மையான தமிழார்வமும், ஆராய்ச்சித் திறமும் உடையோர் வேறு எத்துறையிலீடுபட்டிருந்தாலும் அவர்களைக் கொணர்ந்து இப்பணியில் முழுப் பொறுப்பு அளித்து, பழங்காலச் சுவடிகள் ஆங்கிங்குப் பதுங்கிக் கிடந்தாலும் அவற்றை வெளிக் கொணர்தற்கு அதிகாரமும் அளித்து நல்லதோர் திட்டத்தை ஏற்படுத்தி ஆவன செய்ய விழைகின்றோம். எவ்வளவோ சீரும் சிறப்புமாகக் கணவன் வீட்டில் வாழ்ந்தாலும், தாய்வீட்டின்பால் ஆசையும் பெருமையும் வலியுறுத்தும் பெண்டிர் போல தமிழன்பர் பலர் உலாவுகின்றனர். அவர்கள் கையில் இவ் அரியபணி சிக்காமலிருக்குமானால், உறுதியாகவே நல்ல வெற்றியைத் தரும் என்று இராமசாமித் தமிழனுக்கு எச்சரிக்கையோடு கூறுகிறோம்.

## தமிழைக் காக்க

எங்களுக்குத் தெரியாதா? என்று பெருமையடித்துக் கொள்ளும் அமைச்சர்-தமிழர்-எவரும் சென்னையிலே சில நாட்களுக்கு முன் நிகழ்ந்த குறள் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. தமிழருக்காக உலவுவதாய்ச் சொல்லிக் கொள்ளும் செய்தித் தாள்களின் உரிமையாளர்களும் அதில் பங்கு கொண்டிலர். குறள் மாநாட்டுச் செய்திகளை அவ் இதழ்கள் வெளியிடவும் இல்லை. செய்தி நிலையங்களும் இதிற் கவலையற்று விட்டன. தமிழ் நாட்டுக்கென்றே இருப்பதாகச்சொல்லும் திருச்சி வானொலியும்

ஊமையாயிருந்தது. இதை அல்லது வேதம்பற்றி ஏதோ ஒரு மூலையில் வயிற்றுப் பிழைப்புக் கூட்டமொன்று பஜனை பாடினால், மேற்கூறிய திருக் கூட்டமனைத்தும் கூத்தாடியிருக்குமன்றோ? இவர்களைத் தமிழர் என்று கூறமுடியுமோ? ஈரோட்டுப் பெரியார் கூட்டின மாநாடு ஆகையால் அவை வாளா இருந்தன.

"எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும், அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்னும் திருக்குறளைத் தினந்தோறும் வெளியிட்டு வந்த தினசரி இப்பொழுது அதை நழுவ விட்டது. இத்திருக்குறளை முற்கூறிய அனைவரும் உணர்ந்திருக்கிறார்களா எனக் கேட்க ஆசைப்படுகிறோம். எந்நிலையிலுள்ள யாவரேயாயினும், நம் குறள் இருக்க, அதை மறைத்து வேற்று மொழியிலுள்ள வேறு எந்த நூலைப்பற்றிப் பேசினாலும் அவர் தமிழர் என்று சொல்லத் தகுதியற்றவர். என்பது நம் உறுதியான கருத்து. ஒரு வெளியீடு கேலிச்சித்திரத்தில் தன் வேலையைக் காட்டுகிறது. தன் வீட்டில் தமிழைக் கொலை பண்ணும் இப்பேர்வழி, முட்டாள் தனமாகப் பேசும் சித்திரத்திற்கு மீசை போட்டும், மாறாகப் பேசுவதற்கு உச்சிக்குடுமி வைத்தும் பகட்டுகிறது. காலம்தான் புகட்ட வேண்டும்.

## உயர் நீதி மன்றத்தின்

முதல்வர்; தாம் ஆந்திரர். என்ற முறையில், தம்மைத் தலைவராகக் கொண்ட ஆந்திர சபையின் சார்பாக காங்கிரசுத் தலைவர் டாக்டர் பட்டாபி சீதாராமய்யாவுக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்து மகிழ்ந்திருக்கிறார். அரசாங்கத்தில் அலுவல் செய்வோர்—அவருள்ளும் நீதிமன்றத் தலைவர், கட்சி சார்புக்கு இடங்கொடுக்கலாகாது என்ற மரபு இருந்தபோதிலும், நீதி முதல்வர் இராசமன்னார், தம்மிடம் இனப்பற்று எத்துணை மேலோங்கியிருக்கிறது என்பதைக் காட்டிக்கொண்டார். ஆனால், அரசாங்க அலுவலராகிய தமிழர்க்கு இத்தகைய துணிவு உண்டோ? இல்லையே? ஆயினும் "நீங்கள் எல்லாரும் தமிழருக்காகப் பாடுபடுவதாய்ச் சொல்கிறீர்களே; என் போன்றோர்க்கு என்ன செய்திருக்கிறீர்கள் எனக் கேட்கத் தயங்கார். என்றாலும், அவர்கட்குக் கீழ் வேலை பார்க்கும் சிறிய ஓர் தமிழனுக்காகப் பரிந்து பேசினாலும், சட்டம், ஒழுங்கு, வேலை முறை, காலப் போக்கு முதலியவற்றை எடுத்துப் பேசப் பின் வாங்கார். தமிழ்த்தாயே சொல்லட்டும்.

## தென் ஆப்பிரிக்காவில்

நம் நாட்டினரைக் கொள்ளையடித்து, கொலைபுரிந்து, தீயிட்டுக் கொளுத்தி யிருக்கின்றனர். அமெரிக்காவில் நீக்கிரோக்களை உயிரோடு தோலுரிப்பார்கள். நம் நாட்டில் பறைச்சேரிகளை மூட்டை முடிச்சுடன் நெருப்புக் கடவுளுக்கு இரையாக்குவர். இனவெறி, நிறத்திமிர், சாதி ஆணவம் ஆகியவைகளே இக்கொடுமைகளுக்கெல்லாம் அடிப்படை. அகில உலகச்சமுதாயப் புரட்சி வந்தால்தான் தனி மனித உரிமை பெறும் நற்காலம் உதயமாகும்.



## சீனா நாடு

மிகத் தொன்மை வாய்ந்தது. புத்தர் பெருமானின் அறநெறியில் ஒழுகும் மக்கள் நிரம்பிய நாடு. இருபதாண்டுக்குமுன் அங்குத்தொடங்கிய உள்நாட்டுக் கலகம் நாளுக்கு நாள் வளர்ந்து வந்திருக்கிறது. சென்ற உலகப் போரில் சீனா நேச நாட்டினருடன் சேர்ந்து, தனக்குத் தொல்லை விளைத்து வந்த சப்பானிய நாட்டை முறியடிக்க முடிந்தது. அக்காலத்தில் சீனாவின் முதல்வராக விளங்கிய தளபதி சியாங்கே-சேக் உலகப் பெரியாருள் ஒருவராக மதிக்கப் பெற்றார்; தம் நாட்டையும் வல்லரசுகளில் ஒன்றாகத் திகழச் செய்து வந்தார். எனினும், உள்நாட்டில், தமக்கு நேரிட்ட எதிர்ப்பையும், பெருகிக் கொண்டு வந்த கலகத்தையும் ஒடுக்க இயலாமல் சப்பைக்கட்டுக் கட்டிக் கொண்டு வந்திருக்கிறார். அவ்வமயம், அத்தளபதிக்கு நம் பண்டிதர் நேரு போன்ற பெருந்தலைவர் ஆதரவளிப்பது முற்றிலும் தவறு என்று நேதாஜியின் தமையனாராகிய சரத் சந்திரபோஸ் வன்மையாகக் கண்டித்து வந்தார். இப்பொழுது, இறுதியாய், சீனாவில் பொதுவுடைமைக்காரர் வலுத்தனர்; ஏனைய வல்லரசுகள் கையை விரித்துவிட்டன. தளபதி சியாங்கே-சேக் தம் சொந்தவூருக்குப் பறந்து விட்டாராம். நாட்டின் நலத்திற்கும் மக்களின் நன்மைக்கும் கேடு வரும் வண்ணம் ஆட்சிபுரியும் எந்தத் தலைவனின் முடிவும் இவ்வாறுதான் ஆகும் என்பதைக்காலக்கண்ணாடி காட்டுகிறது.

## இந்தோனேசியாவில்

குடிஅரசு நிறுவிய தலைவர்களை மடக்கி, நாட்டை அடக்குமுறையால் ஒடுக்கிக் கலாப் படைகளை ஏவி, டச்சு அரசாங்கத்தினர் நடபடிக்கை எடுத்திருக்கின்றனர். ஐக்கிய நாட்டுச் சங்கத்தின் பாதுகாப்புக்குழுவினர் இந்தோனேசியாவில் அமைதியை நிலை நாட்டவும் டச்சுக்காரருக்கும் குடி அரசுக்காரருக்கும் ஒரு உடன்பாடு ஏற்படத் தக்க திட்டம் போட்டிருக்கும் நிலையிலேயே இம்மாதிரி டச்சு ஆக்கிரமிப்பு செய்தது ஆசியா எங்கும் கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, ஆசியாக் கண்டத்தின் தலைமணியாக விளங்கும் இந்தியாவானது இப்பிரச்சினையில் முன் அணியில் நிற்பது மிகவும் பெருமைபடக்கூடிய நிகழ்ச்சியாகும். நமது கண்டத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு ஒரு மாநாட்டை பண்டிதர் நேரு டில்லியில் கூட்டியிருக்கிறார். மொத்தத்தில் பதினேழு நாடுகள் பங்கு கொண்டிருக்கின்றன. மாநாட்டை ஆரம்பித்து வைத்த நேரு "இனி ஆசியா கண்டத்தில் எந்த அந்நிய ஏகாதிபத்திய ஆதிக்கமும் தலைகாட்ட முடியாது" என்ற வீரமொழிகளை விளம்பி யிருக்கிறார். இம் மாநாடு வெற்றியுறுமென்பதில் ஐயமில்லை. மாநாட்டின் யோசனையை ஏற்றுத் தக்க நடவடிக்கை எடுக்கப் பாதுகாப்பு சங்கத்துக்கு இயலாவிட்டால் கூடியிருந்த நாடுகள் அதற்கு வேண்டிய ஏற்பாட்டை இந்தியாவின் தலைமையில் செய்யத் தயங்கா என நம்புகிறோம். பண்டித நேருவின் ஆர்நோக்கைப் பாராட்டுவதுடன் அவருடைய புகழ் உலகெங்கும் ஓங்குவதையும் மெச்சுகிறோம்.

# சென்னையில் குறள் மாநாடு

[ தி. வ. ஆ. 1980, தை–௨, ௩-ம் நாட்கள். ]

திருவள்ளுவரியற்றிய திருக்குறள் தமிழர்களின் பொது மறையாகும். வையத்து வாழ்வார்கள் உள்ளிருள் நீக்கும் விளக்காகும். மக்களடையத்தகும் அறம் பொருளின்பம் பற்றித் திறம்படக்கூறும் செவ்விய நூல். சாதிமத வேறுபாடற்ற சமநிலைக் குடியரசைத் தோற்றுவிப்பதற்குத் துணைபுரியும் அரசியல் நூல். தமிழர் பண்பாட்டின் விளைவாகத் தோன்றிய இப்பெருநூலைத் தமிழர்கள் நன்முறையில் உரிய வழியில் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இவ்வற நூலாசிரியராம் வள்ளுவர் பெருமானை இழிபிறப்பினராக எடுத்துரைத்தனர். புத்தர், ஏசு, முகம்மது, ரூசோ, காரல் மார்க்ச போன்ற பெரியார்களோடு ஒத்து எண்ணத்தகுந்த அறிஞரை, ஒரு புலவராகவே கருதினர்; திருக்குறளை ஒரு நீதி நூலாகவும், இலக்கியமாகவும் மதித்தனர். வடமொழி முதலிய வேற்று மொழிகளின் செல்வாக்குத் தமிழகத்தில் மிகமிக வள்ளுவரையும் திருக்குறளையும் தமிழர்கள் மறக்கத் தொடங்கினர்; சிற்றூரில் வாழும் சிறுவர் முதல் பெருநகரில் வாழும் பெரும் புலவர் ஈறாகக் கீதையையும் பாரதத்தையும் இராமகாதையையும் படித்தனர்; பொய்யாமொழியைப் புறக்கணித்தனர் புலவர்களில் ஒரு சிலர் மட்டுமே வள்ளுவரை மறவாது இருந்தனர். தமிழ்ப் புலவர் நிலை எள்ளி நகையாடத் தகுந்ததாகப் போய் விட்டமையின் அவரால் பாராட்டப்படுவன எவ்விதம் பெருமையடைதல்கூடும்?

தமிழ் நாட்டில் விழிப்புணர்ச்சி தோன்றிவிட்டது. தமது மொழி, கலை, நாடு முதலியவற்றைப் போற்ற வேண்டுமென்ற எண்ணம் காட்டுத்தீப்போல் பரவிவருகின்றது. திருவள்ளுவர்-திருக்குறளைப் பற்றியும் சிந்திக்கத் தொடங்கிவிட்டனர். தமிழராண்டு வள்ளுவர் பெயரால் வழங்கவேண்டுமென்று வள்ளுவராண்டு எனக் கையாளத் தொடங்கி விட்டனர். தமிழர் மறையும் சட்ட நூலும் திருக்குறளே என முழங்குகின்றனர்.

தமிழ்ப் பெருமக்களின் தணியாத ஆர்வ வெள்ளம் சென்னையில் நடைபெற்ற குறள் மாநாட்டில் கரை புரண்டு ஓடிற்று. ஆடவர் பெண்டிர், சிறியவர் பெரியவர், புலவர்கள் பொதுமக்கள், அனைவருமே பல்லாயிரக் கணக்கில்



வந்து குழுமி இருந்தனர். திருக்குறளை ஒரு இலக்கியமாக மட்டும் கருதியிருந்தால் ஒருசிலர் புலவர்கள் தாம் வந்திருப்பர். நிலைமை மாறிவிட்டது. திராவிட நாகரிகக் காவலரே திருவள்ளுவர் என்றனர். வேத கலாச்சாரப் படையெடுப்பை எதிர்த்த வீரரே வள்ளுவர் என்று வீறுகொண்டு மொழிந்தனர். வருணாசிரமப் புரட்டை வெளிப்படுத்தி மக்களை வாழ்விக்கவந்த திருக்குறளை வணங்குவோம் என வாயார வாழ்த்தினர்.

முதல் நாள் (15-1-49) தலைமைதாங்கிய பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், "இதுகாறும் புலவர்களுக்கு மட்டும் பயன்பட்டு வந்தமை இப்போதேனும் மாய்ந்து போகட்டும்; திருக்குறள் தமிழனது திருமறை நூலாக விளங்கும் வாய்ப்பை அடையட்டும். மக்கள் எல்லாரும் இன்புற்று வாழ்தல் வேண்டும் என்ற ஒரு கருத்தையே அடிப்படையாகக் கொண்டு பண்டைத் தமிழனால் எழுதப்பட்ட நூல் பாமரர்கட்கும் பயன்படட்டும். அமெரிக்கப் பேரறிஞர் வில்கி அவர்கள் விரும்பிய 'ஒரே உலகம்' நம் திருக்குறள் மூலமேனும் இனிது வந்தடையட்டும்" என்று கூறினார்கள்.

நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் துவக்கவிழா ஆற்றுங்கால், "பண்டைத் தமிழனின் சிறந்த பண்புகளை எடுத்துக் கூறும் நூல் திருக்குறள்; மனுமுதலான வடமொழி வல்லுநர் கூறி இருப்பதைச் சாரமாகத் திரட்டித் தருவது என்று கூறுவது பொருந்தாது" என்று நிறுவினர்.

வரவேற்புரை நிகழ்த்திய தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்கள் திருக்குறளை உள்ளபடி அறிந்துகொள்ள, பால் அறிவு நூலும் (Sexual science) மார்க்கிசமும் (Marxism) நன்கு தெரிந்திருத்தல் இன்றியமையாதது" என்றும், "பெரியாருடைய இயக்கம் எந்த ஒரு சாதிக்கோ, சமயத்திற்கோ, நிறத்திற்கோ, நாட்டுக்கோ, உரிமையுடைத்தல்ல. உலகுக்கே உரியது. அனைவரும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவர்கள் என்ற உயர் நீதிக்காகப் பாடுபடும் இயக்கம் என்றும் அவ்வியக்கத்திற்கு ஆக்கம் தரும் சிறப்பான தமிழ் நூல் திருக்குறள்" என்றும் குறிப்பிட்டார்.

இரண்டாம் நாள் தலைமை தாங்கிய திரு. சக்கரவர்த்தி நயினார் அவர்கள் (M. A., I. E. S.) "வேதத்தில் காணப்படும் கலைப்பண்பு துன்பஞ் செய்தலையே அடிப்படையாகக் கொண்டது என்றும் திராவிடர் நூலாம் திருக்குறளில் காணப்படும் கலைப்பண்பு அருள்

நெறியை அடிப்படையாகக் கொண்டது" என்றும் திராவிடர்கள் திருக்குறளைத் தம் கருவூலம்போல் காப்பாற்றி திருவள்ளுவர் வழிப்படி வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதன் மூலம் திராவிட நாட்டைக் காப்பாற்றி, அதன் வழியே இந்தியாவை, ஏன், உலகத்தையே காப்பாற்ற வேண்டியது திராவிடனுடைய கடமை" என்றும் வலியுறுத்தினர்.

முதல் நாள் மாலையில் சாத்தூர் வழக்கறிஞர், புலவர் அ. சு. கந்தசாமி முதலியார் அவர்கள் வள்ளுவர் படத்தைத் திறந்து வைத்து அரியதோர் சொற்பொழிவு ஆற்றுங்கால் "தலைவருள் தலைவர்; புலவருள் புலவர் திருவள்ளுவர்" என்று வாழ்த்தினர்.

இரண்டு நாட்களிலும் பல புலவர்கள் திருவள்ளுவர் திருக்குறள் பற்றிச் சிறந்த சொற்பொழிவுகளாற்றிச் "சிறக்க வள்ளுவர் கொள்கை" எனச் செப்பினர். திருக்குறள் மணி தி. ப. சுப்பிரமணியதாசு அவர்களின் திருக்குறள் பற்றிய எண்வகை நினைவாற்றலைக்கண்டு அனைவரும் வியந்தனர்.


இம் மாநாட்டைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாயிருந்த பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளுக்கு அரண் செய்வது திருக்குறள் என்றும், பிறப்பால் உயர்வு தாழ்வு கற்பிக்கும் ஆரியக் கொள்கைகளைப் போக்குவதற்கு திருக்குறள் ஒப்பற்ற கருவியாகும் என்றும், திருவள்ளுவர் பெண்களை இழிவு படுத்தவில்லை என்றும் குறிப்பிட்டார்கள். 'பெண் வழிச் சேறல்' என்ற பகுதியில் கூறியிருப்பதற்குத் தகுந்த பொருள் கூறினர். மணம் செய்து கொள்ளாமல் தான் தோன்றித்தனமாக நடக்கும் பெண்களைச் சேரும் ஆடவர்கட்கு அவ்வறிவுரை என்று விளக்கினார்கள்.

பெரியார் அவர்கள் திராவிட இனஉயர்வுக்கு ஆற்றிவரும் தொண்டை எவரும் மறக்க முடியாது; மறைக்க முடியாது. இன்று சாதியாலும், சமயத்தினாலும், கட்சியாலும் பிரிந்துள்ள தமிழர்களை ஒன்று படுத்தவேண்டும். பெரியார் அவர்கள் திருக்குறளைக் கருவியாகக் கொண்டு எல்லாத் தமிழர்களையும் ஒன்றுபடுத்தி, வள்ளுவர் நெறியில் நாட்டாட்சியை அமைப்பதற்கு முயலுவார்களாக. மார்க்சீசக் கொள்கை அடிப்படையில் லெனின் சோவியத் ஆட்சியை அமைத்தது போல், திருக்குறள் அடிப்படையில் தமிழக ஆட்சியை அமைத்தல் வேண்டும். வள்ளுவர் நெறியில் அனைவரும் ஒன்றுபடுதல்வேண்டும். குறள் மாநாடு வருங்காலத் தமிழக வரலாற்றில் திருப்பு நிகழ்ச்சியாகக் கருதப்படும். பெரியார் அவர்கள் பெருந்தொண்டு சிறப்பதாக!

வள்ளுவர் அறம் வெல்க.

---

குறிப்பு:— இரண்டாம் நாள் இரவில் அறிஞர் அண்ணாதுரை குழுவினரால் 'சந்திரமோகன்' என்ற நாடகம் நடிக்கப்பட்டது. மாநாட்டில், ஆண்டுக்கொரு குறள் மாநாடு கூட்டுவதெனவும், குறளுக்கு உண்மை உரைகாண ஒரு குழு நியமிப்பது என்றும் முடிவுகள் நிறைவேற்றப்பட்டன.



# கடற்கரையிலே

## (17) பட்டினத்தார்

[ரா. பி. சேதுப் பிள்ளை]

சென்னையின் அருகேயுள்ள ஊர்களிலே சாலத் தொன்மை வாய்ந்தது திருவொற்றியூர். மூவர் தமிழும், முனிவர் அருளும் பெற்றது அம்மூதூர். பட்டினத்தார் என்று தமிழகம் போற்றும் பெரியார் அப்பதியிலே மிகவும் ஈடுபட்டார். அவரை நன்றாகப் பற்றிக்கொண்டது ஒற்றியூர். தமது உள்ளங்கவர்ந்த ஒற்றியூர்க் கடற்கரையிலே நின்று அவர் உயரிய உண்மைகளை உணர்த்துகின்றார்:-

### கற்றவர் போற்றும் ஒற்றிமாநகரே!

நல்லோர் விரும்பும் கரும்பையுடைய உன்னை நாடி யடையாதார் இந்நானிலத்தில் உண்டோ? இக்கடலருகே நிற்கும் கரும்பைக் கண்படைத்தவர் காணாதிருப்பரோ? அக்கரும்பின் தன்மையை என்னென்று உரைப்பேன்? காண இனியது அக்கரும்பு! கண் மூன்றுடையது அக்கரும்பு! கண்டங்கறுத்தது அக்கரும்பு! தொண்டர்க்கு உகந்தது அக்கரும்பு! கண்டுகொண்டேன் அக்கரும்பை!!

"கண்டம் கரியதாய்,
கண்மூன் றுடையதாய்
அண்டத்தைப்போல அழகியதாய்த் - தொண்டர்
உடல் உருகத் தித்திக்கும்
ஓங்கு புகழ் ஒற்றிக்
கடல் அருகே நிற்கும் கரும்பு"

அக் கரும்பே என் மாயப்பிறவிக்கு அருமருந்து!

### அலை கடலே!

உன் அலைகளை ஒத்ததே என் நிலையும். அடுத்தடுத்து வருகின்ற உன் அலைகளை எண்ண முடியுமோ? அப்படியே என் பிறப்பும் எண்ணத் தொலையாது. இம்மண்ணுலகில் பிறந்து பிறந்து நான் மனம் சலித்தேன். என்னை வயிற்றிலே சுமந்து சுமந்து அன்னையும் மெய் சலித்தாள். என்னைப்படைத்துப் படைத்து அயனும் கை சலித்தான். இதுவரை

பிறந்தது போதும்! இனிப் பிறவாதிருக்க வேண்டும். அந்நிலையை நாடியே உன்னைத் தஞ்சமாக வந்து அடைந்தேன்.

## பழங் கடலே!

முன்னொருகால், இத்தமிழகத்தை வாழ்விக்க வந்த வள்ளல்- செந்தமிழ்ப்பாமாலை தொடுத்துச் சிவனார் மனங்குளிர அணிந்த செம்மல்- உன் கரையை வந்தடைந்தார். உள்ளம் உருகிப் பாடினார். பிறவிப் பெருங்கடல் கடந்தார். ஒப்பற்ற அன்பு வாய்ந்த அப்பெருமானை 'அப்பர்' என்று அழைப்பது எத்துணை அழகு! என் 'அப்பன்' காட்டிய நெறியைக் கடைப்பிடித்தல் என் பிறப்புரிமை யன்றோ? அவர் பாடிய திருப்பாட்டைக் கேட்டிருப்பாய்! கடலே!

> "மனம் எனும் தோணி பற்றி
> மதி எனும் கோலை ஊன்றி
> சினம் எனும் சரக்கை ஏற்றி
> செறி கடல் ஓடும் போது
> மதன் எனும் பாறை தாக்கி
> மறியும் போது அறிய
> வொண்ணு
> உனை உனும் உணர்வை நல்காய்
> ஒற்றியூர் உடைய கோவே"

என்று அவர் அருளிய பாட்டே எனக்கு வழிகாட்டுகின்றது. வாழ்க்கை என்னும் கடலிலே ஓடும் உயிருக்கு இதனினும் உறுதியுண்டோ! மனத்திலே சீலம் என்னும் சரக்கை ஏற்றாது சினம் என்னும் சரக்கை ஏற்றுதல் சிறுமையன்றோ? சேர்ந்தாரைக் கொல்லும் சினத்தைச் சரக்காகக் கொள்பவன் சிதைந்து ஒழிவனன்றோ? மனம் என்னும் தோணியில் சினம் என்னும் சரக்கை ஏற்றிச் செல்லும்போது செருக்கென்னும் பாறை தாக்கி நொறுக்கிவிடும் என்று அப்பர் கூறியது அருள் வாக்கன்றோ?

## செல்வச் செழுங்கடலே!

யான் என்ற செருக்கும், எனது என்ற செருக்கும் அற்றவரே பேரின்ப உலகம் பெறுவர் என்று தமிழ்மறை பாடிற்றன்றோ?

> "யான் எனது என்னும்
> செருக்கறுப்பான் வானோர்க்கு
> உயர்ந்த உலகம் புகும்"

என்று வள்ளுவர் அருளிய வாய்மொழி தெள்ளமுதம் அன்றோ? வாழ்க்கையை உருப்படவொட்டாமல் சிதைத்து அழிக்கும் செருக்கை 'மதன் எனும் பாறை' என்று அப்பர் பெருமான் பாடிய அருமையை எவ்வாறு புகழ்ந்து உரைப்பேன்?



## நீர்ப் பெருக்குற்ற : : : : நெடுங் கடலே!

செல்வச் செருக்கே செருக்கினுள் எல்லாம் தலையாகும். வாழ்க்கை செம்மையாக நடைபெறுவதற்குச் செல்வம் வேண்டியதுதான். "பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை" என்பது பொய்யா மொழியே! ஆயினும் செல்வத்தின் பயனறிபவர் ஒரு சிலரே யாவர். அல்லும் பகலும் அருப்பாடு பட்டுத் தேடிய பணத்தை மண்ணின் உள்ளே புதைத்து வைத்து மாண்டு ஒழிந்தவர் எத்தனை பேர்? பரிந்து தேடும் பணத்தைப் பார்த்துப் பார்த்து மகிழ்வதே பேரின்பம் என எண்ணி வாழும் ஏழை மாந்தர் எத்தனை பேர்? செல்வம் என்பது செல்லுந் தன்மை வாய்ந்தது என்ற உண்மையை அறியாது, அதைக் கட்டி வைத்துக் காக்க முயலும் கயவர் எத்தனை பேர்?

> "பிறக்கும் பொழுது கொடு வந்த
> தில்லை பிறந்து மண்மேல்
> இறக்கும் பொழுது கொடு போவ
> தில்லை இடை நடுவில்
> குறிக்கும் இச் செல்வம் சிவன் தந்த
> தென்று கொடுக் கறியாது
> இறக்கும் குலாமருக்கு என்
> சொல்லுவேன் கச்சிஏகம்பனே"

செல்வச் செருக்குற்றவர்கள் தம் நிலையைக் குறித்துச் சிறிதும் சிந்திக்கின்றார் இல்லையே! பிறக்கும் பொழுது தங்கமுகத்தொடும், வயிரக் கையொடும் வெள்ளிக் காலொடும் பிறந்தவர் எவரும் இல்லையே! இறக்கும் பொழுது பொன்னையும் பொருளையும் தம்முடன் கொண்டு செல்வார் எவரையும் கண்டோமில்லையே! இத்தகைய செல்வத்தின் பயன்தான் என்ன? உலகியல் அறிந்த பெரியோரெல்லாம் இவ்வினாவிற்கு ஒரு முகமாக விடை பகர்ந்துள்ளார்களே! ஈதலே செல்வத்தின் பயன்; அற்றாரை ஆதரித்தல் செல்வம் பெற்றாரது கடமை. இதை அறிந்து வாழ்பவர் ஆன்றோர் ஆவர். கொடுக்க அறியாதவர் குலாமர்; குறிக்கோள் இல்லாத கசடர்; பயன் உணராத பதடிகள்.

## பரந்த பெருங் கடலே!

பசித்தோர் முகம் பார்த்து இரங்கும் தன்மை வாய்ந்த செல்வர் இல்லாத நாடு ஒரு நாடாகுமா? அது சுடுகாடன்றோ? ஏழையர்க்கு ஒன்றும் ஈயாது, ஏழடுக்கு மாடம் கட்டி. இறுமாந்திருக்கும் செல்வர் ஈனரே யாவர். இறைவனது கருத்தறி

யாத ஊனரே அவர். மெய்யறிவு பெற்ற மேலோர் எல்லாம் மெய்ப் பொருளாகிய இறைவனை 'ஏழை பங்காளன்' என்று கூறினரே யன்றிச் செல்வர் பங்காளன் என்று சிறப்பிக்க வில்லையே! அந்த ஏழையரைப் புறக்கணிப் பது ஆண்டவனைப் புறக்கணித்த தாகுமன்றோ? அழியும் தன்மை வாய்ந்த செல்வத்தை அற்றார்க் கும் அலர்தார்க்கும் கொடுத்து அழியாத அறமாக மாற்றிக் கொள்வதன்றோ அறிவுடைமை யாகும்?

## நற்றவர் வாழும் ஒற்றியூரே!

என்னை யாளும் இறைவன் கருணையால் பிறப்பென்னும் பேதைமை கடந்தேன்; சிறப் பென்னும் செம்பொருள் கண் டேன். காவிரிப்பூம் பட்டினத் தில் கடல் வாணிபத்தால் வந்த பொருளைக்கண்டு களித்திருந்த என்னைக் கரையேற்றத் திருவுளங் கொண்டான் ஒற்றியூருடைய கோமான் ஒரு சீட்டைக் காட்டி என்னை ஆட்கொண்டான். "காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே" என்னும் அருமைத் திருமொழியால் என்னுள்ளத்தை உருக்கினான். காதற்ற ஊசிகாட்டி என்னைக் கடைத் தேற்றினான். ஒற்றியூரே! உன் பெருமையை அவன் அருளால் அறிந்தேன்.


"வாவி எல்லாம் தீர்த்தம்,
மணல் எல்லாம் வெண்ணீறு
காவனங்கள் எல்லாம் கணநாதர் -
பூவுலகில்
ஈது சிவலோகம்
என்றென்றே மெய்த்தவத்தோர்
ஓதும் திரு ஒற்றியூர்"

என்று உன்னை என்றும் போற் றுவேன். என் உள்ளம் கவர்ந்த ஒற்றியே! வாழி! என் உடலம் தாங்கும் ஒற்றியே! வாழி! உல வாப் பெரும் பெயர் ஒற்றியே! வாழி என்று வாழ்த்திக்கொண்டு ஆழிக்கரையை விட்டகன்றார் இருவினைக் கட்டறுத்த பட்டி னத்தார்.


காளி மார்க் சோடா கலர்

திரேகாரோக்கிய முள்ளவை

விருதுநகர் : : திருநெல்வேலி.


[அ. இராசகோட்டியப்பன்.]

## அடைக்கலம் கொடுத்தல்

மதுரைப் பேரூரின் அழகு முற்றுங் கண்டு மீண்ட கோவலன், கவுந்தியடிகளிடம் தான் கண்டவற் றைக் கூறிக்கொண்டிருந்தான். காவிரிப் பூம்பட்டினத்திற்கருகி லுள்ள தலைச்செங்காட்டைச்சேர்ந்த மாடலன் என்னும் மறையோன்; பொதியமலையை வலம்வந்து, குமரித் துறையில் நீராடித் திரும்பும் வழியில் அங்கு வந்துசேர்ந்தான். கோவலன் அவனை வணங்கினான். வேதியன் அவனை வாழ்த்தி, "கோவல! மாதவிபெற்ற மகளுக்கு உன் குலதெய்வத்தின் பேரால், மணிமேகலை எனப் பெயரிட்டுக் கொண்டாடிய நாளில், நீ வழங்கிய கொடைக்குக் கணக்கு உண்டோ? உன் கொடையை நாடிவந்த ஒரு கிழவேதியனை மதயானைபற்றிக் கொள்ள நீ ஓய்யென ஓடிச்சென்று அக் கடக்களிற்றை அடக்கி அவ னைக் காப்பாற்றிப் பெரும் பொருள் நல்கினாய்.

மையிருங் குன்றின்
விஞ்சையன் ஏய்ப்பப்
பிடர்த்தலை யிருந்து
பெருஞ்சினம் பிறழாக்
கடக்களிறு அடக்கிய
கருணை மறவ

[மையிருங்குன்று-கரியபெரிய மலை. விஞ்சையன்-வித்தியாதரன்; பிறழா - நீங்கா; கடக்களிறு - மத யானை; மறவ-வீரனே.]

உண்மை அறியாமல் கீரிப் பிள்ளையைக் கொன்ற ஓர் பார்ப்ப னியின் பாவந் தொலையத் தானம் செய்து, அவளது துயரந்தீரக்காட்டு வழிச்சென்ற கணவனையும் அவளு டன் கூட்டிவைத்து, அரும்பொருள் அளித்த அறநெறிச் செல்வனன்றோ நீ! மேலும் மகனை யிழந்து வருந் திய ஒரு தாய்க்கு இரங்கி அவனை யும் அவன் சுற்றத்தையும்

பல்லாண்டு புரந்த
இல்லோர் செம்மல்!

[புரந்த-காப்பாற்றிய, இல்லோர்-வறியவர், செம்மல்-தலைவன்.]

பற்பல வாண்டு காப்பாற்றிய காவலனே! இப்பிறப்பில் நீ இயற் றியவை யெல்லாம் நல்வினையே ;

யாக, மாமணிக் கொழுந்துபோன்ற மனையாளுடன் இங்ஙனம் நீ வேற்று நாடடைந்து துயருறக் காரணம் அறிகிலேன்.

இம்மைச் செய்தன
யான்அறி நல்வினை
உம்மைப் பயன்கொல்?
ஒருதனி உழந்து இத்
திருத்தகு மாமணிக்
கொழுந்துடன் போந்தது.

[இம்மை-இப்பிறவி, நல்வினை-புண்ணியம்; உம்மை - முற்பிறவி; திருத்தகுமாமணி-முழுமாணிக்கம்] எனக் கூறித் துயருற்றான்.

பின்னர், கோவலன், “இன்று விடியும்முன் ஒரு கனாக்கண்டேன்; அதில் கண்ணகி இந்நகரிலே பெருந் துயருக்கு ஆளானாள்; யான் எருமைக் கடாவில் ஏறிக்கொண்டு அவளுடன் துறக்கத்திற்குப்போனேன்; மாதவி மணிமேகலையைத் துறவியாக்கினாள்” எனக் கூறி வருந்தினான். கவுந்தியடிகளும் மாடலனும், “கோவல! இவ் அறப்பள்ளி இல்லறத்தார் தங்குதற்குரியதன்று. இந் நகரில் வணிகர் பலர் உன் தந்தையை அறிதல் கூடும். இருட்டுமுன் அவருடைய உதவிபெற்று அகநகருட் சென்று வாழ்தி” எனச் சொல்லிக் கொண்டிருக்கையில், இயக்கி யம்மனுக்குப் பாற் பொங்கல் படைத்து அவ்வழியே திரும்பிய மாதரி என்னும் இடைச்சி, கவுந்தியடிகளைக் கண்டதும் வணங்கினாள்.

கவுந்தியடிகள், “இவ்இடைச்சி குற்றமற்றவள்; முதியவள்; கள்ளங் கபடு அற்றவள்; இவளிடம் கண்ணகியை இருத்துதல் நலம்” என்று எண்ணி, அவளை நோக்கி, “மாதரி! இக்கண்ணகியின் கணவனை இந்நகர் வாணிகர் அறிந்து ஆதரவு தரும் வரை இவள் உனக்கு அடைக்கலம். இவளைத் தாய் போலிருந்து காப்பாற்றுவது உன் கடன். இக் கண்ணகி கற்புக் கடவுளே ஆவள்.

மேலும் ஒன்று கேள்: முன்னொரு காலத்தில் எட்டிப் பட்டம் பெற்ற சாயலன் என்னும் வாணிகன், ஒரு முனிவனால் அடைக்கலமாகக் கொடுக்கப் பெற்ற குரங்கை அன்போடு வளர்த்ததனால், மனைவியுடன் வீட்டின்பம் பெற்றான். தவத்தோர் அடைக்கலம் தான் சிறிது ஆயினும், மிகப் பேரின்பம் தரும் என்பது உண்மை” என்று கூறினர். மாதரி, அடிகள் அருளியவண்ணமே கண்ணகியையும் கோவலனையும் அழைத்துக் கொண்டு, காவற்காடும் அகழியும் கடந்து, எந்திரவில், குரங்குப்பொறி, கல்லுமிழ்கவண், செம்பு உருக்குமிடா, தூண்டில்பொறி, முறுக்குச்சங்கிலி, ஆண்டலையடுப்பு, கழுக்கோல், அம்புக்கட்டு, ஊசிப் பொறி, சிச்சிலிப்பொறி, கனையம், குந்தம், விட்டேறு முதலிய பல வகை இயந்திரங்கள் நிரம்பிக்கொடி கட்டிய கோட்டை வாயிலைத் தாண்டித் தன் வீட்டை நோக்கிச் சென்றாள்.

# அயல் நாட்டுமை

நம் நாட்டிலுள்ள விலை வீக்கத்தைக் கட்டுப்படுத்த, வெளிநாட்டுச் சாமான் பலவற்றின் மீதிருந்த தடையை அரசினர் நீக்கிவிட்டது வரவேற்கத் தகுந்ததே. ஆனால் இது மை முதலான வளர்ச்சி யடைந்துள்ள சில நாட்டுக் கைத்தொழில்களை மிகவும் பாதிக்கிறது.

நாட்டுக்குப் போதுமான நல்ல நாட்டுமை தற்பொழுது கிடைக்கிறது. இந்த மை இன்னும் வளம்பெற சுதேசிச் சாமான்கள் மீதுள்ள வெறுப்பை நீக்கி, நாட்டுமையையே உபயோகிப்பதென ஒவ்வொருவரும் உறுதி கொள்ளவேண்டும்.

கூடுமானபடி குறைந்த அளவுக்கு பிறநாட்டு மையை அனுமதித்தும், இறக்குமதி வரியை உயர்த்தியும், மைத் தொழிலுக்கு வேண்டிய பிறநாட்டுச் சாமான்களின் மீது குறைந்த தீர்வை விதித்தும் சரக்குகளை நாட்டின் பல பாகங்களுக்கு அனுப்புவதற்கு குறைந்த கட்டணத்தில் ரயில் வசதி செய்து கொடுத்தும் நாட்டு மைத் தொழிலை அபிவிருத்தி செய்ய அரசினருக்கும் கடமையுண்டு.

இதுபற்றி மத்திய சர்க்காரும், மாகாண சர்க்காரும் தக்க குழுவினரை (Committee) நியமித்து உடனே ஆவன செய்யவேண்டியது மிக்க அவசியமும் அவசரமுமாகும்.

சென்னை. **ஆர். சாம்பசிவ ராவ்.**

# தமிழ்த் திருநாள்

இடம்: தருமபுரமடம், திருநெல்வேலிச் சந்திப்பு.

நெல்லை அருணகிரி இசைக்கழகத்தில் நிகழும் தைத்திங்கள் 9-நாள் சனிப்பெருக்கொடு துவங்கிய தமிழ்த் திருநாள் நிகழ்ச்சிகள், 13-ம் நாள் புதன் கிழமையுடன் சிறப்புற நிறைவெய்தின. திங்களன்று நடந்த சொற்போர்கள் மிக்க விறுவிறுப்புடன் நடந்தன. ஐந்து நாட்களிலும் நாள்தோறும் 5000 மக்கட்குமேல் விழாவில் கலந்து மகிழ்ந்தனர். பொதுவாகத் தமிழ் நாட்டினர்க்கும் சிறப்பாக நெல்லை மாவட்டத்தார்க்கும் இத்திருநாள் ஒரு புத்துணர்ச்சியை ஊட்டியிருக்கிறது. தமிழர் நலங்கருதிப் பெருந் தொண்டுபுரியும் இக்கழகம் நீடு வாழ்க!

# தமிழ்த் திருவிழா

[சி. பாதமுத்து, விழா அமைப்பாளர்.]

சர்வதாரி தை, 3ம் நாள் 16-1-49 ஞாயிற்றுக் கிழமை இரவு 6-30 மணிக்கு விருதுநகர் தமிழ் மன்றத்தில், விருதைத் தமிழ்க் கழகத்தின் ஆதரவில் தமிழ்த் திருவிழா நடைபெற்றது. மதுரை மாவட்ட நாட்டாண்மைக் கழகக் கல்வியதிகாரி திரு. டி. யஸ். கலியாணசுந்தரம் பி. ஏ. யல். டி. அவர்கள் தலைமை தாங்கினர். நிகழ்ச்சியரங்கு மின் விளக்குகளால் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. நகராட்சிப் பாடசாலைகளின் ஆசிரியரும் மாணவ மாணவிகளும் நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்டு ஆடல் பாடல் சொற்பெருக்கு முதலிய கதம்பக் காட்சி நடத்தினர். 20 மாணவ மாணவியர்க்கும் பத்து ஆசிரியருக்கும் பரிசுகள் வழங்கப் பெற்றன.




# தமிழில் எரிமலைகள்

முந்திய இதழின் தொடர்ச்சி

[ தா. நரசிம்மன். ]

"மன்பதை அலர்தூற்ற
மன்னவன் தவறிழைப்ப
அன்பனை இழந்தேன் யான்
அவலங்கொண் டழிவலோ"

என்று முறை தவறிய மன்னனைப் பழித்துத் தன்முன் நிற்கும் 'லைகம் மைகூர் துறைமூழ்கும் கலவைய மகளிர்' தோற்றத்தை வெறுத்துக் கூறுகின்றாள். 'காய்கதிர்ச் செல்வனே கள்வனோ என் கணவன்?' என்று அவளுக்கு, 'கள்வனோ அல்லன்' என்றது ஒரு குரல்.

சிலம்பொன்று கையேந்திக் கொலைக்களம் நோக்கி விரைவாகச் செல்கிறாள் கண்ணகி. வழியில், முறையில் அரசன் தன் ஊர்வாழும் பத்தினிப் பெண்டிர்க்கு, "என் கணவனைக் கண்டு நல்லுரை கேட்பேன்" என்று சூள் கூறிச் செல்கிறாள். மதுரையார் எல்லோரும் அவள் துயரமும், சினமும் கண்டு மயங்கி, "வளையாத செங்கோல் வளைந்த திதுவென்கொல்" எனப் பல சொல்லி இனைந்தேங்கினர். இங்கு திரௌபதியை, தம்பி துச்சாதனன் இழுத்துச் சென்றபோது ஊரார் பார்த்திருக்க ஊமைத் தன்மைக் கும், கண்ணகி நீதி கேட்டுத் தெரு வழியே செல்லுங்கால் ஊரார் நெஞ்சம் துடிப்பதையும் இருபுலவர்களும் சித்திரித்திருக்கும் பண்பு ஊன்றிக் கவனிக்கத்தக்கதாம். தமிழ் நாட்டின் தன் மானத்தை எடுத்துக் காட்டுகிறார் இளங்கோ!

கண்ணகி, களமுற்றுக் கண்டாள், பொடியாடிக் கிடக்கும் அவன் நறுமேனி. உள்ளம் கொந்தளித்துக் குமுறுகிறது, எரிகக்கும் மலைபோன்று.

"தெய்வமும் உண்டுகொல்
தெய்வமும் உண்டுகொல்
வைவாளில் தப்பிய
மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல்
தெய்வமும உண்டுகொல்"

என்று கதறியழுகிறாள். இளங்கோவின் கருத்திலே இயற்கையுணர்ச்சி துடித்தெழுகிறது. அவள், கணவனைத் தழுவ, அவன் உயிர் பெற்று நல்லுரை தந்து மறைகிறான். அப்போதும் கண்ணகியின் சினம் தணியவில்லை. 'கணவனைக்கொன்ற தீவேந்தன் முறையைக் கண்டிக்காமல் யான் கணவனைக் கூடேன்' என்கிறாள். ஆம். கண்ணகி, பாரதி

யின் திரௌபதி இவர்களால், முற்காலத்தில் பெண்டிரே அரசு முறைமை பிறழாமல் காத்துவந்தனர் என்பது நன்குதெளியும். மேலும் பெண்களே சமூகத்தில் புரட்சி செய்தனர் என்பதும் காணக்கிடக்கின்றது.

கோப்பெருந்தேவி தன் தீக்கனாத் திறமுரைப்ப அரிமானேந்திய அமளிமிசை இருந்தனன் தென்னவர்கோன். கண்ணகி கோயில் வாயிலைக்குறுகி,

"அறிவறை போகிய
பொறியறு நெஞ்சத்து
இறைமுதற் பிழைத்தோன்
வாயிலோயே!
இணையரிச் சிலம்பொன்
றேந்திய கையள்
கணவனை இழந்தாள்
கடையகத் தாளென்று
அறிவிப் பாயே

அறிவிப் பாயே" என்கிறாள். அடடா! என்ன வேகந் தோன்றுகிறது கவியில்! தேர்ப்பாகன் வந்தபோது திரௌபதி துயரோடு முறைமை கேட்பதும், கண்ணகி வாயிலோனை நோக்கிப் படபடத்து மாற்றம் உரைப்பதும் அவர்கள் மனநிலையைக் காட்டுவனவாம்!

வாயிலோன் கண்ணகியின் தோற்றம்கண்டு கலங்கி அரசனிடம் மொழிகிறான். வழக்குரைகாதை உணர்ச்சி மிகுந்த இடம். உணர்ச்சிகளைச் சொல்லிலே புகுத்திச் சொல்வதில் தனிச் சிறப்புடையவர் இளங்கோ என்பதில் ஐயமில்லை. கண்ணகியைக் கண்ட அரசன் அமைதியாக, அவள் துயர் கண்டு துன்புற்று, "யாரையோ நீ மடக் கொடியோய்?" என்கிறான். நயந்தோன்றுகிறது அரசனின் குரலில்! அவளோ துடிப்புடன், "தேரா மன்னா செப்புவ துடையேன்" என்கிறாள். மேலும்,

"கொலைக்களப் பட்ட
கோவலன் மனைவி
கண்ணகி என்ப
தென் பெயரே" என்கிறாள்.

அரசன் அப்போதும் குற்றம் தேராதானாய், "கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று" என்கிறான் மிக அமைதியாக! அவன் அமைதியாச் சொல்லச் சொல்ல, கண்ணகியின் சினம் வளர்ந்து கொண்டே இருக்கிறது. அதை இயற்கை ததும்பச் சித்திரிக்கிறார் கவிஞர். "நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!" என்று சீறித் தன் காற்சிலம்பை உடைத்துக் காட்டுகிறாள் வெறிகொண்டு. சிலம்புமணி மன்னன் வாய்முதல் தெறித்தது. முறையறிந்த தமிழ் மன்னன், "யானோ அரசன், யானே கள்வன்" என வீழ்கிறான். அது கண்டும் அவள் தணிந்திலள். அரசன் முறை கெடப் பார்த்த மதுரை மூதுரை



யும் முடித்திடக் கருதுகிறாள்! அந்தக் காலத்தில் அரசராண்ட போதிருந்தது ஜனநாயகம்! இன்று மக்களின் பிரதிநிதிகள் ஆளும் காலத்தும் ஜனநாயகமில்லை! தமிழ் நாட்டின் நாகரீகம் உருக்குலைந்து விட்டது இழிஞர்களால்! கண்ணகி ஊர்வலம் வந்து,

"பட்டாங்கி யானுமோர்
பத்தினியே ஆமாகில்
ஒட்டேன் அரசோ
டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறுவாய்"

என வஞ்சினங் கூறுகிறாள். தீ பாவுகிறது. மதுரை அழற்படுகிறது. இதுதான் இளங்கோவின் எரிமலை!

அறங்கெட்ட சபையுற்ற திரௌபதி, கணவரை விளித்து, "விதியோ, கணவரோ? என்னை வேண்டி மணஞ்செய்து இந் நாள் பரிசழிதல் சாண்பீரோ?" என்கிறாள் பணிவான குரலில். ஆனால் தன்னை மணந்த கணவரையுந்தாம் நீதி கேட்டாள்! புரட்சி செய்தாள் அந்நாளில்! யார் தவறினும் கடிதல் அறமேயாம் என்பது பாரதியார் கொள்கை. பின்னர், அவள் புலம்பி ஆவேசத்தோடு; "நின்னை யெவரும் 'நிறுத்தடா' என்பதிலர்" என்கிறாள் துரியனை நோக்கி! அவள் குரல், அவர்கள் ஒரு குலத்துக்கொரு நீதி வழங்கும் குணமுடையார் என்பதைத் தெளியக் காட்டுகின்றது!

வீட்டுமாச்சார்யன் அவளுக்கு 'வழவழ'ச் சமாதானம் சொல்கிறான். பாரதியார் பண்டைமரபையெல்லாம் அவன் வாயிலே குத்திக் காட்டுகிறார்!

"ஒருவன்தன் தாரத்தை
விற்றிடலாம்! தானமென
வேற்றுவர்க்குத் தந்திடலாம்!
முற்றும் விலங்கு
முறைமையன்றி வேறில்லை"

என்று ஆரிய வழக்கத்தை அம்பலமாக்குகிறார் பாரதியார்! வீட்டுமன் சொற்கேட்ட பாஞ்சாலி மனமிழந்து, "பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்" என்று அம்புபட்ட மான்போல் அழுது துடிதுடித்தாள்! இவ்விடம் கண்ணகி அரசவைமுன் நீதிகேட்டதோடு ஒப்பிட்டு நோக்கத் தக்கதாம்! தமிழ் மக்கள் பெண்மைக் குயர்வுதந்து நீதி வழங்க முன்வந்து உயிர் தந்தனர். ஆயின் வடவர் அவ்வாறு செய்திலர். விகர்ணன்,

"தன்னை இவன் இழந்தடிமை
யான பின்னர்த் தாரமேது?
வீடேது? தாதனான
பின்னையுமோர் உடைமை
யுண்டோ? என்று நம்மைப்
பெண்ணரசு கேட்கிறார்
பெண்மை வாயால்" என்று

பெண்மைக்காக, உடன் பிறந்தார்களுடன் போராடினான். ஆனால் வீழ்த்தப்பட்டான்!

துச்சாதனன் எழுந்தான். அன்னை துகிலினை மன்றிடை யுரித்லுற்றான்! சீச்சீ! அரசசபை! அங்கே நீதி கெட்டால் மக்கள் பார்த்திருப்பதா? உணர்ச்சிகெட்ட மக்கள்! ஒருபெண், நீதி வேண்டி என்ன செய்யமுடியும்? அவளோ உலகை மறந்து ஒருமையுற்றான்! எப்படியோ தொழும்பத் துச்சாதனன் வீழ்ந்துவிட்டான். அரவோன் தலைகவிழ்ந்தான்!

அதுவரை சினத்தை அடக்கியிருந்த வீமன் எழுந்தான். "நாய் மகனும் துரியோதனன் தன்னையும், தம்பி சூரத் துச்சாதனன் தன்னையும் யுத்தரங்கத்தின் கண்ணே பழி தீர்ப்பேன்" என்றான். 'தனுவுண்டு காண்டீபம் அதன் பேர்' என்ற பார்த்தன் "பாதகக் கர்ணனைப் போரில் முடிப்பேன்" என்றான்.


கதையை, பாரதியார் தன் புதுமைப் பெண் பாஞ்சாலியின் சபதத்தோடு முடிப்பதே தனியழகுடையது.

"பாவிதுச் சாதனன்
செந்நீர்-அந்தப்
பாழ்த்துரி யோதனன்
ஆக்கை யிரத்தம்
மேவி யிரண்டுங்
கலந்து - குழல்
மீதினிற் பூசி நறுநெய்
குளித்தே சீவிக்
குழல்முடிப் பேன்யான்"

என வஞ்சினங்கூறுகிறாள். பின்னர், போர் தொடங்குகிறது! கண்ணகியின் வஞ்சினத்துக்கும், இதற்கும் பெருத்த வேற்றுமை யிருப்பது மரபின் காரணத்தாலேயே ஆகும்!

இரண்டு பெண்களின் சொல்லிலே இரு எரிமலைகள் தோன்றின!

---




# 'பைத்தியமா?.....'

[எ. கே. கோதை.]

—(௨)—

'எனக்குப் பைத்தியமா? இல்லை......இல்லவே இல்லை...... நிச்சயமாக இல்லை. பின்பு என் என்னை இங்கு அடைத்திருக்கிறார்கள். ஒரு சமயம் அவர்களுத்தான் பைத்தியமோ? இருக்கலாம்...... அப்படித்தான் இருக்கலாம்......... இல்லாவிடில் இந்த இரும்புக்கம்பிகளுக்குள் என்னை என் அடைத்திருக்கிறார்கள்? ஐயோ! முனியாயி! முனியாயி! உன்னைப் பார்க்க முடியாமல் அடைத்துவிட்டார்களே!'...... என்று கத்திக் கொண்டே பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் முதல் அறையில் இருக்கும் வீரப்பன் இரும்புக் கதவுகளில் போய் முட்டிக்கொண்டான்.

* * * *

முன்பு நடந்தவைகள் எல்லாம் அவன் கண் எதிரில் இப்பொழுது தான் நடப்பதுபோல் தோன்றிற்று. முனியாயி அவனது அருமையான மனைவிதான். அவளை 'ஆயி' என்று செல்வமாக வீரப்பன் அழைப்பது வழக்கம். இவர்கள் மலரும் மணமும் போல் வாழும்போது தான் 'ஆயி'க்கு திடீர் என்று கொடிய ஜுரம் கண்டது. வீரப்பன், பண்ணையில் வேலையாட்களில் ஒருவனாக வயலில் கூலி வேலை செய்து வந்தான். வேலைக்குச் சரியான கூலிகிடையாது. சில நாள் கொடுப்பார்கள்; கூலியற்ற நாட்களில் மாடுபோல் உழைத்துவிட்டு, வீட்டில்வந்து, வயிற்றிற்கு ஒன்றும் இன்றி பாயில் சாய்வது தான் அவன் வழக்கம். முனியாயி தேறுதல் கூறி, வரவுக்குச் சரியாக செலவு செய்வதும் இல்லை யென்றால் சும்மா இருப்பதுமாக வீரப்பனோடு ஒத்து வாழ்க்கை நடத்தி வந்தாள்.

அழகும், குணமும் பொருந்திய முனியாயிக்கு ஜுரம் வந்துவிட்டது என்றதும் வீரப்பனுக்கு இருப்புகொள்ளவில்லை. இங்கும் அங்கும் உலாத்துவதும், மருந்து வாங்குவதற்குப் பணத்திற்கு என்ன செய்வது? என்று யோசிப்பதுவும், அவளைத் தொட்டுப் பார்ப்பதுமாக இருந்தான். ஜுரம் அனலைப்போல் அடித்தது. வீரப்பனின் மனம் அனலைப்போல் கொதித்தது.

நேராகப் பண்ணையார் வீட்டுக்கு ஓடினான். "ஐயா! இன்னைக்குக் கூலி வேணும்."

" தடி ரஸ்கல்......நேத்து கொடுத்தேனடா"

" அது நேத்து வேலை செய்ததற்கு, எஜமான் "

"போடா வெளியே. நான் சொல்றேன்......நீ மறுத்துப் பேசுகிறாயா"

" எஜமான், முனியாயிக்குச் சுரம்"

"டேய்!... மரியாதையாகப் போய்விடு" என்று முதலாளி கர்ஜித்தார்.

"எஜமான்... ரொம்ப ஜுரம் அடிக்குது."

" நேத்து கொடுத்தேனே... அதை என்னடா பண்ணினே "

" அரிசி வாங்கிவிட்டேன் "

" மரியாதையாகப் போய் விடு...எழும்பி வந்தேன்னா...மண்டை உடைந்துவிடும்...இன்னிக்குத் தரமுடியாது, நேற்று கொடுத்தாய் விட்டது" என்று எஜமானர் உள்ளிருந்தபடியே கத்தினார்.

வீரப்பனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. செய்த வேலைக்குக் கூலி தரமாட்டேன் என்கிறாரே...நேற்று கொடுத்தாய் விட்டதாம். இவர் நேற்று சாப்பிட்டாரே இன்று ஏன் சாப்பிடுகிறார்? என்று பலவாறாக அவன் மனம் எண்ணமிட்டது.

வீட்டிற்குச் சென்றான். மனைவிக்கு ஜுரம் அதிகமாகி யிருந்தது முனியாயி நெருப்பைப் போல் படுத்திருந்தாள். நல்ல காரியத்திற்காக, கெட்ட காரியம் செய்தால் ஒரு பாவமும் இல்லை என்று எண்ணிற்று அவன் மனம்.

நேரே பண்ணையார் வீட்டிற்குச் சென்றான். தோட்டத்தில் காய்ந்து கொண்டிருந்தது பட்டுப் புடவை. அதைச் சுருட்டிக் கொண்டு கிளம்பினான். அப்பொழுது தான் சாப்பிட்டுவிட்டுக் காற்று வாங்குதவற்காக வெளியே வந்த எஜமானர் பார்த்து விட்டார்.

"எய்!......வீரப்பா"

வீரப்பனுக்குத் தடுமாறியது, என்ன செய்வது என்று தெரியவில்லை. அப்படியே நின்று விட்டான்.

' எய் கழுதே! என்னத்தடா திருடிக்கொண்டு போகிறாய்"

வீரப்பன் பதில் பேசவில்லை.

எஜமானர் புடவையைப் பார்த்துவிட்டார். "அட தரித்திரமே......திருடவேறே ஆரம்பித்து விட்டாயா" என்று சொல்லித் தன் கைத் தடியினால் அவன் தலையில் ஒன்று போட்டு விட்டுப் புடவையைப் பிடுங்கிக் கொண்டார்.



காயம் படவில்லை...இரத்தம் வரவில்லை...... வீங்கிவிட்டது...... வலித்தது. அதனோடு வீரப்பனின் கோபமும் கிளம்பிவிட்டது.

"எஜமானன் என்றால் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று எண்ணமோ! உங்களைப் போன்ற நன்றிகெட்ட நாய்களுக்கு உழைப்பதைவிட........"

எஜமானர், தான் அடித்ததை மறைப்பதற்காகத், தன் மற்றொரு வேலைக்காரனை அழைத்து, டாக்டரை அழைத்துவரக் கூறி........ வீரப்பனுக்குப் பைத்தியம் என்று அவனை ஆஸ்பத்திரியில் விடும்படி கூறிவிட்டார்.

வீரப்பனை, முனியாயியை ஒரு முறை பார்ப்பதற்குக் கூட விடவில்லை. காரில் ஏற்றி ஆஸ்பத்திரியில் அடைத்து விட்டார்கள்.

மூன்று நாட்கள் கழித்து அவனுக்குப் பைத்தியம் இல்லை என்று தீர்மானித்து விட்டு விட்டார்கள். வீரப்பன் நேரே வீட்டிற்கு ஓடி வந்தான்.

வீட்டில் ஒருவரும் இல்லை, 'வெறிச்' என்று இருந்தது. பக்கத்து வீட்டில் இருந்தோர் முனியாயியைப் புதைத்த இடத்தைக் கூறினர் வீரப்பன் சுடுகாட்டை நோக்கிப் பைத்தியக்காரன் போல் ஓடினான். முனியாயியைப் புதைத்த இடத்தின்மீது சுவாமியைத் தொழுது கொண்டே விழுந்தான்.

எழும்பவே இல்லை. எஜமானர் நன்றாகப் பலவித உண்டிகளை அருந்திவிட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தவிதம் ஏப்பம் விட்டுக் கொண்டிருந்தார்..

---


(ESTD) அருப்புக்கோட்டை (1932)
ஆறுமுகம் களிம்பு
REGD (103710)
ரணங்களுக்கு சிறந்தது
டப்பா. அணா 2.
R.R.M. ஆறுமுக பாண்டியன்
அருப்புக்கோட்டை.

# இருள்

"ரவி"

நன்செய் நிலத்தினில் நித்தமும்
நெற்றிநீர் சிந்தித் தன்னுடல்
வன்மையால் உழைத்து வாழும்
உழவரின் பொருளை யெல்லாம்
புன்மையால் கவர்ந்து கொண்ட
புலையரின் நெஞ்சம் போன்று
கன்னங் கரேலென எங்கும்
கவிழ்ந்ததோ இருளிவ்வுலகை!

மலைகளைப் பிளந்து என்றும்
நிலையாய் இருக்கும் சிற்பச்
சிலைகள் பற்பல வடித்துக்
கலைவல் லுனராய் வாழ்ந்த
விலையிலாக் காலம் செந்தமிழ்
வீட்டி னின்றுபோயிற் றென்று
அலைஆழ் கடல்போலு மிருள்
அவனியைச் சூழ்வதைக்
[காணீர்!

அழுக்குப் படிந்த உடையுடன்
'அம்மா தாயே' யென்று
இழுக்கம் பிச்சை தன்னை
எடுத்து வாழும் மனிதரின்
புழுங்கிய நெஞ்சம் போன்று
புவியி லெங்கும் சூழ்ந்த
வழக்கிடும் இருள்தன் வடிவின்
விரிவின் காட்சி தானோ?

விண்ணில் இரவி போன்று
வியனுறு கலைகளைச் சேர்த்து
மண்ணில் சீர்த்தியாய் வாழ்ந்த
மறமிகும் தமிழ ரின்று
புன்தரும் வடமொழி தன்னால்
புன்மை யடைந்த நிலையினை
எண்ணும் பொழுதெழும் துயிலின்
எழுந்ததோ இருளிவ் அவனி
[யில்!

# அவியல்

[மீ. வனசாட்சி.]

அந்தி மயங்கும் வேளை சாலைகளின் வழியே ஆண்களும் பெண்களும் உலாவுவதற்காகச் சென்றுகொண்டிருந்தனர். அவ்வழியில் ஒரு ஏழைச்சிறுமி இரங்கத்தக்க நிலைமையில் இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தாள். கண்கள் அழுதழுது சிவப்பேறியிருந்தன. பகலெல்லாம் அலைந்து இரைதேடிய பறவைகளெல்லாம் தந்தம் குஞ்சுகளைக்காணும் ஆவலுடன் கத்திக்கொண்டு பறந்தன. அவை அச்சிறுமியின் நிலைக்காக வருந்துவன போன்றிருந்தன. கதிரவனும் இதைக் காணப்பெறாது கண் மறைந்தான். அப்பொழுதும், தனக்கிருந்த ஒரே பாட்டியையும் இழந்து அநாதியாய்த் தவிக்கும் அச்சிறுமியை ஏனென்று கேட்பாரில்லை. இலேசாக இருட்டவும் ஆரம்பித்தது. அச்சமயம் அப்பக்கமாகக் காரில் வந்த செல்வந்தரும் அவர் மனைவியும் இருட்டும் வேளையில் இங்கு தனியாய் நிற்கும் இச்சிறுமி யாரெனத் தெரியும் ஆவலோடு காரை நிறுத்தினர். கொஞ்ச தூரத்தில் நின்றிருந்த அச்சிறுமியைச் செல்வந்தர் அழைத்து அன்போடு விசாரித்தார். அவளும் தன்னிலையைக் கூறினாள். அவர் மனைவியும் இவ்வளவு அழகிய சிறுமி இவ்வேழைக் குடும்பத்தில் சேற்றில் செந்தாமரையைப்போன்று பிறந்திருக்கிறாளேயென வியந்து இரக்கமுற்று அவளைத் தங்கள் காரில் ஏற்றிக்கொண்டு தங்கள் மாளிகைக்குச் சென்றனர். அச்சிறுமியும் அன்போடு பேசியமையால் அவர்களோடு மகிழ்வுடன் சென்றாள்.

அச்செல்வந்தர் மாளிகையிலுள்ள வேலையாட்கள் அங்குமிங்கும் ஏதோ வேலை பார்த்துக் கொண்டிருந்தவர்கள் இப்புதிய சிறுமியைக் கண்டவுடன் வேலையைவிட்டு யாரெனத் தெரியும் ஆவலோடு நோக்கினர். அவரும் அவர்களின் கருத்தை யறிந்தவர் போல் எல்லாவற்றையும் தெரியப்படுத்தினார். வெளியிற் சென்றிருந்த அவரது ஒரே அருமைப் புதல்வனாகிய மோகனும் வந்து சேர்ந்தான். அவன் அச்சிறுமியைப் பார்த்தவுடன் தனக்கு ஒரு

தோழி வந்திருக்கிறாளென நினைத்து மிகக்களிப்போடு தன் தாயிடம் விசாரித்தான். தாயும், தங்கை தான் - உன்னோடு சேர்ந்து விளையாடுவாளென அறிமுகப்படுத்தினாள். பின்னர் ஒருவேலைக்காரியிடம் அச் சிறுமியைக் குளிக்க வைக்கும்படி சொல்லி, அவளுக்கு வேண்டிய உடைகளையணிவித்தாள். நாட்கள் சில சென்றன. அவள் ஏழை வீட்டுப் பெண்ணென்பதே மறைந்து விட்டது. மோகனோடு சிறுமி சந்திராவும் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்தாள். நாளாக ஆக அவளின் அழகும் குணமும் வளர்ந்து, எல்லோரும் அவளிடம் ஒருவிதப் பற்றுண்டாகும்படி செய்தன. மோகனும் சந்திராவும் உறங்கும் நேரம் தவிர மற்றைய நேரமெல்லாம் ஒன்றாகவே சேர்ந்திருப்பர். அறியாதவர்கள் சிலர் இரட்டைக் குழந்தைகளென எண்ணிக்கொண்டிருந்தனர். சந்திராவும் பள்ளிப்படிப்பை நிறுத்தி வீட்டில் தங்கினாள். யாண்டும் பதினெட்டு நிறைவுற்றது. இப்பொழுதெல்லாம் மோகனோடு அதிகம்பேசுவதில்லை. கண்டாலும் மறைந்து சென்றுவிடுவாள். மோகனுக்கும் அவளை நாளைக்கொருமுறை காண்பது கூட அபூர்வமாகிவிட்டது.

இந்நிலையில் சந்திராவுக்குப் பொழுது போவதே கஷ்டமாய்த் தோன்றியது. ஏனெனில் பள்ளிக்கும் செல்வதில்லை. முன்போல் மோகனோடு ஓடியாடி விளையாடிப் பேசவும் முடிவதில்லை. அவளது கவனம் சமையல்கற்றுக் கொள்வதில் சென்றது. இவ்வாறே ஓராண்டு சென்றது. வீட்டில் சமையல் பாகமெல்லாம் சந்திராவின் மேற்பார்வையிலேயே நடந்தது. காரணம் அவள் செய்யும் பக்குவங்கள் யாராலும் செய்யமுடியாத ஒருவிதத் தனிச்சுவையுடன் இருந்தது. அதிலும் சிறப்பாக அவியல் இன்சுவையுடன் சமைப்பாள். வீட்டிலே ஏதேனும் காரணமாய் அவள் கவனிக்காவிடில் அன்று ஒருவரும் நன்றாய்ச் சாப்பிடமாட்டார்கள். அவ்வளவு சமையலில் தேர்ச்சி பெற்றிருந்தாள்.

வளர்ப்புத் தாய் தந்தை முதல் வேலைக்காரர்கள் வரை அன்போடு நடத்தப்படும் சந்திராவுக்கு மனநிறைவோடு மாத்திரம் இருக்கமுடியவில்லை. காரணம் அவள் இதயம், முதல்முதல் மோகனைக் கண்ட அன்றே அவனிடம் சென்று ஒன்றிவிட்டது. இதை வெளியிட்டால் திக்கற்றிருந்த தன்னை இந்நிலைக்குக்



கொண்டுவந்தவர்கள் என்ன நினைப்பார்களோவெனும் அச்சத்தால் ஒன்றும் தோன்றாது மனம் புழுங்கினாள். மோகனிடம் தன் எண்ணத்தை மனம் விட்டுச் சொல்வதற்கு ஒருபக்கம் வெட்கமும் இன்னொருபக்கம் தான் அநாதையென்னும் காரணத்தால் மறுத்துவிடுவாரோவென்னும் ஐயமும்கொண்டு வெளியிடாது தவித்துக்கொண்டிருந்தாள். இல்லை, இப்படியேகாலமெல்லாம் அவர்கள் வீட்டிலேயே மோகனுடன் இருக்கலாமென்றாலும் முடியாத காரியம். ஏனெனில் அவளின் வளர்ப்புத் தந்தை மனமகன் தேடிக்கொண்டிருந்தார்.

ஒரு நாட்காலை அம்மாளிகையில் ஓரே குழப்பமாயிருந்தது. வேலையாட்கள் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தனர். காரணம், திடீரென்று சந்திராவைக் காணவில்லையென்பதே. எங்கெங்கு தேடியும் சந்திராவைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. மோகனுக்கோ அவள் வீட்டிலிருக்கும் வரை யாதொன்றும் சிந்தியாதிருந்தவன் இப்பொழுது அவளில்லாமல் ஒருகணம் கடப்பதும் பெரிய துன்பமாகத் தோன்றியது. மறைந்திருந்த எண்ணங்களெல்லாம் வெளிக் கிளம்பின. தானும் அவளும் கூடி விளையாடியதும் பள்ளிக்குச் சென்றதும், இன்னும் சில சந்தர்ப்பங்களும் தோன்றித் தோன்றி அவனை வருத்தியது. அவள் திடீரென இப்படி மறைந்து போவாளெனக் கனவிலும் கருதினானில்லை. மற்றவர்களும் அவள் மறைந்ததற்கு காரணம் தெரியாது திகைத்தனர். யாண்டும் ஒன்றாகியது. சந்திராவைப்பற்றி யாதொரு செய்தியும் தெரியவில்லை. மோகனோ நாளுக்குநாள் அவளின் பிரிவைத் தாங்கமுடியாது மெலிந்துகொண்டே போனான்..

தன் ஒரே அருமைப் புதல்வனின் நிலைமை உன்னித் தாய் தந்தையர் மிகவருத்தமுற்றனர். தன் மகனுக்கு ஒரு நல்ல பெண்ணைப்பார்த்து மணம் செய்வித்தால் ஒருவேளை மகிழ்ச்சியோடிருப்பானென நினைத்துப் பெண் பார்க்கத் தொடங்கினர். பல செல்வந்தர்களும் தங்கள் தங்கள் பெண்களின் படமும் சாதகமும் அனுப்பினார்கள். மோகனோ ஓரேயடியாய்த் தனக்கு இப்பொழுது மணம் வேண்டாமென மறுத்துவிட்டான். அவன் பெற்றோர்களுக்கு என்னசெய்வதென்றே புரியாமல் திகைத்துக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் ஓர் திடீரென்று ஒரு எண்ணம் தோன்றியது. தன் மகனையும் அழைத்துக்கொண்டு சுற்றுப் பிரயாணம் செய்ய ஆரம்பித்தனர். பல ஊர்களும் சுற்றிப் பார்த்துவிட்டுக் கடைசியாக டெல்லியிலுள்ள தன் நண்பரின் மாளிகைக்குச் செல்ல எண்ணிப் போய்ச் சேர்ந்தனர். பல்லாண்டுகளாகக் காணாத நண்பரை எதிர்பாராது கண்டமையால் மகிழ்ச்சி பொங்க அளவளாவியிருந்தனர். அன்று சிறப்பான விருந்துக்கு ஏற்பாடு செய்தனர். சாப்பிடும் நேரம் வந்தமையால் எல்லோரும் சாப்பாட்டிற்கு உட்கார்ந்தனர். பலவகையான தின்பண்டங்கள் காய்கறிகளெல்லாம் பரிமாறப்பட்டன. விருந்தினர் ஒவ்வொன்றாகச் சுவைத்துச் சாப்பிட்டனர். சாப்பிடும்பொழுதே ஒருவர் முகத்தை ஒருவர் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே சாப்பிட்டனர். காரணம் தங்கள் வீட்டிலிருந்த சந்திராவின் சமையலின் மாதிரியே சுவை அமைந்திருந்தது. அவள் தனிப்பட்ட முறையிற் செய்யும் அவியலும் இருந்தது. கடைசியாக மோகனின் தந்தை தன் நண்பரை நோக்கி இது யார் சமையலென விசாரித்தார்.

இரண்டு யாண்டுகளுக்கு முன்னர் ஓர் அழகிய பெண் தனக் குறவு யாருமில்லையென்றும் தனக்கு ஏதேனும் வேலை கொடுக்கவேண்டுமென்றும் என் மனைவியிடம் கேட்டாள். ஆனால் அப்பெண் ஒரு நல்ல குடும்பத்துப் பெண்போல் தோன்றினாள். ஏதோ காரணத்தால் இவ்வாறு இருக்கலாமென ஐயங்கொண்டு அவளை இங்கேயே என் புதல்வியுடனிருக்கும்படி வைத்திருக்கிறேன். சிறப்பு நாட்களில் அப்பெண்ணின் மேற்பார்வையிலேயேதான் சமையல் செய்யச்சொல்வது வழக்கம். ஏனெனில் அவள் செய்யும் பாகங்களில் நல்ல மணமும் சுவையும் அமைகின்றதெனச் சொல்லி முடித்தார். இவ்வாறு சொல்லி முடித்தவுடன் ஒருவேளை சந்திராவாகத் தானிருக்குமோவென ஐயங்கொண்டு அவளைப் பார்க்கவேண்டுமெனச் சொல்லினார்கள். அவரும் "நீலா நீலா"வெனக் கூப்பிட்டார். இப்பெயரைக் கேட்டவுடன் எல்லோரும் அவள் வரும் திக்கையே மிக ஆவலுடன் நோக்கினர். சின்னேரத்திற்கெல்லாம் அழகின் உருவமே அசைந்து வருவது போன்று நாணத்துடன் ஒரு பெண் வந்து நின்றாள். எல்லோரும் அவளைப் பார்த்தவுடன்



களிப்பும் வியப்பும் பொங்கிக் கண்ணை அகல விழித்து நோக்கினர். அவளது வளர்ப்புத் தாய் ஆ சந்திரா இங்கெப்படி வந்து சேர்ந்தாயென ஓடிச்சென்று அணைத்துக்கொண்டு கேள்விமேல் கேள்வி கேட்க ஆரம்பித்தாள். அப்பொழுதுதான் சந்திரா தன்னை இவ்வாறு கேட்பது யாரெனத் தெரியும் பொருட்டு ஏறெடுத்துப் பார்த்தாள்.

அப்படியே திக்பிரமைகொண்டு என்ன பேசுவதென்றே தோன்றாது நின்றாள். மோகனோ தன்னையுமறியாது 'ஆ சந்திரா'வென வாய்விட்டுக் கூறினான். திரும்பினாள். "கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில" என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கொப்ப கண்கள் பேசிக்கொண்டன. பின் தந்தையிடம் சென்று வணக்கம் செய்தாள். இவையெல்லாம் நண்பர் குடும்பத்திற்கு ஆச்சரியம் தாங்கமுடியாமல் மௌனமாய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். சின்னேரம் கழித்தவுடன் அவர்களே எல்லாவற்றையும் பையப்பைய சொல்ல ஆரம்பித்து நடந்தவைகளை விரிவாகக் கூறிமுடித்தார். சந்திராவை எவ்வளவுதூரம் கேட்டும் தான் சொல்லாமல் வந்ததின் காரணத்தை வெளியிட மறுத்துவிட்டாள். அதற்குமேல் அவர்களும் வற்புறுத்திக்கேட்கவில்லை. பத்து நாட்கள் சென்றன. சந்திராவைக் கண்டதுமுதல் மோகன் தெளிவடைந்து ஊக்கமுற்றான். எப்படியும் தம் ஒரே மகனை மோகனின் எண்ணம் ஈடேறும் வண்ணம் சந்திரா அகப்பட்டதே அவர்களுக்கு ஒரு பெருமகிழ்ச்சியாயிருந்தது. ஒருநாள் எல்லோரும் கலந்து பேசி மோகனுக்கும் சந்திராவுக்கும் மணம்செய்ய ஏற்பாடு செய்தனர். பார்க்க வேண்டுவனவற்றையெல்லாம் பார்த்துவிட்டு ஊருக்குப் புறப்பட்டனர். சந்திராவையும் அழைத்துக்கொண்டு நண்பரிடம் விடை பெற்றுக்கொண்டு மிக்க மகிழ்ச்சியோடு ஊர் வந்து சேர்ந்தனர். மோகனுக்கும் சந்திராவுக்கும் எதிர்பாராது கிடைத்த நல்ல வாய்ப்பினை யெண்ணி யெண்ணி உள்ளூரவே மகிழ்ச்சியடைந்தனர். ஒரு நாள் மோகனின் தாய் தந்தையர் தன் நண்பரொருவரின் மணத்திற்காகச் சென்றுவிட்டனர். மோகனுக்கு எப்படியாவது சந்திராவைத் தனியே சந்தித்து, சொல்லாமல் போனதற்குக் காரணமென்னவென்று கேட்க வேண்டுமென்

னும் ஆவலை அடக்கிக்கொண்டிருந்தவனாதலால் அன்று ஒருவருமில்லையாதலால் சந்திராவிடம் சென்றான். சந்திராவோ ஏதோ படித்துக்கொண்டிருந்தாள். திடீரென்று மோகன் அவள் அறைக்குள் நுழைந்தவுடன் திடுக்கிட்டு எழுந்து நின்றாள். மோகன் தான் வந்தகாரணத்தைக்கூறி அவளைச் சொல்லும்படி வற்புறுத்தினான். அவளும் தன் எண்ணத்தைக் கூறினாள். மோகன் இதை ஏன் முதலிலேயே கூறாது இவ்வாறு இரண்டாண்டுகளாக என்னைத் தவிக்கவிட்டு திடீரென மறைந்துவிட்டாயே யென வருத்தத்துடன் கூறினான். அதற்குச் சந்திரா எத்தனையோ முறை தங்களிடம் கேட்க நினைத்ததுண்டு ஆனால் தாங்கள் என்னைத் திக்கற்றவளென்னும் காரணத்தால் ஒருவேளை வெறுத்துவிட்டால் என்ன செய்வதென்னும் பயத்தாலும், நான் இங்கேயே இருந்தால்வேறு யாரையாவது மணக்க நேரிடுமெனும் காரணத்தாலும் இவ்வாறு செய்ய நேர்ந்ததென வருத்தத்தோடு தெரிவித்தாள். இதையெல்லாம் மௌனமாய்க் கேட்டுக்கொண்டிருந்த மோகன்

யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும்எம்முறைக்
கேளிர்
யானும் நீயும் எவ்வழி யறிதும்
செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தான்
கலந்தனவே.

என்று கூறித் தலைவியைப் பாராட்டிய பண்டையதலைவன் நிலையையும் ஒப்பு நோக்கி மகிழ்ந்துரையாடினன். எனினும் இன்றைய உயர்வு தாழ்வுகளின் எண்ணங்களால் தனக்கும் சந்திராவுக்கும் ஏற்பட்ட இன்னல்களை எண்ணி வருந்தினான் மோகன். ஆனால் விறல் மந்திரியாக அவனுக்கு வாய்க்கப்போகும் சந்திரா தங்கள் மணத்தைப்பற்றிப்பேசி அவனது துயரத்தை மாற்றினாள்.

அவள்செய்த அவியல்தான் காணாமற்போன கருத்தனத்தை தனக்குத் தந்ததை நினைப்பூட்டும் வகையில் மணநாள் விருந்திற்கு அவியல் செய்வதெனத் திட்டமிட்டுக்கொண்டனர்.

டெல்லியிலிருந்து மூன்று நாட்களுக்கு முன்னமே வந்திருந்து மணத்தைச் சிறப்பித்து மணமக்களை மறுநாளே தங்களுடன் அழைத்துச் சென்றனர். இப்போதெல்லாம் சமையலில் சந்திராவின் தேர்ச்சி குறைந்துவிட்டதாகக் குறைப்படுகிறான் மோகன். யாது காரணம்?

---

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி லிமிட்.,

**மதுரை—தூத்துக்குடி—அம்பாசமுத்திரம்.**

**5,00,000** நூற்கும் கதிர்கள்

நெம்பர் **80**வரை நூல்கள்

**நாங்கள் சப்ளை செய்வது:**

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்குவேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் சீர்த்தி பெற்றவை.

**நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை**

மானேஜர்கள்:

**ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.**

# குரு தைலம்

மிகச் சிறந்தது

தலைவலி ஜூரம்
ஜன்னி முதலிய சகலவித
வாய்வு வலிகளுக்கும் நிகரற்றது
210 வியாதிகளுக்கு
அரசன்






டாக்டர் ஏ மதுரம் சன்ஸ்
குரு மருந்து சாலை - திருச்சிராப்பள்ளி




# "சுந்தரி - சுந்தரன்"

கவிஞர். சே. சிவகருப்பையா.

செந்தமி ழமுதச் செவ்வா யழகன்
அந்தமில் இலக்கியம் ஆய்வுறு புலவன்
யாப்பும், சொல்லும் நல்லணி மேவும்
காப்பியங் கற்றுக் கவிபுனைவல்லோன்
எந்தத் தேர்விலும் இணையிலன், ஆயினும்
சுந்தரன் ஏழை! தந்தையு மில்லை!
மாமன் மகளாம் மணிமொழியழகி
தாமரை மொக்குத் தான்விரிந்தாற் போல்
பருவமலர்ந்த பைந்தொடியணியாள்
புருவம் வளைந்த சேலொளி சிற்றிடைச்
சுந்தரி யிவளை முந்திரித் தோப்பில்
அந்தி நேரத்திற் சந்தித்து நின்றான்
"கண்ணொடு கண்ணிணை நோக்கின் வாய்ச்சொல்
என்னபயனுமில" தே யன்றோ?
ஊமைபோல் நின்று பார்வை பரிமாறி
சோகை தெளிந்து சொல்லுவான் சுந்தரம்,
"கானக் குயிலே! கவிதைக் கிளியே!!
மோனத்திருவே! முந்திரிப் பழமிதோ!
இந்தா - வாய்திற - ஊட்டம் என்றுதன்
செந்திருக் கரத்தால் சுந்தரி வாயில்
இட்டதுமவளின் சுவையுற்றவ்விடம்
விட்டுப் பிரிந்தனர், பிரியாமனதுடன்
சுந்தரி போக்கும் சுந்தரன் நோக்கும்
சந்தேகம் பெறச் செய்தது உடனே
பெற்றோர் ஏழைப் புலவன் றனக்கு
நற்றவச் சுந்தரி யைத் தரவேண்டி
விடியற் காலை வீறணன் கோயிலிற்
கடிமணம் செய்யும் கருத்தினைக் கூறி
"செம்பூ"க் கேட்டனர் பூசாரி எடுத்ததும்
"வெண்பூ" என்றான்... சுந்தரி தந்தையோ,
நேர்மையின் இறைவழி நீதியறியார்

சீர்மிகு பகுத்தறி வெள்ளளவில்லை
"ஏதோ, அவரும் பி. ஏ. வரையிற்
சாதகமாகப் படித்தார் என்று
சொல்லுவர் பலரும் என்ன பயனோ?
அல்லும் பகலும், பல்லியடித்தால்
அவசரப் பணிகள் பலவிருந்தாலும்
தவறாது கெவுளி சாத்திரம் தெரிவார்
தேறிய காதல் திகட்டியவுடனே
வீறணன் கோயிற் பூவென் செய்யும்?
மறுத்தது பூவென மதியிலாப் பெற்றோர்,
பொருத்தமிலாத போக்கிலிக் கந்தனை,
பழுதாம் செயலைப் பணத்தால் மறைக்கும்
தொழுநோய் பற்றிய காமப் பேயனை
"குலவி மகிழ்ந்த குயிலினை வலிய
விலக்கிக் காக்கைக் கிணைப்பது போலும்"
பொருத்தினர், பூவும் கொடுத்தது மங்கை
வெறுத்தனள் உடழும், விளையாடியது
சுந்தரி மீதோர் கண்வைத்திருந்த
கந்தனின் மீசையும், நெய்மணம் வீசின,
"சருவதாரி சாரும் கார்த்திகை
இருபத் தொன்றில் ரிடப லக்கினத்தில்
எங்கள் சுந்தரி கந்தனை மணப்பாள்
பந்துக்கள் உணவுச் சீட்டுடன் வருக!"—
மன்றலிதழினைக் கண்டதும் சுந்தரி
சுன்றியழுதனள் காவல் வலுத்தது,
மணவோலை சென்ற மறுகிமிடத்தே
பிணவோலை செல்வதை யாரே காண்பர்!
சுந்தரி பார்த்தாள் வழி யொன்றில்லை
"எந்தன்உயி ரென் காதலர்க்கா மென"
கடிதம் ஒன்றைச் சடிதில் வரைந்து
படிதவறாத பாங் கனுக்கேவி
ஞாலம் புகழும் காதற்கு யிலாள்
ஆலம் அருந்தி அந்தோ.........!
பணத்தைப் பூவைப் பெரிதாய் நினைத்தோர்
பிணத்தைக் கண்டதும் பேதுற்றலறினர்,
"கவிதைக் காதல்" செய்தித் தாளைப்
புவியிற் கொணரப் பெரிதும் விரும்பி
வலியோ ருதவி பெறுதற்காக



வெளியூர் சென்ற சுந்தரனுக்கு
மாமனனுப்பிய மன்றல் மலரும்
'நாமகளுற்ற நனியுயர்கலைபல
சுற்றோர்,' மகிழும் கவினுரை பொறித்து
மற்றொரு நிருபமும் வந்தது கண்டான்!
"சிந்தைக்கினிய சுந்தரப் புனிதா,"
சந்ததம் நன்மை தழைக! வணக்கம்!!
கன்றிய நந்தம் காதலைக் கண்டும்
என்றன் பெற்றோர் இன்னலிழைத்தனர்
"பச்சைக் கிளியினை இலட்சப் பிரபாம்,"
எச்சமி குத்திடு பூனைக் கீதல்
இச்சையா மவர்கட் கினியெனக் கார்துணை?
பச்சை நாவிதான்', பகர்தலும் வேண்டுமோ?
மறுத்துக் கூறினேன் வாய்விட்டலறி!
'குறிப்பை யுணர்த்தும் குலப்பழி யாளென'
வெறுத்தது மன்றிக் காவற் கட்டில்
இறுத்தினர் எவரும் வருதலிங் கரிது!
புளியந் தோப்புப் பூங்கா வனத்தில்
களிபே ருள்ளக் கண்மலர் நெகிழத்
தென்றல் வீசச் செந்தமிழ்க் கவியால்
என்றனைப் பாடிய தென்றும், மறவேன்;
பூவார் குழலி! பொற்றொடி மாதே
சாவே நேரினும் மறக்கேன் கண்டாய்!
கவிதைச் சுவையே! காதற் கனியே
செவியிசை மன்னும் செஞ் சொற்பாவாய்!
கன்னற் பாகே! குஞ்சிரிப் பழகியென் (று)
எண்ணம் திருத்தி "இச்" செனமுத்தம்
கன்னத் திறுத்திய கடிகைப் போதில்
வண்ணத் தாமரை மதுவுண் வண்டென
மயங்கும் காலை, வழிநின்ற ணங்கே,
தயங்காதிரு! சின் னாள்வரை, தமிழர்
முறை பிறழாது முயல்வோம், நந்தமிழ்
மறைவள் ளுவரில் லறமுற்றிடுவோம்
என்றெனக்குறுதி கூறிய தலைவா!
இன்றதை நினைக்கின் யாரே! சகிப்பர்!
அன்பமர் காதல! என் வாழ்விறுதி
அங்கலாய்க்காது ஆறுதல் கொண்டு
மற்றொரு பெண்ணை மணந்தினி வாழ்வீர்!

வெற்றித் தமிழா! விண்ணமுதம் பொழி
கவியரசே! நின் காவிய மனைத்தும்
புவிபோற் றட்டும் புலவரேறே!
நனிமிகு தமிழ்த்தொண் டாற்று தலும்கடன்
இனியென் சொல்வேன்! அன்ப! வணக்கம்!
இங்ஙனம் சுந்தரி!”— அவலம் வழிந்து
பொங்கிய நிருபம் சுந்தரன் மனதைக்
“கடைந்து செல்லும் கடியதோர் வாளிபோல்”
குடைந்து குமுறல் செய்திடப் புகல்வான்,
காதல் செய்வீர் தமிழ் நாட்டீரே!
காதல் வாழ்விற் கலையுணர் வீரென,
வீரத் தமிழன் வென்றிகொள் எந்தம்
பாரதிப் புலவன் பாடிய கவிதையை;
நாடெலாம் போற்றும் நற்காலத்தும்
கேடது வந்தெம் நீடிய காதலிற்
சாடிய தந்தோ! வீடினள் சுந்தரி!
ஓடியகாலச் சக்கரம் ஓய்ந்ததோ?
நல்லறம் பயிற்றும் மென்சொல்லணங்கே!
விள்ளற்கரிய வேய்ங் குழலிசையே!
சங்கவிலக்கிய இன்கவிக் குயிலே!
மங்கை யுன்னுறவா லென் கலைசிறந்தன.
வேறொரு காதலி யுற்றுவாழ் கெனநீ
கூறலும் தகுமோ? கொற்றவையே! நான்
கன்மனத்தானலன், காணுதி! காணுதி!!
உன்வழியேதோ வந்தேன்”. என்றதும்
எதையோ வாயிலி ட்டான் மறுகணம்
அசையாப் பிணமெனக் கிடந்தான்! அந்தோ!
சுந்தரியைத் தொடர்ந் தேகினன் சுந்தரன்.
செந்தமிழ்க்குயிலின மறைந்தன கண்டீர்!
“காதல் போயிற் சாதல்” என்னும்
நாதன் பாரதி நல்லுரை பொய்த்தில,
கலத்தைப் பற்றிக் கடலைக் கடந்தோர்
நிலத்தில் வாழ நேரினும் தமிழர்
வெற்றியே தவிர, வேறெதும் பெறார்
வெற்றுரை யாடார்! வியன் கலைபயின்று
தீதில செய்வர் தெய்வம் புரக்கும்
காதல் வளர்த்துப் பன்னலன் காணுவர்
கேளாயின்,! உண்மைக் காதல் பேணீர்!
மாண்புறு மக்கட் பேறற்றோரே!

# ★ சூரியனை வாரி விழுங்குகிறோம் ★



பேராசிரியர்:
திரு. ஈ. த. இராசேசுவரி அம்மையார்
எம். ஏ., எல். டி.

## சூரியப் பால்

சூரியனில் இருப்பன எல்லாம் நம்முடைய உடம்பிலும் இருக்கின்றன என்றோம். சூரியனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு இதனோடு முடியவில்லை. சூரிய பரம்பரையில் நம்மைப் படைத்தவனும் அவனே. இமைதோறும் காப்பவனும் அவனே. நம் உடலில் உள்ள பொருள்கள் கிணற்றில் போட்ட கல்லைப்போல அப்படியே இருப்பதில்லை. நாம் கல் அல்லவே. சேற்றில் இட்ட முளைபோல நாம் வளரும் பொருள்களேயாம். நம்முடைய உடம்பு ஒரு சிறந்த தொழிற்சாலைகள் நிறைந்த பட்டணம். அதிலும் ஏற்றுமதியும் இறக்குமதியும் விடாது தொடர்ந்து மாறி மாறி நடந்து வரும் அழகிய துறைமுகப் பட்டினம். கதையில் வரும் வானவர்கள் போல ஒரு முறை அமுதுண்டு எப்போதும் பசியே இல்லாமல் இருப்பது நாம் அன்று. உழைக்கின்ற வானவர்கள் என்றால் நாம் தான். ஆனால் இத்தனையும் செய்யச் சூரியன் ஒருவன் வேண்டும். கழிந்ததை எல்லாம் நிறைவாக்க அந்தக் கடவுளையே எதிர் பார்க்கின்றோம். தரையில் உள்ளவையே நம் உடலில் உள்ளவை எல்லாம் என முன்னரே கண்டோம். ஆனால் அவற்றை அப்படியே வாரி வாரி விழுங்க முடியுமா? இரும்பும் கரியும் எங்கும் கிடந்தாலும், நேரே வெட்டி எடுத்து மென்று தின்று வாழ முடியுமா? நம் உடம்பு அவற்றை உட்கொள்ளக் கூடிய நிலையில் மாற்றி அமைத்த பின்பே அவற்றை நாம் தின்னமுடியும். அதனால் அல்லவா அயச் செந்தூர மருந்திற்கு விலை அதிகம். குழந்தை வயிறு கொள்ளாத உணவைத் தாயானவள் உண்டு பாலாக மாற்றி ஊட்டுகின்றாளல்லவா? நமது வயிறு கொள்ளாத கரி முதலியவற்றைச் சூரியன் உணவாக்கி நமக்கு ஊட்டுகின்றான். பால் குடிக்கும் குழந்தை தாயை வாரி விழுங்குகிறது. நாமும் சூரியனை வாரி விழுங்குகிறோம். திங்களின் நிலவைத்தான் பால்

போலக் காய்கிறது என்று பேசி வருகிறார்கள். உண்மையில் பால் போலக் காய்ந்து நம்மைக் காப்பது சூரியனுடைய வெயில்தான்.

## சூரியப் பழம்

உலகெங்கும் இன்று பங்கிடு என்பதே பாட்டாக இருக்கிறது. பட்டினியும் நோயும் பேய்க்கூத்து ஆடுகின்ற இந்த நாளில் இந்த நுட்பத்தை அறிந்து அறிஞர் ஆராய்ச்சி செய்கின்றனர். சூரியன் இருக்கப் பட்டினி கிடப்பானேன்? பாழும் நோயால் பதை பதைப்பானேன்? வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவாரும் உண்டோ? ஆனால் "தெய்வம் காட்டும், ஊட்டுமா!" என்பார்கள். ஊட்டினாலும் உண்ணாது உறங்கும் குழந்தையை என்ன செய்வது? அதுபோலத் தான் இன்றைய உலகம் உழலுகிறது. சந்திரனை அமுதக்குடம் என்று வைத்து அதனை வாரி விழுங்குகிற கதை எங்கெங்கோ வழங்கி வருகிறது. உண்மையில் சூரியனே அமுதக்குடம். அதனை வாரி நாமே விழுங்கி வருகிறோம். கதையிலல்ல – கனவிலல்ல - நனவிலே. அனுமார் சிறுவராய் இருக்கும் போது ஒருநாள் காலையில் எழுந்தாராம் - அருகே தாயார் இல்லை- பசியோ வயிற்றைக் குடைந்தது. எதிரே செவ்வானத்திலே வெட்ட வெளியில் வீங்கிப் பழுத்துச் செக்கச்சிவந்த பழம் ஒன்று அந்தரமாகத் தொங்கக் கண்டார்; அது அவர் கண்ணைக் கவர்ந்தது. அவர் நாவில் நீர் ஊறியது. அதுதான் அனுமார் கண்ட சூரியப் பழம். இவரைத் தடுக்கப் பழத்தின் அருகே ஒருவரும் இல்லை. உடனே அதன் மேல் பாய்ந்தாராம். இது ஒரு பழங்காலக் கதை. ஆனால் எதிர்கால உண்மை. உண்மையில் சூரியன். மிகமிக இனிய, மிகமிக அழகிய, மிகமிக வளப்பமான பழம்தான். வாடாத-வற்றாத பழம். தோன்றிய நாளில் இருந்து மனிதர் மட்டும் அல்ல- எல்லா உயிர்களும் - வெயிலாகக் கொட்டும் அந்தப் பழத்தின் சாற்றினைப் பருகிக் களிக்கின்றனர். ஓர் அறிவுப் பொருளில் இருந்து ஆறறிவுப் பொருள் வரை - ஏன் கல்லும் மண்ணும் உட்பட உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் சூரியனை உண்டே வாழ்கின்றன.

## பாலும் பழமும்

சூரியனை விழுங்குகிறோம் என்றால் சிலர் திகைக்கலாம். "நாம் என்ன இராகு கேதுவின் பரம்பரையா?" என்று மயங்கலாம். "கதையா? கனவா?" என்று எள்ளி நகையாடலாம். ஆனால் உண்பது என்றால் என்ன? கைக்கும் வாய்க்கும் சண்டையா? வயிற்றைத் துறுத்து நிரப்புவதா? வாயிலிடும் பொருள் வயிற்றினுள்ளே போய் என்ன ஆகிறது? வெவ்வேறு உட பொருள்களாக மாறி மனிதனை



வளர்க்கிறது; அவனுக்கு வேண்டிய சக்தியைக் கொடுக்கிறது, நமக்குச் சக்தி குறைந்தால் அதற்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தேடுகிறோம். பழம் தின்று பால் குடித்து வாழ்பவன் பார் முழுதும் ஓடி ஆடிப் பாடி உழைத்து வருவான். நோயற்ற வாழ்வே அவனுடைய குறைவற்ற செல்வம். இப்படிப் பேசுவதன் பொருள் என்ன? உடலுக்குவேண்டிய சக்தி முழுதும். ஒரு சிறிதளவு பொருளிலேயே வருமானால் கும்பகர்ணனைப்போல் வயிற்றுக்கு மட்டும் வேலை கொடுக்காமல் அகத்தியரைப் போல் தலைக்கே வேலை கொடுத்து வாழலாம். அதுவே அறிவாளியின் பெருமை; ஞானியின் வாழ்வு. மணமக்களுக்கும் பாலும், பழம்; தவமக்களுக்கும் பாலும் பழம் இவற்றிலுள்ள அவ்வளவு திணிந்த சத்து என்ன? பால் என்பது பசுவின் உயிர்ச்சாறு; பசுவின் பரம்பரையை வளர்க்கின்றது. பழம் என்பது மரத்தின் உயிர்ச்சாறு; மரத்தின் பரம்பரையை வளர்க்கின்றது. பசுவின் பாலும் பசும்புல்லின் மற்றொரு அவதாரமே. ஆதலின் பாலும் பழமும் மரச்சாறு என ஒன்றாக அடங்கிவிடும். மரச்சாறோ வெயிலின் பெருக்கத்தால் வீங்கிப் பாய்வது. ஆதலினால் எல்லாம் சூரியச்சாறே.

## உயிர் எந்திரத்தின் : : : : ஓட்டம்

கரியில்லாமல் நெருப்பு எரியுமா? எரியாமற் போனால் புகைவண்டி எந்திரம் ஓடுமா? நம் உடம்பும் ஓர் எந்திரம். அசையாமல் இருந்த இடத்தில் இருந்தாலும் நம் உடம்பில் உள்ள உறுப்புக்கள் எல்லாம் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. இருந்த இடத்தில் இருந்தே கடிகாரம் ஓடவில்லையா? தண்ணீர் இறைக்கும் எந்திரம் வேலைசெய்ய வில்லையா? நாம் அசையாமல் இருந்தாலும் நம்முடைய குருதி ஈரல் (Heart-இருதயம்) இரத்தத்தை உடல் முழுதும் இறைத்து வருகிறது. நுரையீரல் என்ற துருத்தி எந்திரமும் மூச்சு விட்டுக்கொண்டே போகிறது. இவற்றிற்கு எல்லாம் ஆற்றல் வேண்டாமா? பசியால் அலையும் போது ஆற்றல் இல்லையே என்று வாடுகிறோம். உடம்பு என்கிற எந்திரத்தை ஓட்டுகிற ஆற்றலை விளைவிக்கின்ற எரிகரும்பே உணவாம். உடம்பு சூடாக இருக்கின்றதல்லவா? உடம்பின் உறுப்புக்கள் வேலை செய்யும் வரை இந்தச்சூடு இருக்கும். வேலை செய்யாது குளிர்ந்த உடம்பிற்குத்தான் பிணம் என்று பெயர். இந்தச்சூடு எங்கிருந்து வருகிறது? சூரியனில் இருந்துதான். எந்த எந்திரமும் சூரியனின்றி இயங்க முடியாது. "அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது" என்பது சூரியனைப் பற்றிய உண்மை.

## மொண்டு வைத்த : : : : வெய்யில்

சூரியனுடைய ஆற்றல் உலகில் வெயிலாகப் பாய்கிறது. அதனை நாம் நேராக உண்பது சிறிதளவுதான். அவ்வாறு உண்பதன் சிறப்பினைப் பின்னர்க் காண்போம். ஆனால் வெய்யிலை மட்டும் உண்டு உயிர் வாழக் கூடியவர்கள் சித்தர்களே. நாமோ அந்த வெய்யில் வழியாக வழிந்துவரும் ஆற்றலைப் பலபல வகையாக மொண்டுவைத்து உண்ணவேண்டும். செடிகொடிகள் தம் உயிர் அணுக்கள் ஒவ்வொன்றிலும் இவ்வாறு மொண்டு வைத்து இருக்கின்றன. அதனையே ஆற்றல் விருந்தாக நாம் உண்கிறோம். உயிர் வகைகள் உண்ணும் உணவினைப் பாலும் பழமும் என மேலே பிரித்தது போல இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று புலால் உணவு; மற்றொன்று மரக்கறி உணவு. புல் பூண்டு, கீரை கிழங்கு, கொடி, செடி, பழம், பருப்பு முதலியன சூரியனுடைய ஆற்றலை நேரே பெற்று, அந்த ஆற்றலை ஒவ்வொரு அணுவிலும் மொண்டு வைக்கின்றன. இவற்றினைப் பிற உயிர்ப் பொருள்கள் உண்டு தமக்கு ஏற்ற ஆற்றலைப் பெற்று வளர்ந்து வருகின்றன. ஆடு மாடு உயிர்வாழ்வது இப்படித்தான். இவ்வாறு ஆற்றலை மரக்கறிவழியாகப் பெற்று உடலை வளர்த்து வரும் ஆடுமாடுகளை நேரே தின்று எளிதில் தம் உடலை வளர்ப்பவை புலி சிங்கம் முதலியனவாம். பொன் முட்டை இடும் வாத்தைக் கொன்ற குடியானவனைப் போல இவ்வாறு செய்யாது பொன் முட்டையை மட்டும் விற்று வாழும் குடியானவன் போலப் பசுமுதலியன தரும் பாலை வாழ்நாள் எல்லாம் உண்டு தம் உடலை வளர்ப்பவர் மக்களில் ஒரு சிலர்.

## உயிர்ச் சங்கிலி

இவ்வாறு எங்குப் போய்ப் பார்த்தாலும் உணவு என்பது சூரியனில் இருந்துதான் பொங்கி வழிவதைப் பார்க்கலாம். வெய்யில் புல்-பசு என்பது ஒரு சங்கிலி. வெய்யில்-புல்-பசு-புலி என்பது மற்றொரு சங்கிலி. வெய்யில்-செடி-மனிதன் என்பது மாட்டோடு போட்டி இடும் மனிதனின் சங்கிலி. வெய்யில்-செடி-ஆடு-மனிதன் என்பது புலியோடு போட்டி இடும் சங்கிலி. வெய்யில் - புல் - பசும் பால்-செடி - மனிதன் என்பது இரண்டு வகையையும் ஒன்றாக இணையவைக்கும் சங்கிலி. இரும்புச் சங்கிலியில் வளையங்கள் பல வடிவமாக இருந்தாலும் எல்லாம்இரும்பே. அதுபோல இந்த உணவுச் சங்கிலியின் வளையங்கள் செடி வடிவோ பசு வடிவோ பால் வடிவோ கொண்டு வேறுபட்டாலும் எல்லாம்: அடிப்படையில் வெயிலால் ஆகிய சங்கிலிகளே.



## அறுமுகன் : : : : : : திருவிளையாடல்

எந்திரம் ஓடக்கரி வேண்டாமா என்றோம். கரி ஒரு புதுமை. தண்ணீர் நீராவியாய்ப் பரவும். தண்ணீராய் ஓடும். பனிக்கட்டியாய் இறுகும். அதுபோல சூரியன் ஆற்றலும் வெய்யிலாய்ப் பரவும் உயிர்ப் பொருளின் ஆற்றலாய் ஓடும். கரியாய் இறுகும். மரக்கறி உலர்ந்தால் விறகாய்க், கரியாய், எரியவில்லையா? உடம்பைச் சுட்டெரித்தாலும் எரிந்து சாம்பலாகவில்லையா? கரி இந்த உலகத்திலுள்ள உயிர்களின் உடம்புக்கு அடிப்படையாகும். செவ்வாய் - செந்நிறத்தீ - தீப்பொறி வடிவான முருகன்-ஆறுமுகம் - பன்னிரண்டு கை என்று, சோதிடர் பூமிக்கு அதிதேவதையைக் கூறிவரக் கேட்கிறோம். எரிகிற கரியும் செந்நிறத்தீயே. அந்தக்கரி அணு 96 தத்துவங்கள் என்று சொல்லக் கூடிய அணு வரிசையில் 6வதாம். ஆதலின் ஆறுமுகப்பெருமான் என்று கூறலாம் அதன் அணுஎடை 12" என்பர். 12 கைக்கு நேராக இந்தக் கணக்கு இருக்கின்றதல்லவா? கரி அணுக்கள்போல மிக மிக நீண்ட சங்கிலியாக வேறு அணுக்கள் அமைவது அருமை. பல பல வகையில் பல பல அளவில் பல பல நிறத்தில் இந்தக் கரியணுக்கள் கூடி ஈழை என்றும், கோழை என்றும், உமிழ்நீர் என்றும், சிறுநீர் என்றும், பித்தநீர் என்றும், புளிப்பு என்றும் இரத்தம் என்றும், கண்ணீர் என்றும் முருந்து என்றும், எலும்பு என்றும் மயிர் என்றும், நகம் என்றும், தோல் என்றும் மீந்தோல் என்றும், மூளை என்றும் பல பல வடிவம் கொண்டு உடலமாக அமைகின்ற வியப்பே வியப்பு! நம் அடுப்பை எரிப்பது மட்டும் கரியென எண்ண வேண்டாம். நாம் எழுதுவதெல்லாம் கரிக்கோலே. வயிரத்தின் மேல் பெண்களுக்கு இயல்பாக உள்ள பேராசையின் காரணம் என்ன? நம் உடம்போடு கூடப் பிறந்த கரியோடு கரியாய் இருப்பதே காரணம். நாம் உண்ணும் உணவெல்லாம் கரி அணுவின் பல வகைச் சங்கிலிக் கோலங்களே.

## சூரிய பக்தி

இவ்வாறு பலவகையான கரிச் சங்கிலிகளை பின்னுபவன் சூரியன் என்ற கம்மாளனே. நக்கீரர் கடலருகே சூரியர் எழுவதனைக்கண்டு மயிலேறும் பெருமானை நினைத்துக் கொண்டது இயல்புதான். கரியையோ வேறு பொருளையோ நேரே நாம் உண்ண முடியாது. அவற்றை உண்ணும் உணவாக அமைத்துத் தரும் சூரியனுடைய தாய்மை அன்பினை உற்று நோக்குதல் வேண்டும். செடிகொடிகள் பச்சையாகக் கண்

குளிரக் காட்சி அளிக்கின்றன. இது சூரியன் ஊட்டுகிற அமுத நிறம். பச்சைக் குதிரைமேல் ஏறிவருகின்றான் என்று சூரியனைப் பாடுவது உண்டு. சூரியன் எதிரில் இல்லாமல் இருட்டு அறையில் இந்தச் செடிகளை வளரவிட்டுப் பார்த்தால் என்ன காண்கிறோம்? அவை வெளுத்துச் சோகையாய் சாகின்றன. சூரியகாந்திப்பூ மட்டும் சூரியனை நோக்கி நிற்கின்றது என எண்ண வேண்டாம். எல்லாச் செடிகளும் சூரியனையே நோக்கி நிற்கின்றன. நிழலில் வளரும் செடி தன் கிளையை சூரியனுக்காக நீட்டிக்கொண்டு வளரும். தலைகீழாகச் செடியைக் கவிழ்த்து வைத்தால் இது நேராக வளருவதை விட்டு மடங்கித் திரும்பிச் சூரியனை நோக்கி மேல் எழும்பி வளரும். ஓர் அறிவுயிர்களும் இவ்வாறு கழைக்கூத்தாடிக் கரணம் போடும்படி செய்வது சூரியனே. "தாயறியாக் கன்று உளதோ,"? சூரியனை அறியாத செடி உளதோ? அவற்றின் உடலிலேயே சூரிய பக்தி அப்படி ஊறி இருக்கிறது.

## சூரிய குடும்ப : : : : பண்ட மாற்று

செடிகள் பச்சையாக இருப்பது அவற்றின் அணு அறையில் (Cell.) பச்சை என்ற ஒரு பொருள் (Chlorophyl) இருப்பதாலேயாம். நஞ்சை எல்லாம் அமுதாக்கும் சித்தர் சஞ்சீவி இதுதான். உலகில் கிடைக்கும் அடிப்படைப் பொருள்களை உணவாக மாற்றுவது இப்பச்சைப்பொருள்தான். சூரியன் எதிரே அவனுடைய வெய்யிலை வாரி விழுங்கிற இந்தப் பச்சைச் சஞ்சீவி அவ்வாறு விழுங்கிப் பெற்ற ஆற்றலின் பயனாகக் காற்றிலே பரவிக் கிடக்கிற, கரிஈருயிரியை (Carbon dioxide-கார்பன்டை ஆக்சைட் அல்லது கரிஅமில வாயு) உறிஞ்சிக் குடிக்கிறது. நாம் மூச்சு விடும்போது கக்குகிற காற்று இந்தக் கரிஈருயிர்தான். இதனை உட்கொள்ளும் பச்சைச் சஞ்சீவி இதிலுள்ள கரியினையும், உயிரியத்தையும் (Oxygen-ஆக்சிஜன்-அல்லது பிராணவாயு) வேறு பிரிக்கிறது. கரியணுவை வேறு பொருள்களோடு சேர்த்து இந்தப் பச்சையே மரத்தின் பல உறுப்புக்களையும் அமைக்கின்றது. அந்த அமைப்பே நமது உணவாக நம் உயிரை வளர்க்கிறது. உயிரியத்தினை நாம் மூச்சு வாங்குமாறு அந்தப் பச்சையே வெளியே விட்டுவிடுகின்றது. நாம் கரியீருயிரியை மூச்சு விடும்போது எல்லாம் மரத்திற்குக் கொடுத்தால் மரம் நாம் மூச்சு வாங்க உயிரியம் கொடுக்கின்றது. உயிர் வாழ உணவு கொடுக்கின்றது. பண்டமாற்றம் சரியாக இருக்கின்றது அல்லவா? உயிரியம் இல்லையானால் நாம் மூச்சு வாங்குவது எங்கே? நம் இரத்தத்



தைச் செம்மையாக்கித் தூய்மைப் படுத்துவது எங்கே? உணவு இல்லையானால் வாழ்வதுதான் எங்கே? உயிர்ப்பொருள்கள் எல்லாம் கக்கும் கரியீருயிரியாம் ஆலகால விஷத்தை உண்டு மரமானது இவ்வாறு நமக்கு அமுதத்தைத் தரவில்லையானால் உயிர்ப் பொருள்கள் எல்லாம் அந்த ஆலகால விஷத்தால் செத்துப்போகும் அன்றோ? ஆகையால் மரத்திலுள்ள இந்தப் பச்சையைச் சஞ்சீவி என்பதற்கு என்ன தடை இருக்கிறது? மக்களும் மாக்களும் மரங்கொடியுமாய் ஒருவருக்கு ஒருவர் பண்டமாற்றி உதவி ஒரு சூரிய குடும்பமாய் வாழுகின்ற உண்மையும் இந்தப் பச்சை வழியே வெளியாகவில்லையா?

## பச்சைச் சஞ்சீவி

உணவினைக் கரியணுக்களைக் கொண்டு அமைக்கின்ற முறை ஒரு பெரிய சித்தர் முறை. கரியை நேரே உண்டால் அது உடம்பில் ஒட்டாது. உடம்பு அதனை அப்படியே வெளியே தள்ளும். மாவுப் பொருள் (Starch) என்றும், கொழுப்பு (Fat) என்றும்; ஊன் செய்யும் பிசிதம் (Protein) என்றும், பலபல வகையாக உடலுக்கு வேண்டியிருக்கும் உணவுப் பொருள்கள் எல்லாம் கரியணுக்களின் பலபல அவதாரங்களே. இப்படி அவதாரம் எடுத்த பின்னர், இவை உடம்பில் ஒட்டுகின்றன. உடம்பை வளர்க்கின்றன. இந்த உணவுப் பொருளில் கரியோடு வேறு பொருள்களும் கலந்திருக்கக் காண்கிறோம். உயிரியம், (ஆக்சிஜன்-பிராணவாயு) நீரியம், (ஹைட்ரோஜன்) காலகம், (நைட்ரொஜன்-அல்லது வெடிஉப்பு வாயு) முதலியவாகக் கரியுடன் கலக்கின்ற பொருள்களைக், காற்றிலிருந்தும் தரையிலிருந்தும் உறிஞ்சி எடுத்து, கரி அணுக்களோடு சேர்த்து, உணவுப் பொருளாக இந்தப் பச்சைச் சஞ்சீவியே, அமைத்து வைத்து, செடிகொடிகளாக வளர்க்கின்றது. எள், நிலக்கடலை, தேங்காய் முதலியவற்றில் கொழுப்பும், அரிசி கோதுமை, கேழ்வரகு முதலியவற்றில் மாவுப் பொருளும், கடலை, துவரை உளுந்து முதலியவற்றில் பிசிதமும் நிறைந்து இருப்பதனை அவற்றினை உண்டயார்தான் அறியார். இவற்றினை உண்ணும் உயிர்ப் பொருள்களிலும் இவை உடம்போடு உடம்பாய்க் காத்துக் கொண்டு கிடக்கின்றன. அதனாலேயே மாட்டை விழுங்கும் புலி இவற்றை எளிதில் பெறுகின்றது.

## எல்லாம் வல்ல சித்தர்

இவ்வளவுதானா இந்தப் பச்சை செய்யும் சித்து. கந்தகம், (Sulphur) எரிகந்தகம், (Phosphorus) சாம்பல் உப்பு (Potassium) முதலிய எத்தனையோ பொருள்கள் உடம்புக்கு வேண்டும் எனக் கண்டோம்.

இவற்றினையும் தரையில் இருந்து உறிஞ்சி எடுத்து உணவாகச் செடியில் அமைப்பது இந்தப் பச்சையேயாம். எத்தனை வகையான உப்புக்கள் எத்தனை வகையான கீரைகளில் கிடைக்கின்றன! உடம்பில் ஒட்டக்கூடிய நிலையில் வேறு எங்கும் இவை கிடைப்பதில்லை. இதற்காக அன்றோ எருவிட்டுச் செடிகளையும் பயிர்களையும் வளர்க்கின்றோம். அருவருப்போடு நாம் குப்பையில் வீசி எறியும் எருவெல்லாம் மருக்கொழுந்தாய் மணப்பது எதனாலே? தித்திக்கும் செங்கரும்பாய்த் தேமாங்கனியாய்க் கொடிமுந்திரியாய் இனிப்பது எதனாலே? கொழுகொழுத்த உளுந்தாய் வாதுமையாய் வளங்கொழிப்பது எதனாலே? கைக்கினிய கண்ணுக்கினிய கருத்துக்கினிய அழகிய பூக்களாய் மலர்ந்து காதுக்கினிய பாடல்களைப் பாடும் பறவைகளை வரவழைப்பது எதனாலே? பச்சைச் சஞ்சீவிச் சித்தராலேயேயாம். ஆனால் பச்சைச் சஞ்சீவி சூரியன் வெயிலில் தன்னைத்தானே புடம் போட்டால் தான் இத்தனைச் சித்தும் விளையாடக்கூடும். இல்லையானால் வெளுத்துச் சோகையாய்ச் செத்து ஒழியும். ஆதலின் சித்தர்க்கும் சித்தராய் எல்லாம் வல்ல சித்தர் எனச்சித்து விளையாடுவது சூரியச் சித்தரேயாம்

### தோல்வாய்

இது வரையிலும் வாய்வழியாகச் சூரியனை வாரி விழுங்குவதைக் கண்டோம். இனி நம் தோலேவாயாக, அவனை நேரே வாரி விழுங்கும் வியப்பினை அடுத்துக் காண்போம்.

Telegrams: COOPFIRE. Telephone 4361

**The Co-Operative Fire & General Insurance Society Ltd.,**

**MADRAS. 1**

President: Sri. T. M. CHINNAYYA PILLAI, M. A., B. L.,


Transacts

Fire Insurance of all description and Fidelity Guarantee Insurance and Motor Vehicles Insurance.

For Particulars—Apply to:—

**P. SHANMUGHAM, B. A.,**

**POST BOX No 1249. MADRAS 1**



# காலச் சக்கரம்

[M. சங்கரலிங்கம், B. A., L. T.]

எனக்கு அப்பொழுது வயது பன்னிரண்டு. ரெங்கூனுக்கு ஓடிவிட்டேன். அங்கே ஒரு பலசரக்குக்காரரிடம் வேலைக்கு அமர்ந்தேன். சாப்பாடு போட்டு மாதம் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் சம்பளம். முதலாளி பெரியசாமி நல்லவர். நன்றாக வைத்துக் கொண்டார் என்னை. கடைவேலைக்காரன் ஒரு சிறு தவறு செய்தாலும் முரட்டுத்தனமாகச் சில முதலாளிகள் அடித்து விடுவார்கள். அல்லது வாயில் வந்தபடி வைவதுமுண்டு. பெரியசாமி குணக்காரர். அன்பாக நடத்தினார்.

மூன்று ஆண்டுகள் ரெங்கூனிலேயே இருந்தேன். வீட்டு நினைப்பே யில்லாமல் காலத்தைத் தள்ளினேன். என்னுடைய சொந்தவூர் கருப்பட்டி. என் தகப்பனார் நான் குழந்தையாயிருக்கும் பொழுதே இறந்து போனாராம். என் தாயார் ஒரு சில்லரைக்கடை வைத்து என்னை வளர்த்தாள். ஒரு நாள் கோபமாக வைதாள். ஆகையால் சான் சொல்லாமல் ஓடிவிட்டேன்.

பங்குனி மாதம் ஊருக்குத் திரும்பி வந்தேன். ஊரில் மாரியம்மன் திருவிழாச் சமயம். என் தாயாருக்கு மனம் குளிர்ந்தது. "என் மகன் ரெங்கூனிலிருந்து வந்து விட்டான், வந்துவிட்டான்" என்று எல்லோரிடமும் சொன்னாள். மகனைக் கண்டது அவ்வளவு பூரிப்பு அவளுக்கு. பொதுவாக எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

செலவுக்குப் போக நூறு ரூபாய் கொண்டுவந்திருந்தேன். அதைக் கொடுத்து ஒத்திக்கு இருந்த எங்கள் வீட்டைத் திருப்பினோம். ரெங்கூனுக்குப் போகுமுன் உள்ளூர்ப் பாடசாலையில் ஐந்தாம்படி வரை படித்திருந்தேன். ரெங்கூனில் கொஞ்சம் இந்தியும், பர்மிய பாஷையும் தெரிந்து கொண்டேன். ஊருக்கு வந்தவுடன் என் நண்பர்கள் என்னைச் சுற்றி "ரெங்கூன் எப்படி ஊரு? என்ன விசேசம்?" என்று கேட்டார்கள். ரெங்கூனைப் பற்றி "அதைப் பார்த்தேன், இதைப் பார்த்தேன்" என்று பார்த்த அதிசயங்களை யெல்லாம் சொன்னேன். அவர்கள் ஆச்சரியத்துடன் கேட்டார்கள்.

2

கருப்பட்டி ஒரு பட்டிக்காடு தான். காடு, தோட்டங்களில் சுற்றிப் பார்ப்பதிலும், மரங்களில் ஏறுவதிலும், இறங்கு கிணறுகளில் குதித்து விளையாடுவதிலும் பொழுதைக் கழித்து வந்தேன். பத்து மாதங்கள் ஓடின. பங்குனிப் பொங்கலும் நெருக்கிற்று. மாரியம்மன் திருவிழா வந்தது. நேர்த்திக்கடன் செய்வோர், பொங்கல் வைப்போர், கோழி, கிடா வெட்டுவோர், தீச்சட்டி எடுப்போர், கயிறு குத்துவோர், வேசம் போடுவோர், மூன்று நாள், இருபத்தொரு நாள் விரதமிருப்போர்-எல்லா வேடிக்கைகளையும் பார்க்கலாம்.

எனக்கு மறுபடியும் கடைவேலைக்குக் கிராக்கி வந்தது. இந்தத் தடவை இன்னொரு முதலாளி சாப்பாடு போட்டு மாதம் பத்து ரூபாய் தருகிறேனென்று மூன்று வருடத்திற்குப் பேசினார், சித்திரை மாதம் ரெங்கூனுக்குப் புறப்பட்டேன்.

நாட்கள் பறந்தன. தொழில் முறையில் நன்றாகப் பழகினேன். என் பேருக்குக் கணக்கில் ரூபாய் இருநூறு, வரவு இருந்தது. மீதியைச் சொந்தச் செலவிற்கும் வீட்டிற்கும் உபயோகித்தேன். இனிமேல் இன்னொருவரிடம் என் வேலை பார்க்கவேண்டும், சொந்த வியாபாரம் செய்யலாமென்று என் மனம் தூண்டிற்று. அந்த இருநூறு ரூபாயையும் வாங்கித் தனிக்கடை ஆரம்பித்தேன். அதே வருடத்தில் ஐந்நூறு ரூபாய் இலாபம் கிடைத்தது. ஒரு வீட்டை வாடகைக்குப் பிடித்து ஒரு பர்மாக்காரியோடு வசித்து வந்தேன் இந்தச் செய்தி ஊருக்கு எப்படியோ எட்டிவிட்டது.

ஊரிலிருந்து ஒரு லட்டர் வந்தது. "நம்ம ஊரிலே சொந்தப் பொண்ணு எத்தனை யிருக்கு. கல்யாணம் செய்யனும்ண்ணு ஒரு வார்த்தை சொன்னால் நாங்கள் செய்து வைக்கமாட்டோமா? வேண்டாமப்பா; சின்னப்பா தாய் சொல்லைத் தட்டாதே. நமக்கு அடுக்காது. இருக்கிற ரூபாயைக் கொண்டுக்கிட்டு ஊருக்கு வந்து சேரு. நல்ல பெண்ணாக, உனக்கு மனதுக்குப் பிடித்ததாக கலியாணம் செய்துகொண்டு அங்கே போய் வியாபாரம் செய்யலாம்" என்று எவ்வளவோ எழுதினார்கள். நான் பேசாமலிருந்து விட்டேன்.

3

வருடா வருடம் கிடைக்கிற லாபமெல்லாம் அவளுடைய உடைக்கும், செலவுக்கும்தான் சரியாய் வந்தது. என்மனம் குத்திற்று. "சே! சம்பாதிப்பதெல்லாம் இப்படிப் போனால் என்ன செய்வது?



இவளும் வந்து மூன்று வருஷமாகப் போகிறது. ஒரு சல்லி மிஞ்சக்காணோம். இனிமேல் இவளை விட்டுவிட்டு ஒருவருஷப் பாட்டுக்கு சிவனே என்று நம்ம நாட்டிலே போயிருந்துவிட்டு வரவேணும்" என்று நினைத்தேன்.

ஒருநாளிரவு சங்கதியை அவளிடம் மெதுவாய்ப் போட்டேன். "நான் ஊருக்குப் போகிறேன். போய் என் அம்மாவைப் பார்க்க ஆசையாயிருக்கு" என்றேன். அதற்கு அவள், "நானும் உங்கள் கூட ஊருக்கு வருகிறேன்" என்றாள்.

"நீ வரக்கூடாது. வந்தால் ஊரில் திட்டுவார்கள் உனக்கும் நல்லாயிருக்காது." என்றேன் உடனே அவள், "அப்படியானால் நீங்களும் போகவேண்டாம்" என்று சொன்னாள்.

"இல்லை. கட்டாயம் போகவேண்டும். என் தாய்க்கு உடம்புக்குச் சரியில்லை. உடனே புறப்பட்டுவா என்று தந்தி வந்திருக்கிறது. அதனால் நான் போகவேண்டும்" என்று பொய்ச்சாக்குச் சொல்லிப் பார்த்தேன்.

"என்னையும் கூட்டிக்கொண்டு போங்கள். என்னை விட்டுவிட்டுப் போகக் கூடாது" என்றாள்.

"நான் சம்பாதிப்பதெல்லாம் உன் செலவுக்குத்தானே காணுகிறது. என் கூட வந்தவர்களெல்லாம் இரண்டாயிரம், மூவாயிரம் சேர்த்துவிட்டார்கள், பார். எனக்கு இப்படியிருக்கப் பிடித்தமில்லை" என்று மனம்விட்டு உள்ளதைச் சொன்னேன்.

அவள் யோசித்தாள். "சரி, நீங்கள் போகவேண்டாம். நான் இனிமேல் தங்கள் மனைவி. இதுவரைக்கும் விளையாட்டாகக் காலத்தைக் கடத்திவிட்டோம். வீட்டுக்கு வேலையாள் வேண்டாம். நானே எல்லா வேலைகளையும் பார்த்துக்கொள்கிறேன். உங்களுக்கு வேண்டியதைச் செய்கிறேன்," என்று கூறினாள். சரி, அவளுக்குப் புத்தி வந்துவிட்டதாக்குமென்று இன்னொரு வருடம் பார்ப்போமென்றிருந்தேன்.

4

நான் எண்ணியதற்கு மேலாக எல்லாம் நடந்தது. ஒரு பெண் குழந்தை பிறந்தது. அந்த வருடம் நல்ல இலாபம் கிடைத்தது. குழந்தையின் யோகம் என்று நினைத்தேன். அதற்கு அடுத்த வருடம் அவளைக் கூட்டிக்கொண்டு குழந்தையோடு ஊருக்கு வந்தேன். சொந்தக்காரர்களுக்கெல்லாம் கோபம்.

'இதென்னடா அநியாயமாயிருக்கு,'' என்றார் சிலர். 'இப்படி

எங்கேயாவது கேட்டதுண்டா?" என்றார் பலர். "பெண் நன்றாய் அழகாய்த்தானிருக்கிறாள்" என்றார் வேறு சிலர்.

"குழந்தை அப்பனைப் போல் அச்சுவார்த்தாப்போலே யிருக்கு. மூக்கும் முழியும் சுற்றுமுற்றும் சின்னப்பனை எங்கே என்றிருக்கு" என்றவர் சிலர்.

மகன் என்ன குற்றம் செய்தாலும் தாய் மனம் பொறுத்துக் கொள்ளும்என்று சொல்லுவார்கள். நாங்கள் வந்த சில நாட்களில் எல்லாம் சரியாப் போய்விட்டது.

பேத்தியாளைப் பார்த்துப் பார்த்து என்தாய் ஆனந்தித்தாள்.

ஊரில் மூன்று மாதமிருந்தேன். குடும்பத்துடன் ரெங்கூனுக்குத்திரும்பினேன். இரண்டாவது ஆண் குழந்தை பிறந்தது. பெண் குழந்தைக்கு வயது வந்தவுடன், என்கடையில் கணக்கு வேலை பார்த்த, கருப்பட்டிக்கு அடுத்த ஊர்க்காரப் பையன் மாரியப்பனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தேன்.

மாப்பிள்ளையும் சொந்த வியாபாரி ஆனார்.

---




# மஞ்சள் வெய்யில்

## இளியன்

[முற்கதைச் சுருக்கம்:- தாமரைக்குளத்துப் பண்ணையாராகிய தணிகாசலம் இறந்த பிறகு அவரது சொத்துக்களைக் குறித்த உரிமை வழக்குத் தொடரலாயிற்று-தணிகாசலத்தின் மகனாகிய புகழேந்தியின் மீது கொலை வழக்குப் பதிவாயிற்று-தணிகாசலத்தின் மாளிகையில் அரங்கநாதன் ஆட்சி வலுப்பெற்றது- தாமரைக்குளத்தின் பொதுமக்கள் புகழேந்தியைக் காணாமல் துடித்தனர்- புகழேந்தி தற்செயலாய்ப் பாவநாசத்தில் ,கண்ட பூங்கொடியும் அவளது தந்தையும் புகழேந்திக்கு உதவிசெய்ய விரும்பித் தாமரைக்குளத்திற்கு வந்து, அரங்கநாதனைப்பற்றி யறிந்து கொண்டு தஞ்சையில் தங்கியிருந்தனர்.]

### 11-ம் காட்சி


செங்கதிரோன் ஆட்சிபுரியும் பகல் காலம் உலகத்தில்வாழும் உயிர்களுக்கெல்லாம் பேரின்பமாயிருக்கிறது. ஆடி ஓடுகிறார்கள்; பாடுபடுகிறார்கள்; வெயர்க்க விறுவிறுக்க உழைக்கிறார்கள்; உழைத்த உடல் ஓய்வை விரும்புகின்றது; மாலை எப்பொழுது வரும் என்று காத்திருக்கிறார்கள் மக்கள்; பறவைகளும் விலங்குகளும் இருப்பிடத்தை நோக்கித் திரும்புவதற்கு மாலைப் பொழுதை வரவேற்கின்றன. கதிரவனின் கடுங்கரங்களால் காய்ந்து கருகிய மாநிலமடந்தையும் மாலை மன்னவனின் வரவையுன்னி மகிழ்பூக்கிறாள். மஞ்சள் வெய்யிலாகிய பொன்னிறப் புத்தாடை புனைந்து பூமகள் பொங்கிப் பூரிக்கிறாள். பொழில்களிலே பூக்கள்; பூக்களில் வண்டுகளின் பாடல்; அருகில் மயில்களின் ஆடல். மஞ்சள் வெய்யில் வீசும் மாலை மன்னவனின் ஆட்சி சிறிது நேரமே எனினும், பகலெல்லாம் பாடுபட்டுப் பரிதவித்த மக்களுக்கு மட்டற்ற மனமகிழ்ச்சி; வாலிபர்களுக்கும் மங்கையர்களுக்கும் மஞ்சள் வெய்யில் நேரமும், மனோகரமான மாலை வேளையும், மலர்ச்சோலையும், கடற்கரையும் போன்று உள்ளங் கவரும் பொருள்கள் உளவோ? மஞ்சள் வெய்யில் வீசும் மாலை நேரத்திற்குப்பின் மதியொளி வீசும் இரவு வருவதுண்டு அல்லது இருளடர்ந்த இரவு வருவதுண்டு. தட்பவெப்பம் சரிசமமா யமைந்த ஒரு நாளின் நடுப்பாகமாகிய மஞ்சள் வெய்யில்

வீசும் மாலைப் பொழுது போன்ற மிகமிக மகிழ்ச்சிக்குரிய காலம் ஒவ்வொரு மனிதன் வாழ்விலும் இருந்தே தீரும். அத்தகைய மகிழ்ச்சி ததும்பும் வாழ்நாளில், அம்மனிதன் முன்னிருந்த நிலைமையை மறந்து இறுமாந்து திரியலாகாது; இன்னபடி இருக்குமென்றறிய இயலாத எதிர்காலத்தின் நிலைமையையுணராமல் கதிகலங்கித் திரிதலும் கூடாது.

செல்வத்தில் மிதந்து வளம் நிரம்பிய வாழ்க்கையை நுகர்தற்கேற்ற வசதிகளுடன் தணிகாசலத்தின் மாளிகையில் அவருக்கு ஒரே மகளாய்ப் பிறந்த புகழேந்தியின் இப்பொழுதைய நிலை என்ன? அன்னை இறந்தாள்; சிற்றன்னை வந்தாள்; தகப்பனார் இறந்தார்; தகப்பனாருடைய வழிவழி வளர்ந்த சொத்துக்கு நான் நீ என்ற போட்டி ஏற்படலாயிற்று; “புகழேந்தியும் சரியான வாரிசு இல்லை; வழக்காடும் எவரும் சரியான வாரிசு ஆகார்; எனவே இந்தச் சொத்து முழுதும் எங்களுக்கே” என்று அரசாங்கமே தீர்ப்பு அளித்துவிட்டு எப்பொழுதோ தயாராயிருந்தது. நிற்க,

திருநெல்வேலிக்கு நேர் கிழக்கே யுள்ளது திருச்செந்தூர். அது ஓர் கடற்கரைப் பட்டினம். திருநெல்வேலியிலிருந்து திருச்செந்தூருக்குச் செல்லும் புகைவண்டி வழியுண்டு. அவ்வழியின் நடுவில் திருவைகுந்தம் என்றொரு நிலையம் இருக்கிறது. இத்திருவைகுந்தம் மண்ணுலகத்தில் உள்ளதுதான். விண்ணுலகத்தில்உள்ளதில்லை. சிவநேயர்கள் இவ்வூரைக் கைலாயபுரம் என்று அழைக்கிறார்கள். தண்பொருநைத் தடங்கரையில் இதுஓர் முக்கியமான பட்டணம். நடுப்பகல் நேரத்தில் இந்நிலையத்தில் புகைவண்டி வந்து நின்றது. முதல் வகுப்புப் பிரயாணி—ஒரே ஒரு பெண் வண்டியிலிருந்து இறங்கினாள். நல்ல சிவப்பு நிறம் என்று சொல்வதற்கில்லை; மாந்தளிர் நிறம். ஒல்லியான உடல்; உயரமான தோற்றம். கல்லூரி மாணவி போன்று காட்சியளித்தாள். கையிலே தோல்பை; காலில் மெல்லிய செருப்பு. வண்டியிலிருந்து அவள் இறங்கியதும் கூலியாள் ஒருவன் ஓடிவந்து வண்டிக்குள் இருந்து ஓர் அழகிய தகரப் பெட்டியை யிறக்கி அந்தப் பெண்ணைப் பின் தொடர்ந்தான். அவள் சடக்கென்று நிலையத்திற்கு வெளியே வந்து, மாட்டு வண்டியொன்றில் ஏறினாள். கூலிக்காரன் பெட்டியைக் கொண்டு வந்து வண்டியில் வைத்துவிட்டு, அவள் கொடுத்த காசை வாங்கிக் கொண்டு வணக்கம் செலுத்திப் போய்விட்டான். வண்டியிலிருந்த பெண்மணி, வண்டிக்காரனிடம், “வடக்குத்தெரு குப்புசாமிக் கவிராயர் வீடு” என்றாள். சிறிது நேரத்தில் வண்டி குறிப்பிட்ட இடம் போய்ச் சேர்ந்தது. அந்த வீடு பூட்டிக் கிடந்தது. அடுத்த வீட்டிலிருந்து வெளியே வந்த ஒரு கிழவர், “நீங்கள் யார் அம்மா! கவிராயர் இறந்து நாற்பது நாளாயிற்றே” என்றார்.

[தொடரும்.]



# உரையாணி

## கலைக் களஞ்சியம்

வேறு எந்த இந்திய மொழியிலும் இதுகாறும் கலைக் களஞ்சியம் தோன்றவில்லை. அயல்நாட்டு மொழிகள் பலவற்றிலும் இதுபோன்று இன்னும் தோன்றவில்லை. தமிழ் மொழியில் சிறந்த முறையில் கல்வி அமைச்சர் கலைக் களஞ்சியத்தை வெளியிட முன் வந்துள்ளார். மிகவும் பாராட்டத்தக்க செய்தி.

வெவ்வேறு வகையான 32 தலைப்புகளில் அரும்பெரும் பொருள்கள் நிரப்பி அழகான முறையில் 20 பக்கம் கொண்ட அறிமுக மலர் ஒன்று வரப்பெற்றோம். நன்றாயமைந்திருக்கிறது என்பதற்கு ஐயமில்லை. தமிழர்களனைவரும் இச் செயற்கருஞ் செய்கையில் கல்வி அமைச்சர்க்குத் துணை புரிவார்களாக!

## கலைக் கதிர்

அழகிய திங்கள் வெளியீடு.

ஆசிரியர். திரு.

G. R. தாமோதரன் B. Sc.

பூளைமேடு, கோயமுத்தூர்.

ஆண்டுக் கட்டணம் ரூ 6-0-0.

பொருள் நிறைந்த கட்டுரைகளும் அறிவு பரப்பும் கதைகளும் புலமை மிக்கதக்கார்களால் எழுதப்படுகின்றன. கலைநலமும் கண்கவர் வனப்பும் கட்டுரை நயமும் திகழ்கின்ற இவ்விதழ் எல்லா நலமும் பெருகிப் பொலிவதாக.

## துடிப்புள்ள இளைஞன்

நியூ இந்தியா புக் ஹவுஸ்,

இராமச்சந்திரபுரம்,

(திருச்சி ஜில்லா.)

விலை அணா 0-4-0.

வருங்கால வீரர்களும், வீராங்கனைகளுமாகிய இளைஞர்களுக்கு அறிவூட்ட அன்புப் பழம் நீ இன்பப் புலவர் பலர் கருத்தும் சொல்லும் கலந்து தொகுத்து இதனை ஓர் அறிவுப்புதுமலராகத் தந்துள்ளார். இளைஞருக்கு இன்றியமையாத நூல்.

## மெய்ஞ்ஞானத் : : : : திறவுகோல்

ஞானக்கோடி பாவா இயற்றியது

பற்றற்ற உள்ளத்தின் ஏற்றமும் தேற்றமும் எடுத்துக் காட்டிப் பலவகை இனிய பாடல்களால் இயன்ற இந்நூல் படிப்பதற்கு எளிதாயிருக்கிறது. அழகாய் அமைந்திருக்கிறது. விலை ரூ 1-4-0.

சல்வத்தியா ஞானாச்சிரமம்,

நம்புதாளை P. O.

இராமநாதபுரம் ஜில்லா.

**திருக்குறள் கதைகள்:-**

இரண்டாம் பாரம் அல்லது ஏழாவது வகுப்பிற்கு உரியது.

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், சென்னை.

விலை அணு 8.

கதைகளைக் கூறி அதன் வழியே திருக்குறளைப் பயிற்றுவிக்கும் முறை இளைஞர் உள்ளத்திற்கு ஏற்றது. வித்துவான் சேது சுப்பிரமணியம் அவர்கள் முன் ஆறுவது வகுப்பிற்குரிய 50 குறட்பாக்களுக்கு எழுதியது போல, ஏழாம் வகுப்பிற்குரிய அறுபது குறட்பாக்களுக்கு ஏற்ற எளிய இனிய நடையில் அழகாகக் கதைகள் எழுதிக் குறட்பாக்களுக்கும் பதவுரை கருத்து கேள்வியும் கொடுத்துள்ளார். பாடசாலைகளில் இப்புத்தகம் ஆதரிக்கப் பெறுதல் அவசியம்.

**கவிக் கன்னி**

கவிஞர். அ. இளங்கோவன்
கவிக்கன்னி நிலயம்,
கடலை. P. O. கோயில்பட்டி.

| | |
|---|---|
| தனி இதழ் | 0—2—0 |
| ஆண்டுக் கட்டணம் | 2—0—0 |

தமிழ்ப் பாட்டு, நோபல் பரிசு பெறும் பொன்னுளை எதிர் நோக்குகிறாள் கவிக்கன்னி. கன்னியாயினும் கவிஞர் பலரைப் பெற்றிருக்கிறாள். எளிய இனிய நடையில் இசைந்த பாடல்கள் அணி செய்கின்றன. தமிழ்நாடு மகிழ்ச்சியுடன் வரவேற்கக் கூடிய கவிதை இதழ்.



## தி இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்: இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
வடக்கு பீச் ரோடு, மதராஸ்.

மதராஸ் ஆபீசுகள்:- எஸ்பிளனேட், எழும்பூர். திருவல்லிக்கேணி, மவுண்ட் ரோடு, மயிலாப்பூர், ராயப்பேட்டை, தியாகராய நகர், புரசைவாக்கம் & ராயபுரம்.

சென்னை ராஜதானியின் எல்லா இடங்களிலும், பம்பாயிலும் கிளைகளும் சப் ஆபீசுகளும் உண்டு.

அயல் நாடு கிளைகள்:- கோலாலம்பூர், பினுங்கு, சிங்கப்பூர்.

| | |
|---|---|
| வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூ. 72,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் | ரூ. 53,00,000 |
| ரிஸர்வ் நிதி | ரூ. 62,00,000 |

சகலவிதமான பாங்கிங் அலுவல்களும் ஏற்கப்படும்.
விபரங்களுக்கு பாங்கின் எந்த ஆபீசுக்காவது விண்ணப்பிக்க.

**என். கோபால அய்யர்,** காரியதரிசி.



## விளையாட்டும் மேலணியும்

விளையாட்டில் கவனமும் உத்ஸாகமும் தொடர்ந்துகாண ஆட்டக்காரரின் மேலணி சௌகரியமாகவும் அவர்களின் தேக சீதோஷ்ண நிலையை பாதிக்காமலும் உறுத்தாமலும் இருக்க வேண்டும். எம். ஸி. எச். ஜவுளி வகைகள் தயாரிப்பில் இந்த அம்சங்கள் பிரத்யேகமாகக் கவனிக்கப்படுகின்றன.

**மதராஸ் கைத்தறி நெசவாளர் மாகாண கூட்டுறவு சங்கம் லிமிடெட்**
“ஹாலோவேஸ் கார்டன்ஸ்”
**34,** பாந்தியன் ரோட், எழும்பூர்—சென்னை.



நவ நாகரீகமான நகைகள்! ஒரு சிரமமுமில்லாமல் உடனே வாங்குவதற்கு நம்பிக்கையுள்ள இடம்

## ★ மணி மாளிகை ★

மு. சுப்பிரமணியன் செட்டியார்,
**ஆயத்த அணிகல அங்காடி.**
வடக்கு ரத வீதி, :: திருநெல்வேலி.

மணமக்களுக்கும், குழந்தை பிறப்பு முதல் எல்லாச் சிறப்புகளுக்கும் வேண்டிய தங்க நகைகள், கல் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள், வெகுமதிச் சாமான்கள் முதலியன புத்தம் புதியமாதிரிகளில் எப்பொழுதும் விற்பனைக்கு ஆயத்தமாக இருக்கின்றன. உங்கள் தேவைக்கு உடனே வந்து பார்த்து வாங்கி மகிழுங்கள்.

உத்திரவாதம் எமது T. M. S. முத்திரை.

ஆரம்பம்: **1913** :: தந்தி: **அணிகலன்**

[illegible] நாழிர்பண்டகசாலை, திருநெல்வேலி சந்திப்பு.


சென்னை-600 008